Registered as a News Paper in Sri Lanka

பக்கம் 20

ரூபா 14/00

දිනමුරසු වාරමලර් ஆக.11-17, 2002

# வாரமலர் தினமுரசு

THINAMURASU SRI LANKA'S NATIONAL TAMIL WEEKLY முரசு 472

## அதிகரிக்கும் அதிகாரப் போட்டி

## ஹக்கீமை நோக்கி வீசிய வலை

## முடிவு என்ன



## முரளியை விலக்க சதி

## தர்மம் என்பது...

கடும் மழை. பிராமணன் ஒருவன் தன் தந்தையின் உடலைத் தகனம் செய்வதற்குச் சந்தன விறகு தேடி எல்லா இடத்திலும் அலைந்தான். கிடைக்கவில்லை. உடனே அவன் கிருஷ்ணபகவானிடம் சென்று கேட்டான். அவர் "தர்மனிடம் அல்லது கர்ணனிடம் போய்க்கேள்" என்று கூறினார். "தர்மம் செய்வதில் நானே பெரியவன்" என்று நினைத்திருந்த தர்மனிடம் பிராமணனும் விடயத்தைக் கூறிக் கேட்டான். தர்மன் "மன்னித்துவிடு பிராமணனே! இந்த மழையில் காய்ந்த விறகுகள் கிடைக்கவில்லை" என்றான். கர்ணனிடம் பிராமணன் சென்றான். உடனே அவர் கதவு நிலைகளை உடைத்துப் பிராமணனின் தேவையைப் பூர்த்தி செய்தார். தர்மம் செய்யும்போது, நான் செய்கிறேன் என்ற ஆணவம், பெருமை, வெளிக்காட்டல் என்பன அகற்றி, இடது கையால் கொடுப்பது வலது கைக்குத் தெரியக்கூடாது. எப்போதும் தர்மம் வெல்லும். கொடை இந்து தர்மத்தின் இறைவன் சேவை.

சுபாஷ் சந்திரபோஷ், ஹப்புத்தளை.

# ஆன்மீகம்



## இயேசுவில் மட்டுமே விசுவாசமாயிருங்கள்

"இலாசர் இறந்தபோது இயேசு கண்ணீர் விட்டு அழுதார்" (யோவான் 11-35)

இந்த இலாசரின் சகோதரிகள் மரியாளும், மார்த்தாவும் இயேசுவில் அளவு கடந்த அன்புள்ளவர்கள். இந்த அன்பினால்தான் மரியாள் நறுமணத் தைலம் பூசி இயேசுவின் பாதங்களைத் தன் கூந்தலால் துடைத்தாள். இலாசர் நோயுற்றிருந்தபோது சகோதரிகள் ஆள் அனுப்பியும் இயேசு அங்கு போகவில்லை. ஏனெனில் இலாசர் மரித்துப் போனாலும் பிதாவின் வல்லமையோடு அவனை உயிர்ப்பிக்க முடியும் என்பதை உணர்ந்தவராயிருந்தார். இலாசர் மரித்து அடக்கம் செய்யப்பட்ட நான்காவது நாள் இயேசு பெத்தானியாவின் அருகே வருவதையறிந்த மார்த்தா எதிர்கொண்டு போய் இயேசுவிடம், "நீர் இங்கு இருந்திருந்தால் இலாசர் மரித்திருக்க மாட்டான். அத்தோடு நீர் இப்போது கடவுளிடம் கேட்பதையெல்லாம் அவர் உமக்குக் கொடுப்பார் என்பது எனக்குத் தெரியும்" என்று கூறி அனைவரும் அழுவதைக் கண்ட இயேசுவும் கண்ணீர் விட்டு அழுதார். பிதாவின் வல்லமையோடு மரித்துப்போன இலாசரை உயிர்ப்பித்தார்.

பார்த்தீர்களா? எமக்காக கண்ணீர் விட்டு அழும் அளவிற்கு எம்மீது அன்பு கொண்டுள்ளார். ஆனால் நாம் என்ன செய்கிறோம்? நம் தினசரி வாழ்வில் எத்தனை தடவை அவரை நமது பாவச் செயல்களால் சிலுவையில் அறைந்து கண்ணீர் சிந்த வைக்கிறோம் என்பதையறிந்து உணர்ந்து சிந்தித்து எம் பாவச் செயல்களை அகற்றி அவரது உண்மையான அன்பைப் பகிர்ந்து இயேசுவோடு இணைந்து வாழ இப்போதே எம்மை ஆயத்தம் செய்வோமாக!

ஜோசப் அருள்சாமி, இரஜவெல்ல.

## தூங்குவதற்கு முன்

தூங்குவதற்கு முன் நபி(ஸல்) அவர்கள் உட்கார்ந்து கொண்டு இரண்டு உள்ளங்கைகளையும் விரித்துக் கொண்டு குல் சூறாக்கள் மூன்றையும் ஓதித் தனது உடலில் மூன்று தடவை தடவிக் கொள்வார்கள். அத்துடன் படுக்கைக்குச் செல்லும்போது ஆயத்துல் குர்ஸி அல்லது சூறா பகறாவின் கடைசி இரண்டு வசனங்களை ஓதுவாராயின் அது அவருக்குப் போதுமானது. உங்களில் ஒருவர் படுக்கையில் இருந்து எழுந்து மீண்டும் படுக்கைக்குச் செல்வாராயின் தனது விரிப்பை மூன்று தடவை உதறிக் கொள்ளவும். ஏனெனில் அவரது இடத்தில் எதுவெல்லாம் வந்துள்ளது என்பதை அவர் அறியார்.

தூக்கத்தில் நாம் கனவு காணும்பொழுது நல்ல கனவு இறைவனிடம் இருந்து ஏற்படுகிறது. கெட்ட கனவு ஷைத்தானிடம் இருந்து ஏற்படுகிறது. கெட்ட கனவு கண்டவுடன் இடது பக்கம் மூன்று தடவை துப்ப வேண்டும். ஷைத்தானைவிட்டும் இந்தக் கெட்ட கனவை விட்டும் மூன்று தடவை இறைவனிடம் பாதுகாப்பு தேட வேண்டும்.

தஸ்னீம் ஹமீட்- கல்முனை-07.

## கவிதைப் போட்டி இல.469

### பரிசுக்குரிய கவிதை

### அன்மை மடி

அன்னை முகம் காணாது
அன்னை மடி தூங்காது
அன்னையே யாரென அறியாது
அல்லலுறும் இப் பிஞ்சின்
கன்னமது பதித்திருக்கும் கல்கூட
இவன்(ள்) எண்ணப்படி
அன்னை மடி போல அமைந்து
விட்டதோ?

கே.சிறிகாந்த் - யாழ்ப்பாணம்.

### இடம் உள்ள வரை இடம் பிடித்துள்ள வியக்க வைத்த கவிதைகள்



### ஈன்ற தாயிருந்தால்...

மரணித்துப் போன இவ்வுலகில்
கழிக்கும் இடமே
மஞ்சமாகி விட்டதோ? பாவம்
ஈன்ற தாய் இருந்திருந்தால்
இந்த நிலை வந்திருக்குமோ
இச்சிறுவனுக்கு.

ராமச்சந்திரன் நவேந்திரன்- ஹாலிஎல

### விழித்தால் புரியும்

வெட்ட வெளியில் கழித்த காலம்
போய்விட்டதென்று தீருப்தி கண்டாய்
திரை மறைவில் கழிக்கின்றேன்
என்று துயில் கொண்டாய்
விழித்துப் பாரடா குழந்தாய்!
புரிந்து கொள்வாய்,
நீ எந்நிலையில் என்று

ஏ.எஸ் அஹமட் சியாத்- நிந்தவூர்.

### மேனாட்டு மோகம்!

அன்னை மடிதனிலே
கழிக்கும் மழலைதனை
நாகரிக மோகங்கொண்டு
மேனாட்டு மாந்தர் போல்- பளிங்கு
கோப்பையில் அமர வைக்க
ஒன்றுமறியா பிஞ்சதுவும்
தொட்டில்தான் என்றெண்ணி
துயில் கொண்டு விட்டதுவோ!

க.யோகேஸ்வரன்- கஹகல்லையூர்.

### எயிட்ஸின் தாக்கமோ!

தொட்டிலிடவோர்
அன்னையில்லை- பால்
புட்டியில் தரவும்
தந்தையில்லை!
கட்டிலில்லா சோகத்தில்
சட்டிப் பையனிங்கு
சுருண்டு கிடப்பதேன்
கழிவறையில்!

துரைராஜ், பிரபாஹர்- ஹப்புத்தளை.

### நிலை அறியாமை

தரணியில் நவீன கண்டுபிடிப்பு
நீ என்ன பட்ட பிடிப்பு
இது வெட்கமாயிருக்கே!
நான் எங்கிருக்கிறேன்
என்னிலையிலிருக்கிறேன்
என்னிலையறியா நீ
சந்தைப்படுத்தி விட்டாயே!

தி.நிர்மலராஜன்-திகன.

### உண்ணாவிரதி

கழுத்துறையில் பிறந்த சிசு
கதறி அழும் காட்சி இது
அழுதடங்கிய போதும்
ஆறவில்லை ஆதங்கம்
கைதறுக்கும்வரை கழிவறை உண்ணாவிரதம்

வரதராஜன் பாலமுரளி- கொக்குவில் கிழக்கு.

### என்றும் இருளில்

ஓ இவனுமோர் தமிழனோ
இருந்த இடமெல்லாம்
பறிபோய் இறுதியில்
கரு வறைக்கடுத்தபடியாக
கழிவறையில் தூங்குகிறான்
பாவம்

என். இந்துமதி- வவுனியா.

### கனவு

கலைந்திடும் என்பதாலா
கழிப்பறையிலும் - உன்
கள்ளமில்லா உள்ளம்
கனவுகளைக் காண்கின்றது

அப்புத்தளையூர்,
செ.அன்பழகன்.

## கவிதைப் போட்டி இல.472



எண்ணத்தில் தோன்றும் கவிதைகளை வார்த்தைகளின் எண்ணிக்கை அதிகமில்லாமல், தபாலட்டையில் மட்டும் பதிவு செய்து அனுப்பி வையுங்கள். அனுப்பப்படவேண்டிய கடைசித் திகதி: 17.08.2002

கவிதைப் போட்டி இல.472
தினமுரசு வாரமலர், த.பெ. இல-1772, கொழும்பு.

### (சு)தந்திர நாடு

உண்டதை உறங்கிக் கொண்டே
கழிக்கிறது இதுவல்லவா
சுதந்திர நாடு!
பிறந்ததை போர் முனையில்
அழித்துக் கொண்டே போகிறது
நமது தந்திர நாடு!

நா.நிரோஸ்- அக்கறைப்பற்று.

### உறக்கத்தில் நீ மட்டுமல்ல...

உலகம் உள்ளங்கைக்குள்
வாழ்க்கை
வசப்பட்டு...
சுகாதாரம்
சுருங்கிவிட்டது...! இங்கிதத்துக்குப்
பங்கம்!
நீ தூங்கு கண்ணே!!
உன் தூக்கத்திலா
இவ்வுலகம் விழித்துக்
கொள்ளப் போகின்றது.
இதைத்தான்
உலகம் எப்போதோ
செய்து கொண்டிருக்கின்றதே...!!

எஸ்.ஏ.எம். நிலாம்- காரம்பை.

### தூ(தா)க்கம்!?

அவசியத் தேவையிலும்
அனாவசியத் தூக்கம்!
சில- அலுவலகங்களின்;
நடைமுறைத் தாக்கம்!

கோட்டைமுனை
'முத்துமணி', பதுளை.

### பெற்றோருக்கு!

பார்ப்பவர் கண்களில்
பரிகாசம்! பாவம்
இவன் செய்தி கேட்டால்
மனதில் வரும் பரிதாபம்!
"உரிய நேரத்தில் பணம்
வராவிட்டால் உயிர்
போகும் உனே"
கடத்தல் காரர்களிடமிருந்து...

ஏ.எப்.எம்.றியாட்- முள்ளிப்பொத்தானை.

### இயற்கை!

பஞ்சு மெத்தை தூக்கம்!
இவனுக்கு!
பகையை பாராட்டியதால்!
கழிவறை வரை கூடம்...!
இங்கே!
கண்ணுறங்க வைத்ததோ?

ஹப்புத்தளையூர்,
மனோ கோபாலன்.

# உங்கள் பக்கம்

## ஒரு சிலருக்கு மட்டும் ஓரவஞ்சனை

பல்கலைக் கழகக் கல்வியை நிறைவு செய்து நீண்ட காலம் காத்திருந்தவர்கள்அண்மையில்தான் 3ஆம் வகுப்பின் 1ஆம் தரத்தில் ஆரம்பக் கல்வி ஆசிரியர்களாக நியமனம் செய்யப்பட்டனர். அம்பாறை மாவட்டத்தில் 139 பேர் இவ்வாறு நியமனம் செய்யப்பட்டனர். இவர்கள் பெரும்பாலும் அயல் கிராமங்களில் நியமனத்தினைப் பெற்றுள்ளனர். சம்மாந்துறையைச் சேர்ந்தவர்கள் இறக்காமத்திற்கும், அக்கரைப்பற்றைச் சேர்ந்தவர்கள் பொத்துவிலுக்கும், மருதமுனையைச் சேர்ந்தவர்கள் நாவிதன் வெளிக்கும் நியமனம் செய்யப்பட்டனர்.

இதில் ஒரு வேதனை என்னவென்றால் கல்முனைக் கோட்டத்தைச் சேர்ந்த ஒரு சிலரை இறக்காமத்திற்கு நியமித்துள்ளனர். இவர்கள் 40 கிலோ மீற்றர் தூரம் பிரயாணம் செய்ய வேண்டும். இரண்டு, மூன்று பஸ் வண்டிகளில் சென்று மேலதிகமான தூரத்தை நடந்தும் செல்ல வேண்டியுள்ளது. இவ்வாறு பயணம் செய்வதனால் மாணவர்கள்,ஆசிரியர்கள் ஆகியோரின் கற்றல்,கற்பித்தல் செயற்பாடுகள் இயல்பாகப் பாதிக்கப்படலாம். அனேகமானோரைக் கிட்டிய தூரத்தில் நியமித்து ஒரு சிலரை மட்டும் வெகு தொலைவில் நியமிப்பது நியாயமில்லையே.

இதே நேரம் கல்முனைக் கோட்டத்தில் உள்ள பாடசாலைகளில் ஏராளமான ஆசிரியர் வெற்றிடங்கள் காணப்படுகின்றன. ஏன் இவர்களின் சேவையை இந்தப் பகுதி பெற்றுக் கொள்ள முடியாதா? எனவே நிரந்தர நியமனத்திற்குள் இவர்களின் இத்தகைய பிரச்சனைகள் கவனத்தில் எடுக்கப்படல் வேண்டும்.

மருதூர் இம்தி, கல்முனை.

## குறைந்த விலை முத்திரைகள் கிடைப்பதில்லை

சீனன்குடா உட்பட திருகோணமலையில் உள்ள தபால் கந்தோர்களில் 50 சதம், -1 ரூபா போன்ற குறைந்த பெறுமதியுள்ள முத்திரைகளுக்குத் தட்டுப்பாடு நிலவுகின்றது. இதனால் மக்களுக்குப் பெரும் சிரமம் ஏற்படுகின்றது. 4.50 முத்திரை ஒட்ட வேண்டிய ஒருவர் 5 ரூபா கொடுத்தால் மிகுதி 50 சதம் இல்லை என்று கை விரிக்கின்றார்கள். அந்த 50 சதத்துக்கு முத்திரை தரும்படி கேட்டாலும் அதுவும் இல்லை என்றுதான் பதில் கிடைக்கின்றது. 4.50 முத்திரையில் கடிதம் அனுப்பும் ஒருவர் ஒன்றில் 5 ரூபா முத்திரை ஒட்ட வேண்டும். இல்லையேல் 50 சதத்தை இழக்க வேண்டும். இது குறித்துச் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் கவனம் செலுத்துவார்களா?

க.தங்கராசா, திருகோணமலை.


மடல்கள் மற்றும்
ஆக்கங்கள்- உட்பட சகல
தொடர்புகளுக்கும்:
தினமுரசு வாரமலர்,
த.பெ.இல:-1772, கொழும்பு.
தொலைபேசி: 074-514282
தொலை நகல் (Fax):-074-513266
ஈ-மெயில்: (E-mail):-
murasu@dialogsl.net
edmurasu@dialogsl.net


# வாசகர் சாலை



**இனிய முரசே!**

முரசில் பற்பல ஆக்கங்கள் புதிது புதிதாய் வருவதையிட்டு பெரு மகிழ்ச்சியடைகின்றேன். "பார்த்த ஞாபகம் இல்லையோ" என்ற தொடர் மிக நன்றாக உள்ளது. பழம் பெரும் நடிக நடிகைகளைப் பார்க்கும் போது மனம் குளிர்கின்றது. இத் தொடர் நன்றாக அமைய வாழ்த்துகின்றேன். மற்றும் பத்தாவது ஆண்டு நிறைவில் புதிய ஆக்கங்களுடன் முரசு வெளிவரும் எனக் காத்திருக்கின்றேன்.

நிதிபன், யாழ்ப்பாணம்.

அன்பின் முரசே!

தமிழில் மாறுக் கருத்துக்களுடன் வலம் வரும் உன் வளர்ச்சி பாராட்டுக்குரியது. ஒரே திசையில், ஒரு பக்கச்சார்பான செய்திகளை வாசித்துப் புளித்துப்போன தமிழ் வாசகர்களுக்கு இலங்கை அரசியலின், போராட்டத்தின் முழுபக்கத்தைத் தெளிவாக எடுத்துக்கூறும் உன் பணி மேலும் தொடர வாழ்த்துக்கள்.

ஆர்.ராகுலன், ஸ்காப்ரோ, கனடா.

**அன்பின் முரசே!**

பத்தாவது அகவையில் வெற்றியுடன் கால்பதிக்கும் எமது அன்பு முரசிற்கு எமது குடும்பத்தின் சார்பில் நல்வாழ்த்துக்கள் தெரிவித்துக் கொள்கின்றேன். எத்தனை தடைகள் வந்தும் யாருக்கும் அஞ்சாமல் உனது பணி தொடர்கின்றது. உன்னில் வரும் அனைத்து அம்சங்களுமே தரமானவையும் திறமானவையுமே! எனவேதான் இலட்சோப லட்சம் வாசகர்களின் மனங்களில் இடம் பிடித்திருக்கின்றாய். யாருக்கும் அஞ்சாமல் சகலரது குறைநிறைகளையும் வெளிச்சத்துக்குக் கொண்டு வரும் உனது சேவைக்கு நிகர் வேறு யாரும் இல்லை.

வெளிநாடுகளில் நாம் வாழ்ந்தாலும் தினமுரசு ஒன்றின் மூலமே எமது நாட்டின் உண்மை நிகழ்வுகளை அறிய முடிகின்றது. எமது அன்பு முரசே! உனது சேவை முடிவிலி போல் தொடர வேண்டும். அத்துடன் தினமுரசு ஆசிரியர் கூடத்திற்கும் நன்றி.

எம்.எஸ். குமார், ஜேர்மனி.

கனம்! முரசு ஆசிரியர் அவர்கட்கு,

உங்கள் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட ஆக்கங்கள் மிக நன்று. எங்கள் அனைவரினதும் வேண்டுகோளுக்கிணங்க மக்கள் திலகம் எம்.ஜி.ஆர் அவர்களின் வாழ்க்கை வரலாற்றையும் அவர் நடித்துள்ள படங்களின் எண்ணிக்கைகளையும் பட வரலாற்றையும் முரசின் தொடர்கதையாகத் தருவீர்களா? நடிகர் திலகம் சிவாஜி கணேசன் அவர்களின் சினிமா வரலாற்றையும்தொடர்ச்சியாகத் தருவீர்கள் என மிக ஆவலுடன் எதிர்பார்க்கிறோம். 'பராசக்தி' தொடக்கம் 'படையப்பா' வரையுள்ள அவரின் நடிப்புத் திறமைகளை அறிய மிக ஆவலுடன் எதிர்பார்க்கிறோம்.

எம்.ஜி.ஆர் அவர்களின் சதிலீலாவதி தொடக்கம் மதுரையை மீட்ட சுந்தரபாண்டியன் வரையில் உள்ள நடிப்புத் திறமைகளை அறிய மிக ஆவலுடன் உள்ளோம். நாங்கள் தரும் இவ் வேண்டுகோளை முரசின் வெளியீட்டில் தருவீர்கள் என்று எதிர்பார்க்கின்றோம்.

ஐ.சிங்கராசா, க.சுந்தரம்,
சி.தாசன், தி. முருகானந்தம்.

# தேர்தலைச் சந்திப்பதே சிறந்தவழி-பிரதமர்

## ஜனாதிபதியால் மட்டுமே பாராளுமன்றத்தைக் கலைக்க முடியும்–பொ.ஐ.மு.

**த**ற்போது தோன்றியிருக்கும் அரசியல் நெருக்கடியைத் தீர்க்க பொதுத் தேர்தல் ஒன்றுக்கு முகம் கொடுப்பதே பொருத்தமான வழியெனப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்திருக்கும் அதேவேளை தேர்தல் ஒன்றை எதிர்கொள்ளும் நிலையில் நாட்டின் பொருளாதாரம் இல்லை என்பதால் அரசியல் அமைப்பு ரீதியில் வழங்கப்பட்டுள்ள ஏனைய திட்டங்களைப் பயன்படுத்தி அரசாங்கத்தைக் கைப்பற்ற முயற்சி செய்வதாக பொதுஜன ஐக்கிய முன்னணி அறிவித்துள்ளது.

தற்போதைய நிலையில் பாராளுமன்றத்தைக் கலைத்து மீண்டும் பொதுத் தேர்தல் ஒன்றை நடத்துவதே சிறந்தவழி எனப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஐ.தே.க. பாராளுமன்றக் குழு மத்தியில் கோரியிருக்கிறார்.

ஆனால் பிரதமருக்குப் பாராளுமன்றத்தைக் கலைக்கும் அதிகாரம் கிடையாது எனத் திட்டவட்டமாகக் கூறியிருக்கும் பொ.ஐ.மு.யின் பேச்சாளர் கலாநிதி சரத் அமுனுகம, பாராளுமன்றத்தைக் கலைக்கும் அதிகாரமுள்ள ஒரே நபர் ஜனாதிபதி மாத்திரமே என்று கூறினார். தாம் கூடிய விரைவில் அரசியல் அமைப்பு ரீதியில் அரசாங்கத்தைக் கைப்பற்றுவதாகத் தெரிவித்த சரத் அமுனுகம நாட்டின் பொருளாதார நிலை தேர்தல் ஒன்றை நடத்த உகந்ததாக இல்லை எனவும் கூறியிருக்கிறார்.

### சமுர்த்தி உதவி வழங்குவதில் பாரபட்சம்

## வவுனியாவில் எதிர்ப்புப் பேரணி

**ச**முர்த்தி முத்திரைக் குறைப்பை எதிர்த்தும் தென்பகுதி மக்களுக்கு வழங்குவது போன்று அதன் சலுகைகள் வட கிழக்கு மக்களுக்கும் வழங்கப்பட வேண்டும் என்றும் அத்துடன் சமுர்த்தி வங்கியூடாக கடன் வசதிகள் செய்து தரப்பட வேண்டும் என்று கோரி கண்டனப் பேரணி ஒன்று கடந்த 31 ஆம் திகதி புதன்கிழமை வவுனியாவில் நடைபெற்றது. இப் பேரணியில் மூவாயிரத்திற்கும் மேற்பட்ட சமுர்த்தி உதவி பெறும் குடும்பங்கள் பங்கு கொண்டன.

வவுனியா நகரசபை பகுதியில் பழைய பொழுது போக்கு கழக மைதானத்தில் ஆரம்பமாகிய இப் பேரணி நகர வீதியூடாக வவுனியா செயலகத்தில் முடிவடைந்தது.

சமுர்த்தி உதவிகளைக் குறைப்பதை எதிர்க்கும் கோஷங்களுடன் எதிர்ப்பு சுலோகங்கள் எழுதப்பட்ட அட்டைகளை பேரணியில் கலந்து கொண்ட மக்கள் ஏந்திச் சென்றனர்.

வவுனியா மாவட்ட செயலகத்தில் மேலதிக அரசாங்க அதிபர் எஸ். இரகுநாதபிள்ளை தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் பேரணியின் அமைப்பாளர் கே. ஆனந்தராஜா சமுர்த்தி உதவி பெறும் குடும்பங்கள் எதிர்நோக்கும் பிரச்சனைகள் பற்றி எடுத்துரைத்தார். மேலும் அவர் தனதுரையில் சமுர்த்தி திட்டம் எந்த ஏழை மக்களுக்காக உருவாக்கப்பட்டதோ அதே ஏழை மக்கள் முத்திரைக் குறைப்பால் பாதிக்கப்பட்டுள்ளனர் என்றும், தென்பகுதிக்கு வழங்குவது போன்று எமக்கும் 1000 ரூபா, 700ரூபா, 500ரூபா வழங்கப்பட வேண்டும் என்றும், 400 ரூபா, 350 ரூபா, 250 ரூபா என்று தரம் பிரித்து எமக்குத் தனியான முறையில் குறைந்த தொகை கொண்ட முத்திரைகள் வழங்குவது வேதனைக்குரிய விடயம் என்றும் தெரிவித்த அவர் அரசின் இச் செயல் எந்த வகையில் நியாயமானது எனவும் வினா எழுப்பினார்.

### பாதுகாப்பு அமைச்சருக்கு எதிராக நுஆ நம்பிக்கையில்லாப் பிரேரணை

## ஹக்கீம் சங்கடத்தில்

**பா**துகாப்பு அமைச்சர் திலக் மாரப்பனவுக்கு எதிராகப் பொதுஜன ஐக்கிய முன்னணி சார்பில் தேசிய ஐக்கிய முன்னணியினால் (நுஆ) பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவிருக்கும் நம்பிக்கையில்லாப் பிரேரணை ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவரும் அமைச்சருமான ரவூப் ஹக்கீமைச் சங்கடத்தில் ஆழ்த்த மேற்கொள்ளப்படும் அரசியல் நோக்கம் கொண்ட செயல் என்று சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

அண்மையில் கிழக்கு மாகாணத்தின் வாழைச்சேனையில் இடம்பெற்ற வன்முறைச் சம்பவங்களின் போது பாதுகாப்புத் தரப்பினர் நடந்து கொண்ட விதம் குறித்து அதிருப்தி தெரிவித்துப் பாதுகாப்பு அமைச்சர் திலக் மாரப்பனவுக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணை ஒன்றைச் சமர்ப்பிக்கத் திருமதி ஃபேரியல் அஷ்ரப் தலைமையிலான நுஆ தயாராகி வருகிறது. இந்த நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கு ஜே.வி.பி. மற்றும் ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி என்பன ஏற்கனவே ஆதரவு தெரிவித்துள்ளன.

வாழைச்சேனையில் முஸ்லிம்கள் பாதிக்கப்பட்ட சம்பவத்தை மையமாக வைத்தே இந்த நம்பிக்கையில்லாப் பிரேரணை சமர்ப்பிக்கப்படுகின்றது. அதனால் இதனை எதிர்ப்பதில் முஸ்லிம் காங்கிரஸுக்குச் சங்கடங்கள் உண்டு. அதே வேளை அரசாங்கத்தில் அங்கம் வகித்துக் கொண்டே அமைச்சர் ஒருவருக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணையை ஆதரிப்பதிலும் பிரச்சனை இருக்கிறது. இது ஹக்கீமை நோக்கி வீசிய வலை என்று முஸ்லிம் காங்கிரஸ் முத்த உறுப்பினர் ஒருவர் தெரிவித்தார். ■

### புலிகளின் 4 பில்லியன் டொலர் சொத்துக்கள் வெளிநாடுகளில் முடக்கம்

## இலங்கையில் தடை நீங்கினால் மீளப் பெறலாம்

### 'தி எக்கொனமிஸ்ட்' சஞ்சிகை தகவல்

**இ**லங்கை அரசாங்கத்தினால் புலிகள் இயக்கம் மீது விதிக்கப்பட்டிருக்கும் தடை நீக்கப்பட்டால் வெளிநாட்டு வங்கிகளில் முடக்கப்பட்டிருக்கும் அந்த இயக்கத்திற்குச் சொந்தமான பெருமளவு நிதியை அவர்களால் மீளப் பெறக் கூடியதாக இருக்கும் என்று லண்டனில் இருந்து வெளிவரும் 'தி எக்கொனமிஸ்ட்' (The Economist) சஞ்சிகை அதன் கடந்தவார வெளியீட்டில் தெரிவித்துள்ளது.

'The Economist' 150 ஆண்டுகளுக்கும் மேலாக வெளிவரும் உலகப் புகழ்பெற்ற சஞ்சிகை. அதில் வெளிவரும் கருத்துக்கள் சர்வதேச ரீதியில் கவனத்தை ஈர்ப்பவை. இந்தச் சஞ்சிகை அதன் ஜூலை 20-27 ஆம் திகதிய வெளியீட்டில் இலங்கையின் இனப்பிரச்சனை மற்றும் சமாதான முன்னெடுப்புகள் தொடர்பான கட்டுரை ஒன்றை வெளியிட்டுள்ளது.

இலங்கையும் வேறு சில மேற்கு நாடுகளும் பயங்கரவாத அமைப்பாகப் பிரகடனம் செய்து தடை விதித்த புலிகள் இயக்கத்துக்குச் சொந்தமான 4 பில்லியன் டாலர் (3600 கோடி ரூபா) வெளிநாடுகளில் முடக்கப்பட்டுள்ளது. இலங்கை அரசாங்கம் புலிகள் மீது விதித்துள்ள தடையை நீக்கினால் இந்தப் பணத்தை மீளப் பெறும் சாத்தியமிருக்கிறது. இதன் காரணமாகவே தம்மீதான தடையை பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவைக் கொண்டு நீக்குவிக்க புலிகள் கடும் பிரயத்தனம் மேற்கொள்கிறார்கள் என்று அச் சஞ்சிகை தெரிவித்துள்ளது.

தற்போதைய போர் நிறுத்தம் குறித்து கருத்து வெளியிட்டிருக்கும் இந்தச் சஞ்சிகை, கிழக்கில் தமது பிள்ளைகளைப் பறிகொடுத்த தமிழ்த் தாய்மார் தினமும் கதறி அழுத வண்ணம் போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழு அலுவலகங்களுக்கு முறையிட வருவதாக ஸ்கன்டினேவிய கண்காணிப்பாளர் ஒருவரை மேற்கோள் காட்டித் தெரிவித்துள்ளது.

கிழக்கு மாகாணத்தில் முஸ்லிம்களைக் கட்டுப்படுத்தப் புலிகள் எடுத்த முயற்சியே வாழைச்சேனையில் கலவரமாக வெடித்ததென்றும் அந்தச் சஞ்சிகை மேலும் தெரிவித்துள்ளது. ■

## யூ.ரீ.எச்.ஆர். குற்றச்சாட்டு

**போ**ர் நிறுத்தம் அமுலுக்கு வந்த பின்னர் மேற்கொள்ளப்பட்ட மனித உரிமை மீறல் சம்பவங்கள் குறித்த விபரங்களை யாழ். பல்கலைக்கழக ஆசிரியர்களின் மனித உரிமைகளுக்கான அமைப்பு அதன் சமீபத்திய அறிக்கையில் விபரித்துள்ளது.

புலிகளின் வரி அறவீடு, சிறுவர்களைப் போருக்காகக் கடத்திச் செல்லுதல் உள்ளிட்ட பல சம்பவங்களும் உள்ளடக்கப்பட்டு www.uter.org என்ற இணையத்தளத்தினூடாக வெளியிடப்பட்டுள்ளது.

முன்னர் இச்சம்பவங்கள் வதந்திகள் எனப் புறக்கணிக்கப்பட்டு வந்தமை குறிப்பிடத்தக்கது. ■

## சீமெந்து லொறி கடத்தல்

**மு**ஸ்லிம் வர்த்தகர் ஒருவருக்குச் சொந்தமான சீமெந்து லொறியொன்றைப் புலிகள் இயக்கத்தினர் கடத்திச் சென்று சாரதியையும் உதவியாளரையும் கட்டி வைத்துவிட்டு லொறியிலிருந்த 250 சீமெந்துப் பொதிகளை அபகரித்துச் சென்றுள்ளனர்.

ஒகஸ்ட் 02ஆம் திகதி இடம்பெற்ற இச் சம்பவம் பற்றித் தெரியவருவதாவது; மட்டக்களப்புக்கு வடக்கே மட்டக்களப்பு-கொழும்பு பிரதான வீதியில் லொறி வந்து கொண்டிருக்கும் போது சந்திவெளி எனுமிடத்தில் புலிகள் இயக்கத்தினர் லொறியை வழிமறித்தனர்.

மோட்டார் சைக்கிளில் வந்த இருவர் லொறியைச் சித்தாண்டி எனும் ஊர்வரை கொண்டு சென்று சீமெந்துப் பொதிகளை அபகரித்துச் சென்றுள்ளனர்.

சித்தாண்டியில் புலிகளின் அரசியல் பணிமனையிலேயே லொறிச் சாரதியும், உதவியாளரும் கட்டி வைக்கப்பட்டிருந்திருக்கிறார்கள்.

இச் சம்பவம் பற்றி அண்மையிலுள்ள ஏறாவூர் பொலிஸ் நிலையத்தில் முறையிடப்பட்டுள்ளது.

## சிறுவர்களைப் போரில் ஈடுபடுத்துவதைத் தவிர்க்குமாறு ஒலரா ஒட்டுணு கோருவார்!

**ஐ**க்கிய நாடுகள் சபையின் சிறுவர் உரிமைகள் தொடர்பான விசேட பிரதிநிதி ஒலரா ஒட்டுணு விரைவில் இலங்கை வரும்போது புலிகள் இயக்கத்தின் தலைவர்களைச் சந்தித்து சிறுவர்களைப் போரில் ஈடுபடுத்துவதைத் தவிர்க்குமாறு கோருவார்.

1998ஆம் ஆண்டு ஒலரா ஒட்டுணு இலங்கைக்கு விஜயம் செய்த சமயம் புலிகளால் அவருக்கு வழங்கப்பட்ட வாக்குறுதிகள் மீறப்பட்டதாகக் கடந்த காலங்களில் பரவலான குற்றச்சாட்டுக்கள் எழுந்தன.

இந் நிலையில் தற்போது புலிகள் இயக்கத்தில் இணைந்து செயற்படும் 18 வயதுக்குக் குறைந்த சகலரையும் விடுவிக்குமாறு சர்வதேச மன்னிப்புச் சபை மற்றும் "ஹியுமன் ரைட் வொச்"ஆகிய அனைத்துலக மனித உரிமை அமைப்புகள் புலிகளின் தலைமைக்கு அழுத்தங்களைப் பிரயோகிக்கத் தொடங்கியுள்ளன. ■

## வரி செலுத்தக் கடிதம்

**ஏ**றாவூர் ஸ்ரீ பத்திரகாளியம்மன் ஆலய வருடாந்தத் திருவிழா சமீபத்தில் இடம்பெற்றது. இத் திருவிழாவுக்காகக் கிழக்கைச் சேர்ந்த பலர் நாட்டின் நாலா புறங்களிலுமிருந்தும் வந்திருந்தனர். கொழும்பு, புத்தளம் போன்ற நகரங்களில் தங்க நகை வியாபாரம் செய்யும் இக் கோயில் பரிபாலன சபையின் தர்மகர்த்தாக்களும் இத் திருவிழாவுக்கு வந்திருந்தார்கள். அவ்வாறு வந்தவர்கள் ஒவ்வொரு வரிடமும் பல இலட்ச ரூபா வரி செலுத்தக் கோரி புலிகளால் கடிதங்கள் வழங்கப்பட்டன. ■

## தமிழகத் தலைவர்களுக்கு சந்திரகாசன் வேண்டுகோள்

**த**மிழக அரசியல் தலைவர்கள் இலங்கைத் தமிழ் மக்களின் நலனுக்காக ஏதேனும் செய்ய விரும்பினால் இலங்கையில் உள்ள சகல தமிழ் தரப்புகளையும் ஒன்றிணைத்து அதனைச் செய்ய வேண்டும் என்று தந்தை செல்வாவின் மகன் எஸ். சந்திரகாசன் தெரிவித்துள்ளார்.

தமிழகத் தலைவர்கள் இலங்கைத் தமிழ் மக்களின் உரிமைகளை பெற்றுக் கொடுக்க வேண்டும் என்ற நோக்கத்தில் ஆற்றும் பணிகளை இலங்கையில் மக்கள் அங்கீகாரம் பெற்ற தரப்புகளுடன் இணைந்து மேற்கொள்வதே சிறந்தது என்றும் சந்திரகாசன் விடுத்துள்ள அறிக்கை ஒன்றில் தெரிவித்துள்ளார். ■

## தப்பிவந்தவர்கள் தேடப்படுகின்றனர்

**"வீ**ட்டுக் கொரு போராளி" என்ற திட்டத்தின் கீழ் கிழக்கில் புலிகளால் அழைத்துச் செல்லப்பட்டுப் பயிற்சியளிக்கப்பட்ட வேளையில் பயிற்சி முகாம்களிலிருந்து தப்பியோடி வந்தவர்கள் இப்பொழுது மீண்டும் தேடப்படுகிறார்கள்.

இவ்வாறு தப்பியோடி வந்து பாதுகாப்புத் தரப்பினரிடம் சரணடைந்த பின்னர் பெற்றோரிடம் ஒப்படைக்கப்பட்ட சிறுவர்கள் நீண்ட நாட்களின் பின்னர் மீண்டும் புலிகளால் தேடிப் பிடிக்கப்பட்ட பல சம்பவங்கள் கிழக்கு மாகாணத்தின் பல பகுதிகளில் சமீப சில நாட்களில் நடந்துள்ளன.

இப்பொழுது கிழக்கு மாகாணத்தில் கோயில் திருவிழாக் காலமாகையால் ஏராளமான சிறுவர்களும், இளைஞர் யுவதிகளும் திருவிழாக் காணக் கோயில்களுக்கு வருகிறார்கள். இவ் வேளையில் ஏற்கெனவே இயக்கத்தை விட்டுத் தப்பியோடியோரும் புதியவர்களுமாக ஏராளமானோர் புலிகளால் பிடித்துச் செல்லப்படுகிறார்கள். பெற்றோர் முன்னிலையிலும் பலர் அழைத்துச் செல்லப்படுகிறார்கள்.

இதே வேளை இயக்கத்தை விட்டுத் தப்பியோடிய எவராவது மறைந்திருப்பின் அது பற்றிய தகவல்களைத் தருமாறு பொதுமக்களுக்கு வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது. இயக்க நடவடிக்கைகள் பற்றி விமர்சிப்போருக்கு, கருக்கு வெட்டாத பச்சைப் பனை மட்டை அடியும் விழுகிறது. ■

# முரசம்

## ஒத்துழையா அரசியலின் விளைவு மீண்டும் ஒரு தேர்தலா?

*அன்புள்ள உங்களுக்கு, வணக்கம்.*

கடந்த அரசாங்கம் பதவியேற்று ஒரு வருடத்துக்குள்ளேயே கவிழ்ந்துவிட்டது.

புதிதாக வந்த ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கமும் ஒருவருடத்துக்குள்ளேயே மற்றொரு தேர்தலுக்குச் செல்லப் போவதாகக் கூறுகிறது.

இப்படி வருடா வருடம் தேர்தலென்ற நிலைக்கு நாம் தள்ளப்பட்டால் நாடு எப்படி முன்னேற்றம் காண முடியுமென்பது ஒருபுறமும், இலங்கையின் கொழுந்துவிட்டு எரியும் பிரதான பிரச்சினைக்கு எப்படி ஒரு ஒழுங்கான தீர்வு காண முடியும் என்பது மறுபுறமுமாக, மக்கள் மனதில் என்ன நிகழப் போகிறதோ என்ற பதற்றமே நிலவுகிறது. இத்தகைய நிலைமைக்கு உண்மையான காரணம் என்ன? ஒரு கட்சி மற்றக் கட்சியைக் குறைகூறுவதென்பதைவிட அவை அனைத்துமே மக்களின் பொது நன்மை கருதி ஒருங்கிசைந்து செயற்படத் தயாரற்றவையாக இருக்கின்றன என்பதே உண்மை.

ஜனாதிபதி ஒரு கட்சியாகவும் அரசாங்கம் மற்றொரு கட்சியாகவும் இருந்தாலும் இரண்டுமே சேர்ந்து நாட்டை நிர்வகிக்கும் பக்குவத்தை இவை பெற்றுக் கொள்ளவில்லை.

உலகில் பல நாடுகளில் இப்படியான நிலைமையில் எவ்வாறு ஒத்திசைவோடு இரு கட்சிகளும் செயற்படுகின்றன என்பதை நம் அரசியல் வாதிகள் உதாரணமாகக் கொள்ளத் தவறுகிறார்கள். அதிகாரம் மொத்தமுமே தம் ஒரே கட்சிக்கே வந்து சேர்ந்தால்தான் ஆட்சி நடத்த முடியும் என்ற மனோபாவம் இங்கு மேலோங்கி நிற்கிறது. எதிர்க் கட்சி என்பது எதிரிகள் கட்சியாகவே இங்கு உணரப்படுகிறது. மாறாக ஒரு ஆட்சியின் இன்னோர் அம்சமாக அவை ஏற்றுக் கொள்ளப்படும் நிலை இங்கு இல்லை.

இதனால் இரு ஆட்சி பீடங்களை வெவ்வேறு கட்சிகள் வகிக்கும்போது, ஒத்துழையாமை மனோபாவமும் எதிர்ப்புணர்வுமே இங்கு தலைதூக்குகிறது. இத்தகைய மனோபாவமே ஆட்சியதிகாரத்தில் மட்டுமல்ல இங்குள்ள தேசிய இனங்களின் சகவாழ்விலும் எதிரொலித்து வந்தது. மாற்று இனங்களை இந் நாட்டின் மொத்த சமூகப் பொருளாதார அமைப்பை நிரப்பும் ஒரு பகுதியாக உணராமல் தமக்குச் சவாலாக இருக்கும் எதிரிகளாக உணரும் இனவாதப் போக்கே இங்கு வளர்க்கப்பட்டு வந்தது. இப்போது மக்கள் மனதில் எழுந்துள்ள பாரிய கேள்வி யார் அடுத்து இவ் அதிகாரப் போட்டியில் வெற்றியீட்டப் போகிறார்களென்பது அல்ல.

இந்த அதிகாரப் போட்டிக்கு இந் நாட்டின் சமாதானமும் ஜனநாயகமும் பலியாகி விடுமோ என்பதுதான். இன்று சமாதானத்தைக் காணுவதற்கும் ஜனநாயகத்தைப் பேணுவதற்குமான தமது பிரதான கடப்பாட்டை மறந்து, அதிகாரத்தை மட்டுமே குறிவைத்து அரசியல் விளையாட்டுகளில் குதிப்பார்களானால் அது மக்களால் பொறுப்பற்ற செயலாகப் பார்க்கப்படுமேயன்றி எக்காரணம் கொண்டும் வரவேற்கப்படமாட்டாது என்பதை யாவரும் உணர வேண்டும்.

■ ■

*மீண்டும் மறுமடலில்*
*வந்து கலக்கும்வரை*

*என்றென்றும் அன்புடன்,*
*ஆசிரியர்.*

---

எக்ஸ்ரே ரிப்போர்ட்

நரன்

# அதிகரிக்கும் அதிகாரப் போட்டி முடிவு என்ன?

பாராளுமன்றத்தைக் கலைத்துவிட்டு மீண்டும் ஒரு பொதுத்தேர்தலை நோக்கி நிலைமை திருப்பமடைந்து விட்டது.

அரசாங்கம், எதிர்க் கட்சி ஆகிய இரண்டுமே பாராளு மன்றத்தைக் கலைக்க விழைந்துள்ளன.

யார் முந்திக் கலைப்பது, யாரால் பாராளுமன்றம் கலைக்கப்பட்டால் தமது தரப்புக்கு லாபம் என்ற கணக்குப் பார்க்கும் நிலைக்குச் சென்றுவிட்டது நிலைமை.

இத்தகைய ஒரு நிலைமை தோன்றுமென்பதை முரசு, நீண்ட காலத்துக்கு முன்னரே எக்ஸ்ரே ரிப்போட்டில் எதிர்வு கூறி அதுபற்றிப் பலதடவை ஆராய்ந்திருந்ததை வாசகர்கள் நினைவுகூரலாம்.

ஜனாதிபதியால் பாராளுமன்றம் கலைக்கப்பட முன்னர் அரசாங்கம் தானே பாராளுமன்றத்தைக் கலைத்துவிடத் திட்டமிடலாமென முரசுதான் முதன்முதலில் அறிவுறுத்தி யிருந்தது.

நிகழ்ந்தேறிவரும் அரசியல் நகர்வுகள், சூழ்நிலை மாற் றங்கள், நெருக்கடிகள் என்பவற்றை உன்னிப்பாக அவ தானித்து அவரவர் கையாளக்கூடிய தந்திரோபாயங்களைப் பற்றி விவேகமாகச் சிந்திக்கும் எவருக்கும் முரசு தெரிவித்த கருத்துக்கள் சாத்தியமானவைதான் என்பது அப்போதே புரிந்திருக்கும்.

எனினும் இப்போது முரசு கூறியவற்றின் உண்மை நிலை வெளிப்படையாகவே தெளிவாகிவிட்டது.

ஆம், பாராளுமன்றம் கலைக்கப்படத்தான் போகிறது. யாரால்? ஏன்?

ஐக்கிய தேசியக் கட்சியைப் பொறுத்தவரை இவ்வளவு கஷ்டப்பட்டு, முன்னைய 11 தேர்தல்களிலும் தொடர்ச் சியாகத் தோல்வியைத் தழுவிய நிலையில் அரும் பெரும் வாய்ப்பாகக் கடந்த பொதுத் தேர்தலில் வெற்றிகண்டு ஈட்டிக் கொண்ட இந்தப் பாராளுமன்றத்தை ஒரு வருடத் துக்குள்ளாகவே கலைப்பதென்பது சுலபமாக எடுக்கக் கூடிய முடிவல்ல.

ஆனாலும் இந்தக் கடினமான முடிவை எடுத்தாக வேண்டிய நிலையில் அது உள்ளது என்றால் அந்த நிலை என்ன என்பதை முதலில் நாம் புரிந்து கொள்ள வேண்டும்.

வெறுமனே, ஜனாதிபதியின் அதிகாரங்களை அவர் கைவிடாத பட்சத்தில் பாராளுமன்றத்தை நடத்த முடியா தெனக் கூறுவது அல்ல உண்மையான காரணம்.

அவ்வாறு அவர்கள் செயற்படத் தடையாக ஜனாதிபதி இதுவரை தனது எந்தவொரு நிறைவேற்று அதிகாரத் தையும் பயன்படுத்தியிருக்கவில்லை.

மாறாக, அரசாங்கத் தரப்பிலிருந்துதான் பலதரப்பட்ட நெருக்கடிகள் ஜனாதிபதி மீதும் அவர் சார்ந்த கட்சியின் உறுப்பினர்கள் மீதும் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்படக் கூடிய வகையில் அரசாங்கம் சுதந்திரமாகச் செயற்பட முடிந்தது.

அரசாங்கம் பதவியேற்றபோதே ஜனாதிபதி எவ்வித மறுப்புமின்றி பாதுகாப்பு அமைச்சு, நிதியமைச்சு உட்பட சகல அமைச்சுகளையும் ரணில் விக்கிரமசிங்கவின் அரசாங்கத்துக்கு வழங்கிவிட்டார்.

அதேவேளை ரணிலின் அரசாங்கம் முன்னெடுத்த யுத்த நிறுத்தம், புரிந்துணர்வு ஒப்பந்தம் ஆகியவை குறித்த ஒருசில கருத்து வேறுபாடுகளைக் கொண்டிருந்தபோதும், ஜனாதிபதியின் அங்கீகாரத்தைப் பெறாமலே புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையொப்பமிட்டிருந்த நிலையிலும் அவர் இம் முயற்சிகளுக்கு தடை விதிக்கவில்லை.

ஆனால், ஐக்கிய தேசிய முன்னணி ஆட்சிக்கு வந்ததும் பொதுஜன ஐக்கிய முன்னணி அரசாங்கத்தில் முக்கிய அமைச்சராக - துணைப் பாதுகாப்பு, மின்சக்தி அமைச்சரா யிருந்த அனுருத்த ரத்வத்த, மற்றும் அவரது புதல்வர்கள் ஆகியோரைக் கைது செய்து சிறையிலடைத்தது.

ஜனாதிபதியின் பாதுகாப்புப் பிரிவினரை, பாதுகாப்பு பிரிவின் பணிபாளர்வரை ஒவ்வொருத்தராகக் கைதுசெய்து சிறையிலடைத்தது.

பல்வேறு முன்னாள் அமைச்சர்கள் மீதும் லஞ்ச ஊழல் குற்றச்சாட்டுகளைச் சுமத்தியது.

அண்மையில் ஜனாதிபதி மீதும் வாகனங்கள் வாங்கிய தான குற்றச்சாட்டு, மற்றும் ஒட்டுக்கேட்கும் கருவி பொருத் திய கைப்பை வைத்திருப்பதான குற்றச்சாட்டு என அவ ரைச் சங்கடத்துக்குள்ளாக்கும் விடயங்களை முன்வைத்து வருகிறது.

இவ்வளவும் செய்யக்கூடிய நிலையில் இருந்து கொண்டே ஜனாதிபதியின் அதிகாரங்கள் தமது அரசாங்கத் தின் செயற்பாடுகளுக்குக் குறுக்கே நிற்பதாக ஆளும் கட்சியினர் தெரிவிக்கின்றனர்.

தற்போது பிரதமரைப் பதவி கவிழ்த்து, லக்ஷ்மன் கதிர்காமரைப் பிரதமராகக் கொண்ட புதிய ஆட்சியொன்றை ஏற்படுத்தும் அரசியல் அமைப்பு ரீதியிலான சதி முயற்சி யொன்றில் மங்கள சமரவீர தலைமையிலான பொதுஜன ஐக்கிய முன்னணியின் குழுவினர் சிலர் ஈடுபட்டுள்ளதாகப் புதியதொரு அரசியல் பூகம்பமொன்றை ஆளும் கட்சியினர் வெடிக்க வைத்துள்ளனர்.

ஆனால் தாம் சதிமுயற்சிகள் எதிலும் ஈடுபடவில்லை யென்றும், விலைவாசி உயர்வு முதற்கொண்ட பல்வேறு காரணிகளால் அதிருப்தியுற்றிருக்கின்ற மக்களின் நலன் கருதி அரசாங்கத்தை மாற்றியமைக்கும் ஜன நாயகரீதியான முயற்சிகளை மேற்கொள்வது தவ றில்லையென்றும், அதற்கு ஐக்கிய தேசியக் கட்சியி லுள்ளவர்களே ஆதரவாக உள்ளார்களென்றும் பொதுஜன ஐக்கிய முன்னணி தெரிவிக்கின்றது.

அதேவேளை தன்னைக் கேளாமலே தனது பெயர் இங்கு பிரஸ்தாபிக்கப்பட்டுள்ளதென்று லக்ஷ்மன் கதிர்காமர் மறுப்புத் தெரிவித்துள்ளார்.

உண்மையில் சதி என்பது என்ன என்பது இங்கு எழுகின்ற கேள்வியாகும்.

ஒரு அரசாங்கத்தை அரசியலமைப்பு விதிகளுக் கமைய மாற்ற முனைவதை சதியென்று கூற முடியாது. அது வெறும் அரசியல் அதிகார மாற்றமே.

பாராளுமன்றத்தில் பெரும்பான்மையாக உள்ள வர்கள் ஆட்சியமைக்கிறார்கள். அந்தப் பெரும் பான்மையை மாற்றுத் தரப்பினர் ஈட்டிக் கொண்டால் ஆட்சி அவர்கள் கைக்கு மாறிவிடும்.

இது ஜனநாயகத்துக்கு உட்பட்ட விடயமே.

இவ்வாறு மாற்றுத் தரப்பு தனது பாராளுமன்றப் பலத்தை அதிகரிப்பதற்கு முயற்சிப்பதும் தவறல்ல. - மாறாக எந்த எதிர்க்கட்சியும் எப்போது தாம் ஆட்சி யைப் பிடிக்கலாமென்று முயற்சி செய்வதே இயல்பு.

அவ்வாறு ஆட்சியமைப்பதற்குரிய பலத்தை எதிர்க்கட்சிகள் பெற்றுவிட்டால் அவர்கள் லக்ஷ்மன் கதிர்காமரென்ன தாம் விரும்பிய எவரையுமே பிரதமராக்கிவிட்டுப் போகலாம், - அது அவர்களுக் குரிய ஜனநாயக உரிமை.

ஆனால் அவ்வாறான பெரும்பான்மைக்கான பலத்தை அவர்கள் எவ்வாறு பெற்றுக் கொள்ளப் போகிறார்கள் என்பதே கேள்வி.

அவர்கள் நிச்சயமாக ஆளும் கட்சிப் பாராளு மன்ற உறுப்பினர்கள் சிலரது ஆதரவைப் பெற்றாலே இது சாத்தியம்.

ஐ.தே.க. இவ்வாறான சதி(?) முயற்சி பற்றிப் பிரஸ்தாபிக்கும் போது தனது கட்சியிலிருந்து சிலர் மாறிச் செல்லக்கூடும் என்பதையும் ஒப்புக்கொள்ள வேண்டியவர்களாகிறார்கள்.

ஆனால் இதே ஐ.தே.க.வே கட்சி மாறி வாக் களிக்கக்கூடிய, மனச்சாட்சிப்படி வாக்களிக்கும் சட்ட மூலத்தை பாராளுமன்றத்தில் நிறைவேற்ற முன் னிற்கிறது. ஜனாதிபதியும் இச் சட்ட மூலத்தை அங்கீ கரிக்க வேண்டுமென தமது நிபந்தனைகளில் ஒன் றாக விதித்துள்ளது.

ஆனால் தனது கட்சியினர் கட்சி மாறிவிடக்கூடு மென்றால் அதை சதியென்கிறார்கள்.

இதேவேளை பொ.ஐ.மு.வின் ஆட்சிக் காலத்தில் ஒருமுறை அரசியல் தீர்வுத் திட்டத்தை நிறைவேற்ற ஐ.தே.க. பாராளுமன்ற உறுப்பினர்கள் சிலர் ஆதர வளிக்கக் கூடும் என்ற பரபரப்பான நிலைமை எழுந்த போது அவ்வாறு சந்தேகிக்கப்பட்ட பாராளுமன்ற உறுப்பினர்களை வாக்களிப்புக்கு முன்னதாக இர வோடு இரவாக சிங்கப்பூருக்கு அனுப்பி வைத்ததை நாம் நினைவுகூரலாம்.

இங்கு பொ.ஐ.மு. எடுத்த முயற்சியைச் சதி யெனக் கூறுவதா, ஐ.தே.க. நடந்துகொண்ட முறை யைச் சதியெனக் கூறுவதா, அல்லது இரண்டுமே ஜனநாயக ரீதியானதுதானா?

கடந்த அரசாங்கத்தின் இறுதியில் அரசாங் கத்தின் முக்கிய அமைச்சர்கள் உட்பட, அதனுடன் கூட்டமைத்துக் கொண்ட கட்சிகளையும் ஐக்கிய தேசியக் கட்சி தன் பக்கம் இழுத்துக் கொண்டது. இதற்குப் பெருமளவு பணமும் புகுந்து விளையாடிய தென்பது பகிரங்கமான இரகசியம்.

இவ்வாறு தாம் அவர்களைக் கட்சி மாற்றி அவ் ஆட்சியை வீழ்த்தியதை ஐ.தே.க. இப்போது சதி யென ஏற்குமா?

அது சதியல்ல, அரசியலமைப்புக்கு உட்பட்டது, ஜனநாயகத்துக்கு உட்பட்டதென்றால், அதைவிட வேறுபட்ட எதை இப்போதைய எதிர்க்கட்சியான பொ.ஐ.மு. செய்ய முற்பட்டுள்ளதென இவர்கள் குற்றம் சாட்டுகிறார்கள்?

எனவே இதில் சதி உள்ளதா இல்லையா என் பதைவிட இதன் பின்னால் உள்ள அரசியல் நோக் கங்கள் என்ன என்பதே இங்கு பிரதானமானது.

ஐ.தே.க. ஆரம்பத்தில் எண்ணியதுபோல் ஜனா திபதிக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணையைக் கொணர்ந்து அவரைப் பதவி நீக்கி விடலாமென்பது இப்போது வரவர அசாத்தியமானதாகிச் செல்கிறது.

அதேவேளை இதற்கு முன்னோடியான மனச் சாட்சிப்படி வாக்களிக்கும் பிரேரணையை நிறைவேற்று வதுகூட கேள்விக்கிடமானதாகியுள்ளது.

மேலும் ஒரு பெரும்பான்மைக் கட்சி மூன்றில் இரண்டு பெரும்பான்மையைப் பெறத் தக்கவிதத்தில் தேர்தல் சீர்திருத்தம் தொடர்பான மற்றொரு சட்ட மூலத்தையும் நிறைவேற்றுவது சிரமமாகியுள்ளது.

இவை சிறுபான்மைக் கட்சிகளைப் பாதிக்கு மென்பதால் ஐ.தே.மு. வில் கூட்டுச் சேர்ந்திருக்கும், முஸ்லிம் காங்கிரஸ், இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் ஆகியவைகூட இதற்கு எதிர்ப்புத் தெரிவிக்கலாம்.

முஸ்லிம் காங்கிரஸ் நிறைவேற்று அதிகாரமுள்ள ஜனாதிபதி முறையை ஆதரிக்கிறது.

இதேவேளை, அண்மைய கிழக்கு மாகாணக் கலவரங்களின் பின் முஸ்லிம் காங்கிரஸ் அதிகரித்த அளவு அதிருப்திக்குள்ளாகியிருக்கிறது.

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸு ம்கூட மேல் கொத்மலைத் திட்டம், உள்ளூராட்சி சபை வேட்பாளர் பட்டியல் தெரிவு, அமைச்சர் ஆறுமுக னுக்கு பொலிஸ் நிலையத்தில் நிகழ்ந்த அவமதிப்பு என்பவற்றாலும் தற்போதைய தோட்டத் தொழிலாளர் சம்பள உயர்வுப் போராட்டம் வரை மாற்றுக்கட்சி யான அமைச்சர் சந்திரசேகரனின் மலையகத் தொழிலாளர் முன்னணியின் குறுக்கீடு என்பவற்றால் அதிருப்தியுற்றுள்ளார்.

ஆரம்பத்தில் இருந்ததைப்போலன்றி தற்போது பொ.ஐ.மு.விலிருந்து ஐ.தே.மு. விற்கு சிலர் கட்சி மாறக்கூடுமென்ற சூழ்நிலை மாறிவிட்டது.

இது இவ்வாறிருக்க, மேலும் முக்கியமான இரு பிரச்சினைகளை அரசாங்கம் எதிர் கொள்ள வேண்டியதாக உள்ளது.

ஒன்று, புலிகளுடனான சமாதானப் பேச்சுவார்த் தையில் புலிகளால் கோரப்படும் இடைக்கால நிர்வாகத்தை எவ்வாறு வழங்குவது என்பது.

ஏனெனில் ஒருபுறம் எத்தகைய இடைக்கால நிர்வாக சபை என்பது ஒரு கேள்வி.

மறுபுறம் அதை யார் வழங்க முடியும் என்பது மறுகேள்வி.

அமெரிக்காவில் ரணில் தெரிவித்ததைப்போல், இலங்கை அரசாங்கத்தின் நீதி நிர்வாகமும், மனித உரிமைகளைப் பேணும் உத்தரவாதமும் கொண்ட தாகவே இடைக்கால நிர்வாகம் அமையும், என்பதற் கேற்ற ஒன்றை புலிகள் ஏற்கப் போவதில்லை.

அவர்கள் தமது கட்டுப்பாட்டிலுள்ள, முல்லைத் தீவு, கிளிநொச்சி உட்பட்ட வன்னிப் பகுதி மற்றும் கிழக்கின் சில பகுதிகளில் நீதி நிர்வாகம், மனித உரிமை பேணல் என்ற பெயரில் இலங்கை அரசின் பொலிஸ், நீதிமன்றம் போன்றவை இயங்க அனு மதிக்கப் போவதில்லை.

அதேவேளை அத்தகைய இடைக்கால நிர்வாக சபையை வழங்கக்கூடிய அதிகாரம் ஜனாதிபதிக்கே உள்ளது. அவர் இணங்காத ஒரு இடைக்கால நிர்வாக சபையை அவர் வழங்கப் போவதில்லை.

எனவே ரணிலின் அரசாங்கம் எதைத்தான் பேசினாலும் அமுலாக்கமென்பது அவர் கையில் இல்லை.

இந்நிலையில் புலிகளுக்கு வழங்கப்பட்ட உத் தரவாதங்களுக்குப் பதிலளிக்கவேண்டிய இக்கட்டை அவர் சந்திக்க நேரிடும்.

அடுத்த விடயம் அரசாங்கம் எதிர்நோக்கும் பொருளாதார நெருக்கடி.

திட்டவட்டமான நிதியுதவிகள் எதையும் வெளி நாடுகளிடமிருந்து பெற்றுக் கொள்ள முடியாத நிலை யில் விலைவாசி உயர்வைத் தடுப்பதற்கு அரசாங்கம் திணறுகிறது.

உறுதியளிக்கப்பட்ட நிதியுதவிகளுக்கு சர்வதேச நாணய நிதியம், உலக வங்கி மற்றும் அமெரிக்கா உட்பட்ட மேற்குலக நாடுகளின் நிபந்தனைகளை அரசாங்கம் உடனடியாக நிறைவேற்ற வேண்டிய தாக உள்ளது.

அதற்காகவேதான் அரசாங்கம் இம் மாதத்தி னுள் 36 சட்ட மூலங்களை அவசர அவசரமாக பாராளுமன்றத்தில் நிறைவேற்ற வேண்டிய நிர்ப்பந் தத்துக்கு உள்ளாகியுள்ளது.

இவற்றை நிறைவேற்ற விழையும்போது ஏற்படக் கூடிய பலத்த எதிர்ப்புகளை அரசாங்கம் எதிர் கொள்ள வேண்டியதாகவும் உள்ளது.

இவையனைத்துக்கும் அப்பால் பாராளுமன்றத் தைக் கலைக்கக்கூடிய அதிகாரம் ஜனாதிபதியின் கையில் செல்லக்கூடிய ஒருவருடப் பூர்த்தி நெருங்கி வருகிறது.

எனவேதான் அவ்வாறு ஒரு நெருக்கடியின் மத்தியில் ஜனாதிபதியால் கலைக்கப்படாது தாமா கவே பாராளுமன்றத்தைக் கலைத்துவிட்டு தேர்த லுக்குச் செல்வது உசிதமென ஐ.தே.க. வின் நிறைவேற்றுக் குழு கருதுகிறது.

அப்படித் தேர்தலுக்குச் செல்லும்போது எதிர்க் கட்சி மீது அதிகூடிய அபகீர்த்தியை ஏற்படுத்தி விடவே ஐ.தே.க. முனைகிறது.

அதேவேளை ஆட்சியைக் கலைக்க வேண்டிய தற்கான நம்பகமான காரணமொன்றை அது முன்னிறுத்தவும் வேண்டியுள்ளது.

அதனால்தான் அது ஜனாதிபதியை நோக்கி மூன்று நிபந்தனைகளை முன்வைத்துள்ளது.

ஜனாதிபதியின் பாராளுமன்றத்தைக் கலைக்கும் அதிகாரத்தை அவர் பாராளுமன்றத்துக்கே விட்டுக் கொடுக்க வேண்டும், மனச்சாட்சிப்படி வாக்களிக்கும் பிரேரணைக்கு இணங்க வேண்டும், பாராளுமன்ற நிறைவேற்றுக் குழுவிற்குத் தனது அதிகாரங்களை விட்டுக்கொடுக்க இணங்கவேண்டும் என அவர் கேட்கப்பட்டுள்ளார்.

நிச்சயம் மறுக்கப்படும் என்று நன்கறிந்த இந் நிபந்தனைகளை ஜனாதிபதி ஏற்காவிட்டால் தாம் பாராளுமன்றத்தைக் கலைக்கப் போவதாக ஐ.தே.க. அறிவித்துள்ளது அதன் கலைக்கும் முடிவுக்கு காரணங்களைக் கற்பிக்கும் முயற்சியே.

எவ்வாறாயினும் அடுத்த தேர்தலொன்றை நோக்கியே எமது அரசியல் மிக வேகமாக வழுக்கிச் சென்றுகொண்டிருக்கிறதென்பதே நிலைமை.

அப்படியானால் இப்போதைய யுத்த நிறுத்தம், புரிந்துணர்வு ஒப்பந்தம், பேச்சுவார்த்தை முயற்சி கள்.....? ஆம் கேள்விக்கிடமானவைதான்! ■

அண்டை மண்டலத்திலிருந்து காணகன்

# தமிழக அரசின் 'பொடா' சட்டம் தீவிரம்!

இந்திய அரசால் கொண்டு வரப்பட்ட 'பொடா' சட்டத்தைத் தமிழக அரசு தடாலடியாகக் கையாளும் விதம் கண்டு மத்திய அரசே மிரண்டுபோயுள்ளது.

தேசிய ஜனநாயகக் கூட்டணியின் தலைவர்களில் ஒருவரான வை.கோ. தமிழக அரசின் முதல் 'பொடா' சட்டத்தின் கைதிற்கு ஆளாவார் என்று யாரும் எதிர பார்க்கவில்லை. ஆனால், வை.கோ. விவகாரத்தில் எந்த ஒரு உறுதியான கருத்தையும் மத்திய அரசு இன்றுவரை வெளியிடவில்லை. இரு தலைக்கொள்ளியாக மத்திய அரசிலுள்ள ஒவ்வொரு தலைவரும் ஒவ்வொரு கருத்தைத் தெரிவித்து வருகின்றனர்.

தற்போது மத்திய பாதுகாப்பு அமைச்சர் ஜோர்ஜ் பெர்னான்டஸ் வேலூர் சிறைக்குச் சென்று வை.கோ.வைச் சந்தித்துப் பேசி வந்தது பாராளுமன்றத்தில் கடும் சர்ச்சையை ஏற்படுத்தியது. காங்கிரஸ், கம்யூனிஸ்ட் உறுப்பினர்களின் ஆட்சேபனைக்குப் பதிலளித்த அத்வானி, "வை.கோ.வைச் சந்தித்தது தவறில்லை" என்று கூறினார்.

வை.கோ.வின் கைதை அடுத்து கைதாகக்கூடும். என்று எதிர்பார்க்கப்பட்டவர்களில் ஒருவரான பழ.நெடுமாறன் கைதாகியுள்ளார். முன்னதாக நெடுமாறன் சிறையிலிருக்கும் வை.கோ.வைப் பார்த்துவிட்டு வெளியே வந்து நிருபர்களிடம், "நான் கைது செய்யப்படக்கூடும் என்றால் அது சந்தோஷமே" என்று பேசினார்.

தமிழர் தேசிய இயக்கத்தின் தலைவரான பழ.நெடுமாறன் வை.கோ.வைக் காட்டிலும் மிகத் தீவிரமாகப் புலிகளை ஆதரித்து வருகிறார் என்பது யாவரும் அறிந்ததே. வை.கோ.விற்காவது தேர்தல் அரசியலை நடாத்த வேண்டிய நிர்ப்பந்தமுள்ளது. ஆனால், நெடுமாறனுக்கு அதுவுமில்லாததால் தனது முழுநேரப் பணியாகவே புலிகளை ஆதரித்து வந்தார்.

ஒரு காலத்தில் ஸ்தாபன காங்கிரஸில் காமராஜரின் நம்பிக்கைக்குரிய தளபதியாக இருந்தவர் பழ.நெடுமாறன். அந்த வகையில் தேசியளவில் பல முக்கிய இந்தியத் தலைவர்களுக்கு அறிமுகமானவர். ஒரு சமயம் மதுரையில் இந்திராகாந்தியின் மீது நடாத்தப்பட்ட கொலைவெறித் தாக்குதலில் இருந்து அவரைப் பாதுகாத்தவர். 68 வயதான நெடுமாறன் ஒரு இருதய நோயாளியுமாவார். மேற்கூறிய பின்னணிகளால்தான் நெடுமாறனின் கைது காலதாமதப்பட்டு வந்தது என்பது தான் உண்மை. இவர் ஏற்கனவே தேசிய பாதுகாப்புச் சட்டம், தடா ஆகியவற்றில் கைதாகி விடுதலையானவர்.

நெடுமாறன் ஒருவழியாக ஒகஸ்ட் முதலாம் திகதி இரவு பத்து மணிக்கு அதிரடியாகக் கைது செய்யப்பட்டுக் கடலூர் சிறையில் அடைக்கப்பட்டார். நெடுமாறன் கைது செய்யப்பட்டமைக்குச் சொல்லப்பட்ட காரணம், சென்னையில் ஏப்ரல் 13 ம் திகதி நடந்த, பிரபாகரன் சர்வதேசப் பத்திரிகையாளர்களுக்கு அளித்த பேட்டி தொடர்பான விமர்சனக் கூட்டத்தில் அவர் புலிகளை ஆதரித்துப் பேசினார் என்பதாகும். இந்தப் பொதுக் கூட்டத்தில் பேசிய பலரும் பிரபாகரனை வானளாவப் புகழ்ந்தும், ஜெயலலிதாவைத் தரக்குறைவாக விமர்சித்ததோடு மட்டுமல்லாமல் ஜெயலலிதாவின் உயிருக்கு ஆபத்து ஏற்படும் என்ற ரீதியிலெல்லாம் பேசினார்கள். இந்தக் கூட்டத்தில் கண்ணியமாகப் பேசிய நெடுமாறன் தற்போது கைது செய்யப்பட்டுவிட்டார். இது தலையைப் பிடித்தால் உடம்பின் மற்றப் பாகங்கள் தானாக அடங்கிவிடும் என்ற ஜெயலலிதாவின் கணக்குத்தான். ஆயினும், பேராசிரியர் சுப.வீரபாண்டியன் நெடுமாறன் கைதைக் கண்டித்து அடுத்தநாளே நிருபர்கள் மாநாடு நடாத்த அன்று மாலையே கைதானார். கைதான சுப.வீரபாண்டியனுக்கு இரண்டாண்டு கடுங்காவல் தண்டனை வழங்கப்பட்டுள்ளது. ஜெயலலிதாவின் வியூகப்படி இதுவரை தமிழ்நாட்டில் புலிகளை ஆதரித்து வீரவசனம் பேசிய அனைவரும் இப்போது வாய் பொத்தி, கைகட்டி அமைதியாகிவிட்டனர்.

தமிழ்த் தேசிய பொதுவுடமைக் கட்சித் தலைவர் பெ.மணியரசன், 'தாய் தமிழ்' பள்ளிகளை நடாத்தி வரும் தியாகு போன்ற எண்ணற்ற புலிகள் ஆதரவாளர்கள் தலைமறைவாகிவிட்டதாகச் சொல்லப்படுகிறது. சுப. வீரபாண்டியனின் கைதிற்கு எதிர்ப்புத் தெரிவிக்கக்கூட யாருக்கும் நா எழவில்லை.

ஆனால், விடுதலைச் சிறுத்தைகள் அமைப்பின் தலைவரான திருமாவளவன் மட்டும் தமிழக அரசு 'பொடா' சட்டத்தை அமுல்படுத்தும் விதம் பற்றிக் கடும் எதிர்ப்புத் தெரிவித்துள்ளார். இது தொடர்பாக அக் கட்சி ஆளுநரைச் சந்தித்து மகஜர் அளிக்கவும் திட்டமிட்டுள்ளது. ஒகஸ்ட் 5 ம் திகதி திருமாவளவன் இது பற்றி விவாதிக்க அனைத்துக் கட்சிக் கூட்டமொன்றிற்கு ஏற்பாடு செய்துள்ளார். இதற்குப் போதுமான அளவு வரவேற்பு இருக்குமா? என்பது சந்தேகமே!

காங்கிரஸ் கட்சி ஏற்கனவே புலிகளைக் கடுமையாக வெறுக்கும் கட்சி. இந்திய தேசிய அரசியலில் கலந்துவிட்ட கட்சியான தி.மு.க. வெகு நாட்களுக்கு முன்பே புலிகள் ஆதரவை முற்றிலுமாக விலக்கிக் கொண்டது. அது மட்டுமல்லாமல் வருங்காலத்தில் காங்கிரஸோடு உறவு வைக்க வேண்டும் என்ற எண்ணமும் தி.மு.க.விற்கு உள்ளது. ஆகவே, இந்தச் சமயத்தில் தி.மு.க. 'அடக்கி வாசிப்பது' புரிந்து கொள்ளக் கூடியதே!

இதற்கிடையே, ம.தி.மு.க. தலைவர்களில் ஒருவரும், மத்திய அமைச்சருமான கண்ணப்பன் வை.கோ. கைதைத் தொடர்ந்து நிருபர்களுக்குப் பேட்டியளிக்கும் போது புலிகளை ஆதரித்துப் பேசியதற்காக அவர் மீது நடவடிக்கை எடுக்கத் தமிழக அரசு முன்வந்துள்ளது. இது தொடர்பாக உள்துறை அமைச்சர் அத்வானிக்குக் கடிதம் எழுதிய ஜெயலலிதா, "தொடர்ந்து புலிகளை ஆதரித்துப் பேசிவரும் மத்திய இணையமைச்சர் மு.கண்ணப்பனை அப் பதவியிலிருந்து நீக்க வேண்டும்" என்று கோரிக்கை விடுத்துள்ளார். ஆக, புலிகளைத் தமிழகத்தில் யார் ஆதரித்தாலும் அவர்கள் மீது 'பொடா' பாயத் தவறாது என்று ஜெயலலிதா நிரூபித்து வருகிறார். □

# தமிழகத் தீவிரவாதமும் பெரியாரின் வழிகாட்டலும்

பெரியார் தென் மாநிலங்களை இணைக்க வேண்டும் என்றார் . இப்போது சாதி ரீதியாகப் பிரிக்க வேண்டும் என்கின்றனர்.

கோபாலசாமி, அடுத்து நெடுமாறன் பொடா சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டுள்ளனர்.

புலிகளை ஆதரிக்கும் எவரையும் இரும்புக் கரம் கொண்டு அடக்கும் தனது நடவடிக்கைகளில் ஜெயலலிதா எந்தத் தயக்கத்தையும் காட்டவில்லை.

இப்போது ம.தி.மு.க. வின் மத்திய இணையமைச்சர் கண்ணப்பனைக் கைது செய்வதற்கான நியாயங்களை மத்திய அரசுக்குத் தெரியப்படுத்தி இருக்கிறார்.

திராவிடக் கட்சிகள் தி.மு.க, ம.தி.மு.க, எந்த பொடா சட்டத்தை ஆதரித்தார்களோ அது அவர்கள் மீதே பாய்ந்துள்ளது.

பிரபாகரன் வன்னியில் உள்ளூர் சர்வதேச பத்திரிகையாளர்களுக்குப் பேட்டியளித்துச் சில நாட்களுக்குள்ளேயே பிரபாகரனை நாடு கடத்துவதற்கான பிரேரணை தமிழக சட்டசபையில் முன் வைக்கப்பட்டது. தமிழக சட்டசபையில் அங்கத்துவம் வகித்த பா.ம.க, மற்றும் இடதுசாரிக் கட்சிகள் எதிர்ப்புத் தெரிவித்தன. இலங்கையில் நடக்கும் சமாதான முயற்சிகளுக்கு இது குந்தகமாக அமையும் என்றனர்.

இவை ஒருபுறமிருக்க இன்று தமிழகத்தில் தமிழ் தேசியவாதம் என்ன கட்டத்தில் இருக்கிறது? தமிழன் என்ற உணர்வின் நிலை என்ன என்பது சிந்திக்கற்பாலது.

தமிழகத்தில் 60 களின் நடுப்பகுதியில் இருந்து 70 களின் முற்பகுதிவரை இன மானம், தன்மானம் பற்றிய உணர்வுகள் பொங்கிப் பிரவாகித்தன.

ஆரம்பத்தில் திராவிட அரசியலில் பெரியாரிசமே மேலோங்கி இருந்தது. கலைஞரின் பராசக்தி படம் (50 களின் முற்பகுதியில்) தமிழ் தன்மான உணர்வு பற்றிப் பேசியதை விட சமூக சீர்திருத்தம் மூட நம்பிக்கைகளுக்கு எதிரான அறைகூவலாக இருந்தது.

பெரியாரின் திராவிட நாடு என்பது ஆந்திரம், கன்னடம், தமிழகம், கேரளத்தை இணைத்த அகன்ற தன்மை கொண்டதாக இருந்தது. பெரியாரின் கொள்கைகள் மத்தியில் அதிகாரங்கள் குவிந்திருப்பதற்கு மாறாக தேசங்களின் கூட்டு அரசியலை வலியுறுத்தியது. குறிப்பாக சாதி, மதம், பெண்ணடிமைத்தனம், மொழித் திணிப்பு என்பவற்றைக் கருத்தில் கொண்டிருந்தது.

ஆனால் அவரின் வாரிசுகள் என்று வரிந்து கொண்டோர் பெரியாரின் நல்ல உபதேசங்களை எல்லாம் தவிர்த்து விட்டு சக்கையை மாத்திரம் எடுத்துக் கொண்டார்கள்.

இன்று தமிழக அளவிலும், அகில இந்திய அளவிலும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் பெண்கள் உரிமைகள், மூட நம்பிக்கைகள் தொடர்பில் காந்தியடிகள், இடதுசாரிகள், அம்பேத்கார், தந்தை பெரியார் போன்றோர் சிறந்த பங்களிப்பை வழங்கியுள்ளார்கள்.

துரதிஷ்டவசமாக அவரின் நேரடி வாரிசுகள் என்று சொல்லப்படுவோர் பெரியாரால் உரைக்கப்படாத அல்லது பெரியாரிசத்துக்கு மாறான வீடயங்களையே தமது நிலைப்பாடுகளாகக் கொண்டுள்ளார்கள்.

பெரியாரிசம் என்ற அருவி பெருக்கெடுத்துப் பாயும் போது, பல்வேறு தளங்களில் அது பரவி நீண்டு செல்லும் போது ஆங்காங்கே இருந்த கஞ்சல் கூளங்களும் அதனுள் அகப்பட்டு விட்டன.

எனவே இன்றைய பிரபல அரசியலுக்கும் பெரியாரிசத்துக்கும் பெருமளவு சம்பந்தம் இல்லையென்றே கூற வேண்டும். ஏன் சுவடுகள் கூட இல்லை எனலாம்.

பிற்காலகட்டத்தில் சாதி, பெண்ணடிமைத்தனம் இவற்றுக்கு எதிரான குரலை விட இந்தி எதிர்ப்புக் குரல்களே அதிகமாகக் காணப்பட்டன. ரயில் மறியல் போராட்டங்கள் அந்த வகையினவே. பெரியாரின் அறிவுபூர்வமான விடயங்களுக்குப் பதில் உணர்ச்சிபூர்வமான விடயங்கள் முன்னுக்கு வந்தன.

இந்தியா சுதந்திரம் பெற்றதிலிருந்து மொழிவாரி மாநிலங்கள், இணைப்பு மொழி ஆங்கிலமே என்று இருந்தது. இந்தி திணிப்பு, அதற்கு எதிரான போராட்டம் என்பன கற்பிதமானதாகவே இருந்தன எனலாம்.

தமிழ் மொழியின் அபிவிருத்தியில் அவ்வளவாக அக்கறை காட்டப்படவில்லை. இன்றைய தமிழகம் அதற்கு உதாரணம்.

60 களில் அரசியலில் மொழிபற்றிப் பேசப்பட்ட அளவிற்குத் தமிழகத்தில் தமிழ் மொழி கல்வியிலோ, தொழில் துறையிலோ, உரிய இடத்தைப் பெறவில்லை. தமிழ் துரதிஷ்டவசமாகத் தொல்பொருட்காட்சிச் சாலைக்குச் செல்லும் அபாயமும் காணப்படுகிறது. அல்லது உருத்திரிந்து புதிதாக ஏதோவொரு உருத் திரிந்த பண்டமாக மாறி விடுமோ என்ற நிலையும் காணப்படுகிறது.

கடல் எங்களைப் பிரித்தாலும் உணர்வால், உள்ளத்தால் கலாச்சாரம், மொழியால் ஒன்றானவர்கள் என்று கடல் கடந்த தமிழர்கள் குறிப்பாக ஈழத்தமிழர்களைத் தமிழக அரசியல் தலைவர்கள் கூறுவார்கள்.

1970 களின் நடுப்பகுதியிலிருந்து 1980 களின் பிற்பகுதிவரை ஈழத் தமிழர்களுக்கான ஆதரவு பலமாகவே இருந்தது. ஈழத் தமிழர்களின் துன்ப துயரங்களைச் சார்ந்து தமிழகத்தில் இலக்கியங்கள் படைக்கப்பட்டன.

ஆனால் ஆயுதப் போராட்டத்துள் சகோதரப் படுகொலை ஆரம்பித்தபோது தமிழகத்தில் ஆதரவு பிசு பிசுக்கத் தொடங்கியதுடன் தமிழகத்திலும் காலடி வைத்தமை அதிர்ச்சியைக் கொடுத்தது.

ஈ.பி.ஆர்.எல்.எப் தலைவர் பத்மநாபா அவர்களின் படுகொலை, ராஜீவ்காந்தி படுகொலையுடன் அது அஸ்தமனமானது.

அகில இந்திய அளவில் காந்திய சிந்தனை உள்ளூரில் பெரியாரிச சிந்தனைகளால் ஆகர்சிக்கப்பட்ட மக்களுக்கு ஈழத் தமிழர் மத்தியில் உருவாகிய சகோதரப் படுகொலை ஒரு புதிய ஜந்துவைப் பார்ப்பது போல் இலங்கைத் தமிழரைப் பார்க்க வைத்தது.

காந்தி மாறுபட்ட அபிப்பிராயம் உள்ளவர்களுடன் நேசமாக இருந்தார். பெரியார் தனது பிரச்சாரங்களில் தனது கருத்துக்கு எதிரானவர்களைக் கர்ண கடூரமாகச் சாடினாலும் எப்போதும் மற்றவர்களுடன் கண்ணியமான கனிவான மனிதராக நடந்து கொண்டார்.

ஆனால் அவரின் வழித்தோன்றல்கள் என்று சொல்லும் சிலர் ஈழத் தமிழர் சமூகத்தினுள் நேர்ந்த உள்ளார்ந்த படுகொலைகளைக் கருத்திற் கொள்ளாது மற்றவர்களை வீழ்த்தி வெற்றி பெற்ற போக்கை வழிபடத் தொடங்கினார்கள்.

இது பெரியாரின் பகுத்தறிவுக் கொள்கைக்கு நேர்முரணானது. பெரியார் உயிருடன் இருந்திருந்தால் இன்று ஈழத் தமிழர் பெயரில் நடக்கும் மோசடிகளைப் பட்டவர்த்தனமாக, அவருக்கே உரிய வார்த்தையாடல்களுடன், அம்பலப்படுத்தி இருப்பார்.

1977, 1983 களில் தமிழகத்தில் ஈழத் தமிழர்களுக்குப் பேரலையென எழுந்த ஆதரவு மங்கி மடிந்து போவதற்குக் காரணம் தமிழக மக்களின் மனங்களில் தொழிற்படும் நீதி நியாய உணர்வே.

மற்றவர்களைக் கொன்றொழிக்கும் ஜனநாயக விரோத செயற்பாடுகளையிட்டு நாம் எச்சரிக்கையாக இருக்க வேண்டும் என்பதே அது. தமிழகத்தின் மக்கள் மனோநிலை இவ்வாறு மாறிப் போனதால் அரசியல்வாதிகளும் நிதானமடைந்துள்ளனர்.

ஆனால் இலங்கையில் குறிப்பிட்ட ஒரு அமைப்பின் நலன்களுடன் தம்மை இணைத்துக் கொண்டவர்களால் தமது கருத்துக்களை மாற்ற முடியவில்லை. அதில் அரசியல் பொருளாதார நலன்களும் அடக்கம்.

உதாரணமாக உலகத் தமிழர்களுக்கு வங்கி திறப்பது என்பது அத்தகைய கண்ணோட்டத்திலும் பார்க்கப்பட வேண்டும்.

தனிப்பட்டவர்களின் நலன்கள் சார்ந்த அரசியலை, அதனை ஏற்றுக் கொள்ளாத சமூகத்தினுள் கொண்டு செல்லும் போது அது நிராகரிக்கப்படலாம்.

அதுதான் 1983 இல் சிலிர்த்தெழுந்த தமிழகம் இன்று கோபாலசாமி, நெடுமாறன் போன்றவர்களின் கைதுகளில் தமது பிரதிபலிப்பைக் காட்டவில்லை. சட்டியில் இருந்தால் தானே அகப்பையில் வரும். அங்கு அப்படியொரு விடயமும் இல்லை.

பெரியார் பெருவாரியான தென்னக மக்களின் அபிலாஷைகள், நலன்களுடன் பகுத்தறிவுபூர்வமாகத் தன்னை இணைத்திருந்தார்.

கழுதை தேய்ந்து கட்டெறும்பாகியது போல தமது தனிப்பட்ட நலன்களுடன் சம்பந்தப்பட்ட விவகாரங்களைத் தமிழக மக்கள் மேல் திணிக்க முற்படும் போது அது மோசமான வீழ்ச்சியைச் சந்திக்கும்.

அதுதான் தென்னகத்தில் கோபாலசாமி, நெடுமாறன் கைது தொடர்பாக எந்தச் சலனமும் இல்லாத நிலையாகும். நெடுமாறன் திராவிட இயக்க பாரம் பரியத்தைச் சேர்ந்தவராக இல்லாவிட்டாலும் இந்திராகாந்தியின் வங்க தேசம் உருவாக்கலில் ஆகர்சிக்கப்பட்டவர். ஈழத் தமிழர்கள் இனரீதியான ஒடுக்குமுறைக்கு உள்ளாக்கப்பட்டபோது தனது உந்துதலை வெளிப்படுத்தியவர்.

ஆனால் ஈழத் தமிழர் பிரச்சினையின் உள்ளார்ந்த தன்மையை அதன் அரசியல் சக்திகளின் போக்கை ஆழமாகப் பார்க்கவில்லை. தாம் ஆரம்பத்தில் யாருடன் தொடர்பு கொண்டார்களோ அவர்களுடைய நிலைப்பாடே தமது நிலைப்பாடாக ஏற்றுக் கொண்டார்.

**தாகூர்**

கோபாலசாமி அவர்கள்கூட ஒழுக்கசீலரான, பேச்சுவன்மையுள்ள அரசியல்வாதி என்ற பெயரைக் கொண்டவர்.

ஆனால் தமது ஈழத்து அரசியல் நிலைப்பாட்டை அளவுகோலாகக் கொண்டு தமிழகத்தை அளக்க முற்பட்டால் அது அவருடைய அரசியல் எதிர்பார்ப்பிற்குப் பெரும் தீங்கிழைக்கும்.

இன்று இந்தச் சிந்தனைப் போக்குகளின் இன்னொரு வடிவமாகப் பாட்டாளி மக்கள் கட்சி தலைவர் ராமதாஸ் அவர்கள் தமிழகத்தில் வன்னியர்களுக்கு ஒரு மாநிலம் அமைக்க வேண்டும் என்று கோரும் அளவுக்குச் சென்றுள்ளமை, பெரியாருடைய தென்மாநிலங்கள் இணைந்து செயற்பட வேண்டும் என்ற பரந்த நோக்கத்திற்குத் தலைகீழான நிலைப்பாடாகும்.

ஈழத்து அரசியலில் ஏற்பட்ட சீரழிவுகள் தமிழக அரசியலில் எத்தகைய சீரழிந்த சிதறுண்ட எண்ணங்களை உருவாக்கி இருக்கிறது என்பதற்கு இதுவொரு எடுத்துக்காட்டு.

திராவிட முன்னேற்றக் கழகம் கைவிட்டுவிட்ட நிலையில் தமிழகத்தில் ஆயுதப் போராட்டத்துக்கு ஆதரவாகத் தேசியவாத அலை உருவாவது என்பது மந்திரத்தால் மாங்காய் பிடுங்குவது போலாகும்.

அது எழுவது என்பதை விட அத்தகைய முயற்சிகளில் ஈடுபடுவோர் முகவரியை அங்கு இழக்க நேரிடும் என்பதே உண்மையாகும்.

இன்றைய தமிழக இளைய தலைமுறை கம்யூட்டர் தொழில்நுட்பம், வலைத்தளங்களில் பிரயாணம் செய்யத் தொடங்கியுள்ளது. அது இன்னும் விரிவடையலாம்.

திரும்பவும் 70கள் 60 களினுள் காலப் பொருத்தமற்ற வகையில் பிரவேசிக்கும் என எதிர்பார்க்க முடியாது.

ஆனால் நியாயபூர்வமான தளத்தில் அந்தத் தேசியவாத உணர்வுகள், உறவுகள் மறுமலர்ச்சி அடையலாம். ஆனால் யாரையும் வழிபடுவதற்காக அது தலைதூக்கும் என எதிர்பார்க்க முடியாது.

ஏனெனில் "நெற்றிக் கண் காட்டினும் குற்றம் குற்றமே" என்ற நக்கீரர் வாசகமும் "நாமார்க்கும் குடியல்லோம் நமனை அஞ்சோம்" என்ற அப்பர் வாசகமும், இன்னும் இது போன்ற வாசகங்கள் தமிழில் உள்ளன.

ஜனநாயகம் மனித உரிமைகளை மதிக்கும் பண்பு இந்தியாவின் சுதந்திரப் போராட்டத்தின் ஊடாகக் கிடைத்த பெறுமானம்.

இவற்றையெல்லாம் விட்டுவிட்டு எங்களுக்கு ஒரு ராஜா இருக்கிறார். அவரை ஒருவரும் கேள்வி கேட்க முடியாது. அவரை நீங்களும் சேர்ந்து பணிந்து வழிபடுங்கள் என்றால் தமிழக சமூகம் உடன்படாது. எத்தனை ஏழ்மை கல்வியறிவின்மை இருப்பினும் அதனைச் செய்யாது. வரலாற்று வழி அச்சமூகம் அப்படித்தான் வளர்ந்தது.

ஈழத் தமிழர்கள் சில விடயங்களைக் குறிப்பாக உணர்ந்து கொள்ளவேண்டியிருக்கிறது.

முக்கியமாக,தமிழகம் என்ன கருதுகிறது. எம் மத்தியில் மனிதாபிமான, ஜனநாயக பூர்வமான அரசியல் இருக்கிறதா என்பதே அது.

பெருவாரியான தமிழக மக்கள் இரண்டு பிரதான திராவிடக் கட்சிகளின் பின்னாலும் மற்றும் இடதுசாரி, காங்கிரஸ் கட்சிகளின் பின்னாலும் நிற்கிறார்கள் என்பதே உண்மை யாகும் .

ஏறத்தாழ 99 வீதமான தமிழக மக்களின் அபிப்பிராயங்களுக்கு மாறாக இங்கு யாரோ உசுப்பி விடுகிறார்கள் என்பதற்காக, சொன்னதைச் சொல்லும் கிளிப்பிள்ளைகள் போல் செயற்படுவது அல்லது மந்தைக் கூட்டம் போல் செயற்படுவது ஈழத் தமிழர்களின் எதிர்கால நலன்களுக்கு எந்த விதத்திலும் உதவாது.

தமிழகத்தில் ஈழத் தமிழர் பற்றிய உணர்வுகள் ஒரேயடியாக மரணித்து விடவில்லை. ஏனெனில் கமலஹாஸனின்- 'தெனாலி', மணிரத்தினத்தின்- 'கன்னத்தில் முத்தமிட்டால்' ஆகியன ஈழத் தமிழர் தொடர்பில் மனிதாபிமானக் கேள்விகளை எழுப்பும் சமகாலத் திரைப்படங்கள்.

ஆனால் தமிழக மக்கள் காட்டுமிராண்டித்தனங்களை வெறுக்கிறார்கள். அதனை அங்கு யாரும் ஏற்றுமதி செய்ய முடியாது. ■


# NAVEEN CERAMIC

தரமான

☛ Wall Tiles, ☛ Floor Tiles

மற்றும் **குளியலறை உபகரணங்களை**

*Spain, Italy, Thailand, Malaysia, India, Indonesia* போன்ற நாடுகளில் இருந்து நேரடியாக இறக்குமதி செய்து விநியோகிப்பவர்கள்



**Naveen Ceramic** No.307, George R.De Silva Mawatta, Kotahena, Colombo-13. Sri Lanka. Tel : 345197-8

**எமது புதிய காட்சியறை**
184-A, Havelock Road, Colombo-05.
Tel :01-507334

500ற்கும் மேற்பட்ட அழகிய, பல வர்ண, வடிவங்கள் உங்கள் தெரிவுக்காக எம்மிடம் உண்டு.

## சிங்கப்பூரில் திருமணம்

சிங்கப்பூரில் திருமணப் பதிவு செய்து, திருமணம் செய்ய வருவோருக்கு சகல வசதியும் தளபாட சாமான்களோடு கூடிய தங்குமிட வசதியும், இலங்கை முறைப்படி கல்யாண ஏற்பாடும் அவரவர் வசதிக்கு ஏற்ப செய்து தரப்படும். இலவச விமான நிலைய வாகன வசதி, சலுகைக் கட்டணத்தில் வாடகைக் கார்.

விபரத்திற்கு:-

**LINGAM WEDDING SERVICE**

10, Anson Road, # 15-14
International Plaza, Singapore

எந்நேரத்திலும் தொடர்பு கொள்வதற்கு வசதியாக கைத் தொலைபேசி

அப்பு: 0065-975 14 941

e-mail: lingam_wedding@hotmail.com

## Wedding PHOTOGRAPHER

27/23A, Madampitiya Road, Colombo - 15.
Hotline: 077 321345, Tele: 527933
Your Satisfaction Is My Success
Stills Vinoth

## உங்களுக்காக!

தமிழ், சிங்கள, ஆங்கில பத்திரிகைகள் வானொலி, தொலைக்காட்சிகளில் பிறந்தநாள் வாழ்த்து, மரண அறிவித்தல் சகலவிதமான விளம்பரங்களை பிரசுரிக்கவும், சிதைவுற்ற படங்களை புதுப்பிக்கவும், இந்தியாவில் இருந்து இறக்குமதியான புத்தம்புது டிசைன்களைக் கொண்ட Visiting காட்களை பெற்றுக்கொள்ளவும் அனைத்து விதமான பிறின்ரிங் தேவைகளுக்கும் இப்போது வெள்ளவத்தையில் உங்கள் உற்ற நண்பன் Tel: 074 512830 Mobil: 077 - 316 258

**S.K. Ads & Prints**
2/11,"Colombo Plaza" 50, Galle Road, Wellawatta

## காண்டம்

உங்கள் வாழ்க்கையை சந்தோஷமாக்குங்கள். காண்டம் என்னும் நாடி ஜோதிடத்தில் உங்கள் பலாபலனை தெளிவாக அறிந்து எல்லாப் பிரச்சனைகளையும் தீர்ப்பதற்கு வழிகண்டு கடவுள் அருளால் நன்மை பெறுங்கள். நேரில் வரவும். வெளி நாட்டில் உள்ளவர்களும் தொலைபேசியில் தொடர்பு கொண்டு பார்க்கலாம்.

**S.Mani**

142-2/4, காலி வீதி, வெள்ளவத்தை, கொழும்பு-06.
சந்தைக்கு எதிர்ப்பக்கமாக Tel: 074-519754

## வீடே அழகாகி உள்ளது

வீட்டுக்குத் தேவையான அனைத்து பொருட்களும் ரெலிமாக்கட்டிங் மூலம்...


வானொலிப் பெட்டி
தொலைக்காட்சிப்பெட்டி
வீடியோ, டெக்
குளிர்சாதனம்-மின்குமிழ்
காஸ் அடுப்பு-மின் அடுப்பு
ஜெனரேட்டர்- என்ஜின் லயட்







SISIL SAMSUNG SONY LG Panasonic Candy SANYO SHARP SINGER PHILIPS



- குறைக்கப்பட்ட விலைகள்
- இலவச போக்குவரத்து
- இலகு தவணைக் கொடுப்பனவு
- உறுதியான விலை

தொலைபேசி: (வெலிசறை-074-819890,939342)
(நீர்கொழும்பு-074-872628)

**ரெலி மாக்கட்டிங்**

TM Tele Marketing
CONSUMER ELECTRONICS

750, நீர்கொழும்பு வீதி, வெலிசறை.
கிளை: 138, ரோயல் சினிமா கட்டிடம்.
கிறீன்ஸ் வீதி, நீர்கொழும்பு.
*website: www.viplanka.com/tele*
(நீர்கொழும்பு பஸ் தரிப்பிட நிலையத்திற்குப் பின்னால்)

## DIPLOMA IN MASS MEDIA

தபால் மூலம் ஊடக டிப்ளோமா பயிற்சி நெறி

வானொலி, தொலைக்காட்சி, பத்திரிகை மற்றும் வெகுஜன ஊடகங்கள் பற்றிய கற்கையும் — காலம் 6 மாதம்

இறுதியில் கலையக பயிற்சியும்- பரீட்சை முடிவில் சான்றிதழ் வழங்கப்படும். M.M.I.C மாணவர்கட்கு சலுகைகள் உண்டு

**நீங்களும் ஒலிபரப்பாளராகுங்கள்**

இலங்கை வெகுஜன ஊடக நிறுவனம் (Regd: W/A-38058)

**ஒலிபரப்பாளர் பயிற்சி நெறி** — நெறி 3 மாதம்

- அறிவிப்பு
- தயாரிப்பு
- தொடர்பாடல்
- நிகழ்ச்சி அமைப்பு
- செய்திவாசிப்பு
- செய்திஅறிக்கை தயாரிப்பு
- நேர்காணல்
- நேர்முக வர்ணனை
- மேடை நிகழ்ச்சி தொகுப்பு

உலகளாவிய ரீதியில் புகழ் பெற்ற அனுபவமிக்க ஒலிபரப்பாளர்கள் மூலம் உங்களுக்கு கற்றுத்தரப்படும். சுயவிலாசமிடப்பட்டு ரூ. 4. 50 சத முத்திரை ஒட்டிய தபாலுறையை அனுப்பவும்

Tel: 074 512830 Mobil: 077 - 316 258

**M.M.I.C**
Mass Media Institute of Ceylon
2nd Floor, "Colombo Plaza", 50, Galle Road, Colombo - 06.

## தெய்வீக மருத்துவம்

**National Theiveega Sakthy Foundation International Interregious Traditional & Medical & Divine Service**

சர்வதேச சமூக மாந்திரீக மருத்துவ தெய்வீக சேவை

Government Approved Charity Regd No: - HA/4/BT/219

**டாக்டர் பாலுசோதிடர் S.A.M.P, J.P. (SL)**

கிரக தோஷம் காலப்பகையால் பிரிந்த, காதலர்கள் கணவன் மனைவி ஒன்று சேர, வெறுத்த உறவினர்கள், வேண்டியவர்கள் அன்பாக இருக்க, காதல் திருமணம் எல்லோருடைய சம்மதத்துடன் நிறைவேற மற்றும் வேறு தீவினைகளால் வாழ்க்கையில் தீராத மனநோய், தாழ்வு மனப்பான்மை, கல்வி, தொழில், விவாகம், வெளிநாட்டுப் பிரயாணம், வேறு முயற்சித் தடை, குடும்ப வாழ்க்கையில் சந்தோஷமின்மை, வெளியில் சொல்ல வெட்கமான பிரச்சினைகள், தீயபழக்கம், மனிதத் தீமை, மருந்திடு போன்ற தீமைகளில் இருந்து விடுபட்டு சந்தோஷமாக வாழ பிரச்சினைகளுக்குரிய காரணத்தை காண்டம் இறைச்சக்தியால் கண்டறிந்து துன்பம் நீங்கி மகிழ்ச்சியாக வாழ புனித புராதன தீங்கற்ற மஹா மாந்திரீக தெய்வீக மருத்துவத்தினால் நிவர்த்தி அளிக்கப்படுகிறது

நேரில் வரமுடியாதோர், வெளிநாட்டவர்கள் தம் பிரச்சினையை எழுதினால் அல்லது தொலைபேசி ஃபக்ஸ் மூலம் தொடர்பு கொண்டு உடன் பயன் தரும் தெய்வீக மருத்துவப் பொருட்களை விசேட தபால் மூலம் பெற்று தம் எண்ணங்களை நிறைவேற்றிக் கொள்கிறார்கள். (இரகசியம் பாதுகாக்கப்படும்)

Theiveegam SriLanka
Head Office
Batticaloa.
Tele / Fax:065-24825,078 610098
வெளிநாட்டவர்களுக்கு,
Tele / Fax: - 0094 78610098

**கொழும்பிலும் சந்திக்கலாம்**

"வாழ்வினிருளை நீக்கிஒளியையேற்றுவோம்"
" DISPEL DARKNESS LIFE AND LET LIGHT SHINE "

## லண்டன், பாரிஸ் இந்திய ஹோமியோபதி வைத்திய நிபுணர்

மாறாத நோய்களை எல்லாம் ஹோமியோபதி மருத்துவத்தின் மூலம் தீர்த்து வைக்கும் *இந்திய ஹோமியோபதி சிகிச்சை நிபுணர்*

**டாக்டர் ஆர்.தியாகராஜன் DHMS,AMRSH (LON.).**

11.08.2002 முதல் லண்டன் பாரிஸ் நகரங்களுக்கு விஜயம் செய்து நீண்டகால நோயினால் பாதிக்கப்பட்டவர்களை நேரில் பார்வையிட்டு சிகிச்சை அளிக்கவுள்ளார்.

மாறி மாறி வரும் ஆஸ்த்துமா (Asthuma), சர்க்கரை வியாதி என்ற டையபற்றிக்ஸ் (Diabetes), எக்ஸிமா (Eczema), மலட்டுத்தன்மை-பேறின்மை (Sterility), ஆண்மைக் குறைபாடுகள் (Impotency), போன்ற வியாதிகளுக்கு சிறந்த முறையில் நிவாரணம் அளிக்கப்படும்.

ஹோமியோபதி மருத்துவம் மனிதனை முழுமையாகக் கருத்திற்கொண்டு மனம், மற்றும் உடலில் உண்டாகும் மாற்றங்களை உற்றுநோக்கி ஒரு முழுமையான சிகிச்சையை பாதுகாப்பான, பக்க விளைவுகளற்ற (Side effects) முறையில் அனைத்து வியாதிகளுக்கும் அளிக்கவல்லது.

**முன்கூட்டிய பதிவுக்கு**

லண்டன் தொலைபேசி: 07984803488 / 07833341693
email: homoeocare @ rediffmail. com
தொடர்பு: 0091-9843051099 (இந்தியா) 0094-77602513 (இலங்கை)
பாரிஸ் விஜயம் 11.08.2002 முதல் 13.08.2002 வரை
பாரிஸ் தொலைபேசி: 0664099198, 0610225386, 0611401882
இலங்கை விஜயம்24.08.2002 முதல் 27.08.2002 வரை

## 10வது நினைவு தினம்

பிறப்பு:- 1938.10.24
மறைவு:- 1992-08-12



**பழனியாண்டி ராஜகோபால் கவுண்டர்**

நேற்றுப் போல் இருக்கிறது உங்கள் மறைவு, ஆனால் நெஞ்சில் இன்னும் உங்கள் நினைவுகள் நிழலாடுகின்றன. உறவின் மேன்மை பிரிவினிலே என்பார்கள்.

உங்கள் அருமையும் அன்பும் இன்னும் விழிகளை நனைக்கின்றன. ஆண்டுகள் பத்து ஓடி மறைந்தாலும் அப்பா உங்கள் நினைவுகள் எங்களை விட்டு அகல வில்லை. முலைக்கொரு வராய் உறவுகள் பிரிந்து விட்டாலும் எங்கள் மூச்சுள்ள மட்டும் உங்கள் சுகமான நினைவுகளைச் சுவாசிப்போம்.

வையத்துள் வாழ்வாங்கு வாழ்வார்- வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படும் எனும் குறளுக்கு ஏற்ப தெய்வமாகி விட்ட உங்கள் நல்லாசிகள் எங்கள் குடும்பங்கள் மேன்மையுறத் தினமும் வேண்டுகின்றோம்.

இப்படிக்கு
அன்புத்தாய், மனைவி, மகன்மார், மகள்மார், மருமகன்மார், மருமகள், சகோதர, சகோதரிகள், பேரப்பிள்ளைகள்.

தகவல்:- பி.ஆர்.சந்திரசேகர், கொழும்பு-13.

## மலையாள மாந்திரிக வசியம்




உங்கள் வாழ்க்கையில் தொடர்ந்தும் தோல்வியா? நிம்மதியில்லையா? உங்கள் ஆசைகள் நிறைவேறவில்லையா? இதோ உங்களுக்கு ரிஷிகள் கையாண்ட மாபெரும் மலையாள மாந்திரிக சக்தி கவசம் என் கையில் உண்டு. கணவன்,மனைவி பிணக்குத் தீர்ந்து சுகபோக வாழ்வு பெற, பிரிந்த காதல் ஒன்று சேர, காதல் கைகூட, தீரா நோய் தீர, குழந்தைப் பாக்கியம் கிட்ட, திருமணம் நடக்க, கல்வியில் பெறுபேறு கிட்ட, குபேர வாழ்வு பெற, அருள் ஞானத்துடன் கூறப்படும் ஜாதகக் கணிப்பு என்றுமே பிழைத்ததில்லை. நடப்பது, நடக்கப்போவது, நடக்க இருப்பது, இன்று,இந்த மாதம், இந்த வருடம் உங்களுக்கு எப்படி எனத் தெரிந்து அறிந்து செயல்பட ஜாதக ரீதியாகவும், கைரேகை ரீதியாகவும், காண்ட அடிப்படையிலும் அன்றன்றாட நிகழ்வுக்குத் தக்கவாறு அனுசரித்துச் செயற்பட மலையாள மாந்திரிக சித்தர் டாக்டர் P.K. சாமி (J.D.G.A.N) J.P அவர்களைச் சந்தியுங்கள். வெளிநாட்டவர்களுக்கு விஷேச சலுகை உண்டு. மாந்திரிக சக்திக்குப் பெருமிதம் எமது 39 வருட சேவையே! இவ்வரிசையில் நாம் ஒருவரே!

இன் என்னைப் பற்றி

அன்றன்றாடு அருள் சக்தி வழங்கிவரும் அம்மன் துர்க்கையின் அருள் அவ்வப்போது எனக்குக் கிடைக்கின்றது. இவைகளை ஒட்டியே இந்தச் சோதிட மலையாள மாந்திரிக நிறுவனம் ஒரு மாபெரும் P.K.SAMY ASSOCIATE (PVT) LTD வரையறுக்கப்பட்ட நிறுவனமாகச் செயல்படுகின்றது. இதையொட்டியே வாங்கும் பணத்திற்கு ரீசீது வழங்குகின்றோம்.

★ அதி விசேஷமாக வெளிநாட்டவர்களுக்கு ஏனோதானோ என்றில்லாது அவர்களின் எண்ணங்களை எண்ணியவாறு செயல்திறனைக் காட்டியதனாலேயே அவர்களின் ஆயிரக்கணக்கான ஆசீர்வாதக் கடிதங்கள் என்னிடம் இருக்கின்றன.

★ உண்மைச் சேவை என்பதால் எனக்குப் பேராசிரியர் பட்டம் தந்தார்கள். கலாநிதி பட்டம் கிடைத்தது. அகில இலங்கை சமாதான நீதவானாக நியமித்தார்கள். கருணாகர பூசணம் பட்டம் கிடைத்தது. பங்களாதேசத்தில் சோதிட ஆராய்ச்சித்துறையில் என்னை அங்கத்தவராகச் சேர்த்துக்கொண்டார்கள். இன்னும் எத்தனை எத்தனையோ பட்டங்கள். இதற்குக் காரணம் எனது உண்மையான, மனச்சாட்சிக்கு விரோதமற்ற சேவையே! இனி உங்கள் குறை என்ன?



**இத்துறையில் விசா, மாஸ்டர் கார்ட் வசதி மற்றும் இன்ரர்நெட், வெப் சைட், ஈ மெயில், ஃபக்ஸ் வசதிகள் எம்மிடம் மாத்திரமே உண்டு.**

*இங்கு தீய வேலைகளுக்கு இடமில்லை. நுவரெலியாவில் மாத்திரமே கிளைக் காரியாலயம் உண்டு*

**கொழும்பில்**
162, கொட்டாஞ்சேனை வீதி,
மேபீல்ட் வீதி
(லிட்டில் ஃப்ளவர் பாலர் பாடசாலைக்கு முன்)
கொழும்பு-13.
தொலைபேசி: 466271, 466571, 342463, 466620, 431137, 466820
தொலைநகல்: 00941-344831

**நுவரெலியாவில்**
33, டெய்லி ஃபெயார் கொம்பிளெக்ஸ்,
கண்டி வீதி, நுவரெலியா.
தொலைபேசி: 052-22508, 35097, 23093, 23336, 23570
தொலைநகல்: 00945-235097
ஈ.மெயில்: drpksamy@sltnet.lk
வெப் சைட்: www.imexpolanka.com/drsami

# வடக்கு கிழக்கில் தணியும் இராணுவ அழுத்தங்கள்!

அலசுவது-இராஜதந்திரி

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க அரசுக்கும், புலிகளுக்குமிடையே கைச்சாத்தான புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் பிரகாரம், வடக்கு-கிழக்குப் பிரதேசங்களில் நிலவிய இராணுவ ரீதியான அழுத்தங்கள் தணிந்து வருவதை அவதானிக்க முடிகின்றது.

கடந்த இருபது வருடகால யுத்தத்தில் வடக்கு-கிழக்குப் பிரதேசங்கள் அனைத்துமே மிக மோசமான இராணுவக் கெடுபிடிகளுக்கு உள்ளாகியிருந்தன. பிரதான நெடுஞ்சாலைகள் மூடப்பட்டு, மூலைக்கு மூலை இராணுவக் காவலரண்கள், முகாம்கள் என்பன அமைக்கப்பட்டிருந்தன.

அத்துடன் பிரதான முகாம்களாக இருந்தவை பெருமளவு நிலப்பரப்பில் விஸ்தரிக்கப்பட்டதால் சாதாரண மக்களின் நாளாந்த வாழ்க்கை பெரிதும் இடைஞ்சல்களுக்கு உட்பட்டிருந்தது.

நல்ல விளைநிலங்கள் அபகரிக்கப்பட்டு, பாடசாலைகள், கோவில்கள், வீடுகள், பொதுக்கட்டடங்கள் என்பவை படையினரின் இருப்பிடங்களாகியிருந்தன.

யுத்தமே நிரந்தரமாகி, உயிர், உடைமை இழப்புக்கள் நாளாந்த நிகழ்வாகியிருந்த கடந்த இருபது வருடங்களில் இராணுவக் கெடுபிடிகள் எப்போது தம்மைவிட்டகலும் என்ற ஏக்கத்துடனேயே வடக்கு-கிழக்கு மக்கள் வாழ்ந்தனர்.

அந்த ஏக்கத்தைத் தணிப்பதாகவே தற்போது வடக்கு-கிழக்குப் பகுதிகளில் உள்ள பொது இடங்களிலிருந்து இராணுவத்தினரது வெளியேற்றம் விளங்குகின்றது.

வடக்கு-கிழக்குப் பிரதேசங்களைப் பொறுத்தவரை யாழ் குடாநாட்டுப் பகுதியே படையினரது பிரசன்னத்தால் பெருமளவு பாதிப்பை எதிர்நோக்கியிருந்தது.

1983 ம் ஆண்டிற்கு முன்னர் தற்போதைய பலாலி இராணுவத் தளம், இன்றிருப்பதைப் போல் விசாலமானதாக இருக்கவில்லை.

பிரிட்டிஷ் ஆட்சிக் காலத்தில் இராணுவத் தேவையின் பொருட்டே பலாலி விமானத் தளம் அமைக்கப்பட்டது. ஆயினும், காலப்போக்கில் பொது மக்களின் பாவனைக்குரிய விமான நிலையமாகவே மாறியிருந்தது.

வடக்கேயிருந்து இலங்கையின் ஏனைய பாகங்களிற்கும் பலாலியிலிருந்து ஆகாய மார்க்கமாகப் பொது மக்கள் செல்ல முடிந்தது. 'எயார் சிலோன்' என்ற அப்போதைய நிறுவனம் விமான சேவையை நடாத்தியிருந்தது.

உள்ளூரில் மட்டுமல்லாது தென்னிந்தியாவின் திருச்சிராப்பள்ளி, சென்னை ஆகிய நகரங்களுக்கும் பலாலியிலிருந்து விமான சேவைகள் இடம்பெற்றிருந்தன.

அச் சமயத்தில் ஐந்நூறிற்கும் குறைவான இராணுவத்தினரே பலாலியில் நிலைகொண்டிருந்தனர். அத்துடன், வடக்கே இடம்பெறும் கள்ளக் கடத்தல் நடவடிக்கைகளை முறியடிப்பதே பலாலியிலிருந்த படையினரது முக்கிய பணியாகவுமிருந்தது.

பலாலி விமானத் தளத்தைச் சூழவிருந்த நிலப் பிரதேசம் பயிர்ச்செய்கைக்குகந்த சிறந்த செம்மண் தரையாக விளங்கியிருந்தது. இப் பகுதியைச் சேர்ந்த விவசாயிகள் விரிவான பயிர்ச்செய்கையை மேற்கொண்டு, சிறந்த பயனைப் பெற்றிருந்தனர்.

பலாலித் தளத்திற்கு வடக்கே உள்ள காங்கேசன்துறை, மயிலிட்டிப் பகுதிகள் மீன்பிடிப்பதற்குரிய அபரிமிதமான கடல்வளத்தைக் கொண்டவையாகவுமிருந்தன.

ஆனால், நாளடைவில் பலாலி விமானத் தளம் முழு அளவில் இராணுவத் தேவைக்குரியதாக மாற்றமடைந்தபோது இத் தளத்தைச் சூழவிருந்த நில புலன்கள் அனைத்துமே அதிதீவிர பாதுகாப்பு வலயமாக மாற்றமடைந்தன.

விவசாயம், கடற்றொழில் என்பவற்றை நம்பியிருந்த பெரும்பாலான குடும்பங்கள் ஜீவனோபாயத்திற்கு வழியின்றித் தமது விளைநிலங்களைக் கைவிட்டுப் பலாலிப் பிரதேசத்திலிருந்து வெளியேறினர்.

நாளுக்கு நாள் வடக்கு-கிழக்கு யுத்தம் பலமடைய ஆரம்பித்ததும், பலாலியைச் சூழவிருந்த பிரதேசங்களில் படையினரது பிரசன்னமும் விரிவடைந்திருந்தது.

ஆரம்பத்தில் விளைநிலங்களையே கைவிட வேண்டியிருந்தது. பின்னர், வீடுகள், பாடசாலைக் கட்டடங்கள், கோவில்கள், தேவாலயங்கள் என்பவற்றிலிருந்தும் பொதுமக்கள் வெளியேற வேண்டிய நிர்ப்பந்தம் தோன்றியது.

வடக்கே பலாலியில் மட்டுமல்ல, யாழ்ப்பாணத்தில் வரலாற்று முக்கியத்துவம் மிக்கதாக விளங்கும் டச்சுக் கோட்டையும் படையினரது வசமாகியிருந்தது. இதன் காரணமாக இப் பெருங்கோட்டைக்கு வடக்கேயிருந்த வியாபார மையங்கள், யாழ்ப்பாணம் வைத்தியசாலை, வீடுகள் என்பவை மோதல்களின்போது பலத்த பாதிப்பை எதிர்கொண்டதுடன், ஏராளமான பொதுமக்களும் உயிரிழப்புக்கு உள்ளாகியிருந்தனர்.



ஒருதடவை டச்சுக்கோட்டை இராணுவ முகாமிலிருந்து ஏவப்பட்ட எறிகணையொன்று யாழ் வைத்தியசாலைக் கட்டடத்தினுள் விழுந்து வெடித்ததில் அங்கிருந்த நோயாளிகள் பலர் கொல்லப்பட்டதோடு, கட்டடங்களும் சேதமடைந்தன.

காங்கேசன்துறையிலிருந்த பிரபலமான சீமெந்துத் தொழிற்சாலையும் அதிதீவிர பாதுகாப்பு வலயத்திற்குட் பட்டிருந்தது. ஆனையிறவு முகாம் விஸ்தரிக்கப்பட்டபோது, பரந்தனிலிருந்த இரசாயனத் தொழிற்சாலையும் செயலிழந்தது. இதனால், வடக்கே ஆயிரக்கணக்கானோர் வேலையிழக்கும் துர்ப்பாக்கிய நிலைக்குள்ளானார்கள்.

யாழ் குடாநாட்டைப் போன்றே வடக்கு-கிழக்கின் ஏனைய பிரதேசங்களிலும் பொதுக்கட்டடங்களில் படையினர் பெருமளவில் பிரசன்னமாகி இராணுவ மயமான சூழலே உருவாகியிருந்தது.

தற்போது புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் பிரகாரம் வடக்கு-கிழக்கில் பொதுக் கட்டடங்களிலிருந்து படையினர் வெளியேற ஆரம்பித்துள்ளமை, சாதாரண அப்பாவி மக்களின் இயல்பு வாழ்க்கையை மீளவும் கட்டியெழுப்பச் செய்வதாகவே இருக்கின்றது.

புரிந்துணர்வு ஒப்பந்தத்தையடுத்துப் பொது இடங்களிலுள்ள படை முகாம்கள் வாபஸ் பெறப்படுவதில் தாமதங்கள் ஏற்பட்டிருக்கலாம். ஆனால், இது விடயத்தில் அரச தரப்பு சர்ச்சைகளுக்குப் பெருமளவு இடந்தராது நடந்துகொள்வது வரவேற்கத் தக்கதாகவே இருக்கின்றது.

கூடவே, சமரச நடவடிக்கைகளுக்கு முன்பதாக இராணுவ ரீதியான அழுத்தங்களைக் குறைவடையச் செய்வதாகவும் இந்தப் படைவிலகல் நடவடிக்கை காணப்படுகின்றது.

கடந்த இருபது வருட யுத்த காலத்தில் வடக்கு-கிழக்குப் பிரதேசங்களைக் கபளீகரம் செய்வதுபோலவே அரச தரப்பினர் நடந்துகொண்டனர்.

இராணுவ முகாம்கள், தளங்களாக மாற்றப்பட்ட இடங்களில் ஆட்டிலறி பீரங்கிகள், பல்குழல் எறிகணைப் பீரங்கிகள் போன்ற கனரக ஆயுதங்கள் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தன.

இதன் காரணமாக இராணுவ முகாம்கள், தளங்கள் என்பவற்றை அண்டிய அதிதீவிர பாதுகாப்பு வலயங்களுக்கு அப்பாற்பட்ட பொதுமக்கள் வதியும் பகுதிகள் கூட யுத்த அனர்த்தத்திற்கு முகம் கொடுத்தவையாக இருந்தன.

வடக்கே இறுதியாகத் தென்மராட்சிப் பகுதியில் 2000 ம் ஆண்டு இடம்பெற்ற 'அக்கினிச் சுவாலை' இராணுவ நடவடிக்கையின்போது, அப் பகுதியிலிருந்த குடிமனைகள் நெடுந்தூர ஏவுகணைகள், எறிகணைகள் என்பவற்றால் நாசமாக்கப்பட்டிருந்தன என்பது குறிப்பிடத் தக்கது.

இந் நிலையில் எதிர்காலத்தில் பொது மக்களின் உயிர், உடைமைகள், விளைநிலங்கள் என்பவற்றிற்குப் பாதுகாப்பை உறுதி செய்வதாகவே பொது இடங்களிலிருந்து படையினர் விலகும் நடவடிக்கை காணப்படுகின்றது.

அண்மையில், இராணுவத் தரப்பிலிருந்து மேற்கொள்ளப்பட்ட ஆய்வொன்றிலிருந்து கடந்த ஏழு மாத காலமாக நிலவும் யுத்த நிறுத்த சூழலில் பெருமளவு உயிர் இழப்பு, பொருள் விரயம் என்பவை தவிர்க்கப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

யுத்தமொன்று தொடர்ந்து இடம்பெறும் பட்சத்தில் ஒருபுறம் பணமும், மறுபுறம் உயிர்களும் விரயமாகுபவையாக இருக்கும்.

எனினும் கடந்த வாரம் கொழும்பில் நிகழ்ந்த ஆர்ப்பாட்டத்தில் வடக்கு-கிழக்குப் பிரதேசங்களில் உள்ள பொது இடங்களிலிருந்து படையினர் வாபஸ் பெறப்படுவதற்கு எதிராகக் கோஷங்களை எழுப்பினர்.

இவர்கள் படை முகாம்கள் மூடப்படுவதால் வடக்கு-கிழக்கில் படையினர் பலவீனப்படுத்தப்படுவதாக அஞ்சுகின்றனர்.

ஆனால், மறுபுறத்தே தீர்வைக் காணவேண்டிய அவசியத்தை யுத்தத்தில் ஈடுபட்ட இரு தரப்புகளில் ஒருதரப்பை மட்டும் வாபஸ் பெற வைப்பதால் மட்டும் உண்மையான சமாதானம் ஏற்பட்டுவிடப்போவதில்லை என்பதும் உண்மையே.

இருதரப்புமே ஆயுத நடவடிக்கைகளைக் கைவிடும் நிலையில்தான் உண்மையான சமாதானச் சூழல் ஏற்படும்.

ஆனால் ஒரு அரசியல் தீர்வைக் காணாமல் இதைச் சாத்தியமாக்க முடியாது. அதனால் யுத்த நிறுத்தத்துடன் மட்டுப்பட்டுவிடாமல் மக்களின் நாளாந்த இயல்பு வாழ்க்கையை உத்தரவாதப்படுத்தி அரசியல் தீர்வுக்கான ஆக்கபூர்வமான முயற்சிகளை எடுக்கும்படி சம்பந்தப்பட்ட தரப்புகளை யாவரும் ஒருமித்து நிர்ப்பந்திப்பதே அவசியமானதாகும்.

## அதிரடி அய்யாத்துரை



**அரசாங்கத்தக் கவுக்கிறதுக்குச் சதியாமே?** அதுசரி, அரசாங்கத்தக் கவுக்கிறதெண்டால் என்ன அலவாங்கு, பிக்கான், போட்டுத் தெண்டிற காரியமே? தங்கட சொந்தக் கட்சியில இருந்து சிலபேர் கட்சி மாறினாத்தானே அரசாங்கம் கவிழும்? கட்சிமாறுகிற சட்டமூலம் வேணும் வேணுமெண்டு நுனிக்காலில நிண்டவை தங்கட கட்சிக்காரரே கட்சி மாறிடக்கூடுமெண்ட உடன எப்பிடி அதச் சதியெண்டு சொல்லுவினம்? மற்றது என்னண்டால், லக்ஷ்மன் கதிர்காமரைப் பிரதமராக்கப் போகினமெண்டு சொல்லுறதால சிங்களச் சனத்துக்கு தமிழன் ஒருவன் பிரதமராகிப் போடுவான் எண்ட இனவாதத்தத்தானே இவையும் யூஸ் பண்ணப் பாக்கினம்? பாராளுமன்றத்தில யார் பெரும்பான்மை எடுக்கினமோ, அவை தாங்கள் விரும்பிற யாரையும் பிரதமராக்கிட்டுப் போகட்டன். இதில சதி என்ன கிடக்கெண்டதுதான் விளங்கேல்லை. போன அரசாங்கத்தை இவை வீழுத்தினதும் இதே வழியிலதானே?

**அன்ரன் பாலசிங்கம்** வன்னிக்கு வரப்போறாராம். எங்கட எயார்ப்போட்டாலயே வாங்கோவெண்டு அரசாங்கம் கெஞ்சுது. கொழும்பு எயார்போட்டால வரமாட்டாரெண்டும், போனமுறையைப்போல வன்னிக் குளத்தில போய் இறங்கவும் மாட்டாரெண்டும் இந்தமுறை தான் வாற விதம் சர்வதேச அங்கீகாரத்தைப் பறைசாற்றிற மாதிரி இருக்குமெண்டும் திறில்கதை சொல்லியிருக்கிறார் பாலாண்ணை. ஆனால் போற போக்கப் பாத்தால் அரசாங்கம் குழம்பி அவர் வராமலே நிண்டுடுவாரோவெண்டும் சந்தேகமாக் கிடக்கு. வாறது அவரோ எவரோ, எங்களுக்கு எப்ப சமாதானம் வந்து சேரும் எண்டத எதிர்பார்த்துத்தானுங்கோ சனம் தவம் கிடக்குது. வருமோ...?

**இப்ப அரசாங்கங்களக்** கலைக்கிற கதைகள் ஆளும் கட்சி, எதிர்க் கட்சி எண்டு ரெண்டு பக்கத்தாலயும் பலமா அடிபடுது. எங்கட அரசாங்கத்த எவராலயும் அசைக்க முடியாதெண்ட பேச்சு மாறி நான் முந்தி நீ முந்தியெண்டு இப்ப கலைக்கிறதுக்கு யார் முந்திறதெண்டு போட்டிபோடத் துடங்கிட்டினம். தேர்தலெண்டவுடன எங்கட கூட்டுக் கட்சிக்காரருக்குத்தான் குலைப்பனடிக்கத் துடங்கிட்டுது. சம்பந்தமானவர் தான் இப்ப தேர்தலை விரும்பயில்லையெண்டு ஆளும் கட்சிக்காரருக்கு மெசேஜ் விட்டிருக்கிறாராம். சங்காரமானவருக்கு இப்ப பெரும் சங்கடமான நிலைமை. தன்னப்பற்றி வன்னித் தலைமையில நல்ல அபிப்பிராயம் இல்லையெண்டதால அடுத்த தேர்தலில தன்னைத் தடுத்துப்போட்டால் என்ன கதியெண்டு யோசிக்கிறாராம். மட்டக்களப்பிலயும் துள்ளியடிச்சுத் திரிஞ்ச சில எம்பிமார் இப்ப திகைச்சுப்போய் நிக்கினம். எம்பி மாரை விடுங்கோ. அடுத்த முறை கூட்டே நிலைக்குமோ எண்டதே கேள்வியாக் கிடக்கு. எல்லாம் விதிதான்! இல்லை வினைதானெண்டிறியளோ?


**சம்பந்தர் மற்றக்** கூட்டுக்காரரக் கட்பண்ணிட்டு பிரதமரச் சந்திச்சத ரெலோ, ஈ.பி. ஆர்.எல்.எப். (சுரேஷ் அணி) தமிழ் காங்கிரஸ் எல்லாம் கண்டிச்சு அதிர்ச்சி அடைஞ்சிருக்கினமாம். இப்பிடி இதோட எத்தினையாவது தடவை அதிர்ச்சி அடைஞ்சாச்சு? அதிர்ச்சிக்குப் பிறகு என்னவாம்? இன்னொரு அதிர்ச்சிதானே. அதிருங்கோ அதிருங்கோ உடம்புக்கு நல்லது. நாங்கள் என்ன பண்ணுறது?

**யாழ் வர்த்தக** சம்மேளனத்தார் அங்க நடக்கிற வர்த்தகக் கண்காட்சியப் பகிஷ்கரிக்கினம். தங்கட பிரச்சினையளத் தீர்க்காமல் கண்காட்சி நடத்திறதில அர்த்தமில்லையெண்டினம். நியாயந்தான். ஆனால் பாருங்கோ, வாத்தகக் கண்காட்சியப் பகிஷ்க்கரிக்கிறது யாழ். வர்த்தகர் பிரச்சினைகளுக்கு எந்த விதத்தில பரிகாரமா அமையப்போகுது? நாங்கள் சர்வதேச வர்த்தக வளர்ச்சியை அறியாமல் போனால் யாருக்கு நட்டம்? அதுசரி, இதவிடப் பிரமாண்டமான சர்வதேச வர்த்தகக் கண்காட்சி திருகோணமலையில நடக்கப்போகுதே, இதுக்கு என்ன செய்யப் போகினம் எங்கடவை?


# நெட்டிலிருந்து

'நெட்டிலிருந்து' பகுதிக்கான தகவல்களை கீழுள்ள ஈ-மெயில் முகவரி மூலமாக அனுப்பி வைக்கலாம்.

murasu@dialogsl.net
edmurasu@dialogsl.net



போதையும் புகைத்தலும் நாயைக் கூட விட்டுவைக்கவில்லை.




உடலா இது....?




தடிமன், சளித்தொல்லை தாங்க முடியவில்லை

'கண்ணுக்குள் விரலை விட்டு....'



பட உதவி: நெட் பிரியன்

வருமுன் காக்க... கவசத்துடன்...



## பார்த்த ஞாபகம் இல்லையோ...? 11



கலைவாணர் என்.எஸ்.கிருஷ்ணன் தனது ஜோடியான டி.ஏ.மதுரத்துடன் சேர்ந்தே தமிழ்த் திரைப் படத்தில் தோன்றுவார். 1940 ம் ஆண்டின் பிற்பகுதியில் திரைப்படத் துறையில் நுழைந்தார். தொடர்ந்து 1957 ம் ஆண்டு, அவர் அமரராகும் வரை பல படங்களில் நடித்தார். அவர் ஒரு நகைச்சுவை நடிகர்தான். ஆனால் அவருடைய பங்களிப்பு, இரசிகர்களைச் சிரிக்கவும், ஆழமாகச் சிந்திக்கவும் வைக்கும். கலைவாணரைத் திரைப்படத்தில் நடிக்க ஒப்பந்தம் செய்யும் தயாரிப்பாளரும், இயக்குநரும் படத்தின் முழுக்கதையை மட்டும் கூறிவிடுவார்கள். கலைவாணர் அந்தத் கதைக்கேற்ப நகைச்சுவைக் கட்டங் களைத் தானே தயாரித்து அக் காட்சிகளில் நடிப்பதற்கேற்ற நடிகர்களை யும் அவரே தேர்ந்தெடுத்துவிடுவார். உரையாடல், பாடல்கள் அனைத்தையும் கலைவாணரே அமைத்துக்கொள்வார்.

இதற்கான மொத்தப் பணத்தையும் தயாரிப்பாளர் கலைவாணருக்கு வழங்கிவிட வேண்டும். படப்படிப்புக் களத்தில் கமெராவிற்கு முன் வந்துநிற்கும் அவரது குழுவை வைத்துப் படமாக்கவேண்டியது மட்டுமே இயக்குநர், ஒளிப்பதிவாளர்களுக்குரிய பணி.

என்.எஸ்.கே. நாடக சபை என்ற மன்றத்தை அமைத்துத் தமிழ்நாட்டின் மூலை முடுக்குகளில் நாடகங்களை நடாத்திப் பல பொது நிறுவனங்களுக்கு நிதி வழங்குவார். இலங்கையிலும் அவருடைய நாடகங்கள் பல நகரங்களில் மேடையேற்றப்பட்டுள்ளன. மட்டக்களப்பு விபுலானந்த மணி மண்டபத்தின் நிதிக்கும் கலைவாணரின் நாடகங்கள் நடாத்தப்பட்டன.

தமிழ்நாடு திராவிட முன்னேற்றக் கழகக் கொள்கைகளையும் தனது சினிமா, நாடகங்கள் மூலம் பரப்பியுள்ளார். லெட்சுமி காந்தம் என்ற பத்திரிகையாளரைக் கொலை செய்ய எம்.கே.தியாகராஜ பாகவதருடன் இணைந்து திட்டம் தீட்டினார் என்ற குற்றச்சாட்டின் பேரில் இரண்டாண்டுகள் சிறை வாசம் இருந்தார். சிறையிலிருந்து மீண்டவுடன் 'பைத்தியக்காரன்' என்ற படத்தைத் தனது சொந்தச் செலவில் தயாரித்து வெளியிட்டார். தான் சிறையில் பட்ட அனுபவங்களை விளக்கி ஒரு பாடலையும் இப் படத்தில் கலைவாணரே பாடியுள்ளார்.

மதுரத்துடன் பாடல்களைப் பாடிவந்த அவர், 1957 ம் ஆண்டு செப்டம்பர் மாதம் அமரரானார். சென்னை மாநகரில் என்.எஸ்.கே. கலையரங்கு அவர் நினைவாகவே கட்டப்பட்டுள்ளது.



ஜூபிட்டர் பிக்சர்ஸ் தயாரித்த 'எல்லோரும் இந்நாட்டு மன்னர்' படத்தில் சரோஜாதேவி இவ்வாறு தோன்றுகிறார். இப் படத்தில் ஜெமினி கணேசன் கதாநாயகனாகத் தோன்றுகிறார்.


இலங்கையைச் சேர்ந்த ஈழத்து ரத்தினம் 'எல்லோரும் இந்நாட்டு மன்னரடா... இதில் இளைத்தவரும் சளைத்தவரும் இல்லையடா..." என்று டி.ம்.சௌந்தரராஜனும் குழுவினரும் பாடிய பாடலை எழுதியிருந்தார். கே.வி.மகாதேவன் இசையமைத்திருந்தார்.



தமிழ்த் திரையுலகில் அந்த நாள் முதல் கதாநாயகர்களாகத் தோன்றுபவர்கள் இருதரப்பட்டவர்களாக இருந்து வருகிறார்கள். இன்று ரஜனிகாந்தும், கமலஹாசனும் இரு தனித் தரப்பினராக இருப்பது போல் அன்று எம்.கே.தியாகராஜ பாகவதரும், பி.யூ.சின்னப்பாவும் கணிக்கப்பட்டுவந்தனர். இருவருமே சொந்தக் குரலில் பாடி நடிக்க வல்லவர்களாக இருந்தார்கள்.

சின்னப்பா சண்டைக் காட்சிகளில் சிறப்பாகப் பரிணமிப்பார். இவர் பாடும் பாடல்களும் ஏனையோரால் சுலபமாகப் பாட முடியாதவையாகத்தான் இருக்கும்.

'ஜகதலப்பிரதாபன்' என்ற படத்தில் ஒரே மேடையில் பாடகனாகவும், வயலின், மிருதங்கம், கெஞ்சிரா, கொன்னக்கோல் மற்றும் மோர்சிங் வாசிப்பவனாகவும் மொத்தம் ஆறு நிலைகளையும் அட்டகாசமாகச் செய்து தனது ஆற்றலை வெளிப்படுத்தினார். இக் காட்சி படமாக்கப்பட்டவிதம் பார்ப்பவரை வெகுவாக ஈர்த்தது. இத்தகைய சாதனையை இதுவரை எவரும் செய்ததாகத் தெரியவில்லை.




## வாக்களித்ததற்குத் தண்டனை!

கடந்த மே மாதம் சியராலியோனில் 10 வருடங்களின் பின் தேர்தல் நடைபெற்று முடிந்தது. கடந்த 10 வருடங்களாக நடந்த உள்நாட்டுப் போரினால் ஆயிரக்கணக்கானோர் உயிர் இழந்துள்ளனர். உள்நாட்டுப் போரையடுத்து 17ஆயிரம் ஐ.நா. படைகள் அங்கு நிலை கொண்டுள்ளன. புரட்சிகர ஐக்கிய முன்னணி (Ruf) என்ற கெரில்லா இயக்கம் தேர்தலைப் பகிஷ்கரித்தது. 1992 ஆம் ஆண்டு தேர்தல் நடந்த போது Ruf அமைப்பு தேர்தலைப் பகிஷ்கரிக்குமாறு கோரியது. ஆனால், மக்கள் பெருவாரியாக வாக்களித்தார்கள். வாக்களித்த 5.4 மில்லியன் மக்களின் கைகள், கால்கள், காதுகள், மூக்குகள், உதடுகள் போன்ற உடல் உறுப்புகள் வெட்டப்பட்டன.

அதன் பின்னர் ஐ.நா. அமைப்பின் படைகள் சியராலியோனுக்கு அனுப்பப்பட்டு Ruf அமைப்பின் ஆயுதங்கள் களையப்பட்டன. உலகத்திலேயே மிகப் பயங்கரமான நாடுகளில் சியராலியோனும் ஒன்று என ஐ.நா. கணிப்பிட்டுள்ளது. உடல் உறுப்புக்களை இழந்தவர்களுக்கு ஐ.நா. உதவி புரிந்து வருகிறது. "இப்போது ஐ.நா. படை எங்களுடன் இருக்கிறது. அதனால் பயமின்றி வாக்களிக்க வந்தோம்" என்று ஏற்கனவே கைகளை இழந்தவர்கள் கடந்த தேர்தலின் போது அங்கு நின்ற வெளிநாட்டுப் பத்திரிகையாளர்களிடம் கூறினார்கள். "கைகளை வெட்டினாலும் வாக்குகளைப் போட்டு ஜனநாயகத்தை மீண்டும் கொண்டு வருவோம்" என்கிறார்கள் சியராலியோன் மக்கள். ■

## ஆதிமனிதன்



இன்றைய நேற்றைய மண்டையோடல்ல இது. 1.75 மில்லியன் ஆண்டுகளுக்கு முன்னர் வாழ்ந்த ஆ.....தி மனிதனின் மண்டையோடு. பழைய சோவியத் குடியரசுக்குச் சொந்தமான டிமானிசி என்ற இடத்திலிருந்து சமீபத்தில் ஆராய்ச்சியாளர்கள் இந்த மனித மண்டை ஓட்டைக் கண்டெடுத்தனர்.


பூர்வீக காலத்து மனிதனின் உருவ அமைப்பு குறித்து இந்த மண்டையோடு பல புதிய உண்மைகளைத் தருவதாக ஆராய்ச்சியாளர்கள் கூறுகின்றனர். 17 இலட்சம் ஆண்டுகளுக்கு முன்னர் வாழ்ந்த மனிதனின் மூளை தற்போதைய மனிதனின் மூளையை விடப் பெரியதாக இருந்ததெனக் கூறப்பட்டுள்ளது.

## ஓடுமீன் ஓட உறுமீன் வந்தாலும்....

இது வித்தியாசமான கொக்கு. இரத்தமும் சதையும், இறகும் உள்ள கொக்கு அல்ல இது. இரும்பினாலான கொக்கு. இதனை வடிவமைத்த கலைஞர், வீட்டில் பாவிக்கப்படும் சிறிய கத்தி, கரண்டி என்பவற்றின் உதவியுடன் இந்தக் கொக்கைச் செய்து முடித்திருக்கிறார். இறகுகளாகக் கரண்டிகள் பொருத்தப்பட்டுள்ளன. சொண்டிலும் கால்களிலும் இரும்புக் கம்பிகள், பின்புற இறகுகளாகக் கத்திகள், வித்தியாசமான சிந்தனை. தூரத்தில் வைத்துப் பார்ப்பவர்கள் நிஜக் கொக்குதான் என்று நினைக்கும் விதத்தில் தத்ரூபமாக அமைக்கப்பட்டிருக்கிறது இந்த கத்தி+கரண்டிக் கொக்கு. ஓடுமீன் ஓட உறுமீன் வந்தாலும் இந்தக் கொக்கு இப்படியேதான் இருக்கும்.



ஜப்பானின் சொனி எலக்ரோனிக் நிறுவனம் புதிதாக அறிமுகம் செய்திருக்கும் "சைபர் ஷொட் யூ" என்ற டிஜிட்டல் கெமராதான் இது. டோக்கியோ வர்த்தகக் கண்காட்சி ஒன்றில் கடந்த வாரம் இது காட்சிக்கு வைக்கப்பட்டிருந்தது. இந்த சைபர் ஷொட் யூவில் உள்ள விசேடத்தன்மை யாதெனில் இது வெறுமனே புகைப்படம் எடுக்கும் கெமரா மட்டுமல்ல. நமது வாழ்வின் அன்றாட நிகழ்வுகளுடன் தொடர்புபட்ட




தரவுகள் ஒவ்வொன்றையும் பதிவு செய்து வைக்கக் கூடிய 'மெமொறி' ஒன்றையும் இந்தக் கெமரா உள்ளடக்கியிருக்கிறது. இத்தனைக்கும் இது அளவிலோ நிறையிலோ கூடியதல்ல. இதன் மொத்த நிறை 87 கிராம் மாத்திரம்தான்.

# 'பாபா' கதை என்ன?

மெல்லத் தெரிகிறது ரஜனியின் மூடுமந்திரம்.

லாரி டிரைவராக வேலை பார்க்கும் ரஜனி, அந்த அரசியல்வாதி ஒருவரின் கையாட்களின் மீது கைவைத்து விடுகிறார்.

இதனால் கோபம் கொண்ட அந்த அரசியல்வாதியின் ஆட்கள் ரஜனியை அடி அடியென அடித்துத் துவைத்து மலையடிவாரத்தில் அவரது உடலை வீசி விடுகின்றனர்.

உயிருக்கு ஆபத்தான நிலையில் மயங்கிக் கிடக்கும் ரஜனியை சாமியார் ஒருவர் காப்பாற்றுகிறார்.

அதன் பின்னர் நாட்டிற்குள் வந்து சமூகத்துடன் பழக விரும்பாத ரஜனி சாமியாருடன் காட்டிலேயே வசிக்கிறார். இடையில் சாமியார் ஒரு புத்தகத்தை ரஜனியிடம் வழங்குகிறார். அந்தப் புத்தகத்தைப் படித்த ரஜனிக்கு புது சக்தி பிறக்கிறது.

சாமியாரும் அவரை மக்களுக்காகப் பாடுபடுமாறு கூறி நாட்டிற்குள் அனுப்பி வைக்கிறார்.

ஊருக்குள் வரும் 'பாபா' அநியாய ஆட்சி நடத்தும் அரசியல்வாதிகளிடமிருந்து நாட்டைக் காப்பாற்றத் தேர்தலில் நிற்கிறார். மக்களின் ஆதரவுடன் வெற்றி பெற்று முதல்வராகிறார்.

பின்னர் அப்பழுக்கற்ற அரசியல்வாதி ஒருவரிடம் நாட்டை ஒப்படைத்து விட்டு 'பாபா' மீண்டும் மலையேறுகிறார்.

'பாபா'வில் 'பெரியார் ராஜாஜியாகிறார்' என்றொரு பாடல் வருகிறது. இது பெரியாரை இழிவுபடுத்துவதாகக் கூறி பெரியார் தி.கவினர் ஆட்சேபம் தெரிவித்துள்ளனர். பாடல் வரிகளை நீக்கும் வரை போராடப் போவதாகவும் அறிவித்துள்ளனர். பாபாவில் ஆளும் கட்சிக்கு எதிராகவும் சில வசனங்கள் இடம் பெற்றிருப்பதாகக் கூறப்படுகிறது. இதனால் ஆளுமகட்சித் தரப்பிலிருந்தும் பாபாவிற்கு எதிர்ப்புக் கிளம்பலாம். மூன்று வருடங்கள் கழித்து ரிலீசாகும் 'பாபா'விற்கு இது சோதனை காலம்தான்.

# சினிவிசிட்

திரையுலக மறுபக்கம் 240 தமிழ்நாட்டிலிருந்து மயன்

## காதல் கோட்டை நாயகியின் ரேட்

'காதல் கோட்டை' நாயகி தொழிலதிபர்களுக்குக் கம்பனி கொடுப்பதில் கோடம்பாக்க வட்டாரத்தில் மிகவும் பிரபலமாகப் பேசப்படுபவர். சமீபத்தில் சேலத்தைச் சேர்ந்த லட்சமணன் தியேட்டர் சொந்தக்காரர் ஒருவர் சென்னை வந்து முன்னணி நடிகை ஒருவரின் பெயரைச் சொல்லி, அவரை அழைத்து வருமாறு தனது செயலாளரிடம் கூறியனுப்பினார்.

பஞ்சாப் இறக்குமதியான அந்த நடிகை தனக்கு வேறொரு அலுவலிருப்பதாகக் கூறி மறுத்துவிட்டார். நேராகக் 'காதல் கோட்டை' நாயகியின் வீட்டிற்குப் போனார் செயலாளர். விபரத்தைச் சொன்னார். ஒரு இரவிற்கு நாயகி கேட்ட தொகை வந்தவரை மூச்சுத் திணற வைத்தது. "அதிகமில்லை?" என்று பவ்வியமாகக் கேட்டார்.

தனக்குள்ள டிமாண்ட்டையும், இந்த நாட்களில் தான் எவ்வளவு பிஸியாக இருக்கிறேன் என்பதையும் வந்த செயலாளரிடம் விரிவாக விளங்கப்படுத்தினார் நாயகி.

இறுதியில் முப்பதாயிரம் ரூபாவிற்கு இருபக்கமும் உடன்பாட்டிற்கு வந்தனர். இந்த நேரத்தில் விதி விளையாடியது.

நாயகிக்கு வேறொரு 'முக்கிய' நாயகனிடமிருந்து அழைப்பு வந்தது. அங்கே பணமெல்லாம் கிடைக்காது. ஆனால், அடுத்த படத்திற்கு நடிக்கச் சான்ஸ் கிடைக்கலாம்!

நாயகிக்கு என்ன செய்வதென்று புரியவில்லை. நேராக லட்சமணனுடன் கதைத்து நிலைமையை விளக்கினார். சூடாகிப்போன மனிதர் ஒரு இலட்சம் வரை ரேட்டைக் கூட்டிவிட்டார். இரண்டாவதாக வந்த 'முக்கிய' நடிகரின் அழைப்பை மறந்தே போனார் நாயகி.



ஊர்மிளா

## திரியேட்டரில் குண்டு வீச்சு

கேரள மாநிலம் மூவாற்றுப்புழா நகரில் ஷகிலா திரைப்படம் ஓடிய தியேட்டரில் குண்டு வீசப்பட்டது. ஆபாசக் காட்சிக்கு எதிர்ப்புத் தெரிவித்து இக் குண்டு வீசப்பட்டிருக்கலாம் எனப் போலீசார் கருதுகின்றனர்.

மூவாற்றுப்புழா நகரில் உள்ள ஒரு தியேட்டரில் கவர்ச்சி நடிகை ஷகிலா நடித்த திரைப்படம் ஓடிக் கொண்டிருந்தது. மாலை ஆறு மணி அளவில் காட்சி தொடங்கிய சிறிது நேரத்தில் பயங்கரச் சத்தத்துடன் குண்டு ஒன்று வெடித்தது.

குண்டு வெடித்ததைத் தொடர்ந்து படம் பார்க்க வந்தவர்கள் நாலாபுறமும் சிதறி ஓடினர்.

## பொறாமைப் பொண்ணு

அழகு, இளமை, திறமை இன்ன பிற ப்ளஸ் பாயின்டுகள் இருந்தும் தமிழ்ப் படவுலகில் இன்னும் ஒரு இடத்தைப் பிடிக்க முடியாமல் அல்லாடிக் கொண்டிருக்கிறார் 'ப்ரண்ட்ஸ்' ஹீரோயின் விஜயலட்சுமி. காரணம் என்ன? இவருடன் இணைந்து நடித்த ஒரு நான்கெழுத்து கதாநாயகியிடம் கேட்ட போது, "அந்தப் பொண்ணுக்கு தலைக்கனம் ஜாஸ்தி. ஷூட்டிங் ஸ்பாட்ல சீனியர் நடிகையான என் கிட்ட கூட சரியாப் பழகாது. கர்வமா உட்கார்ந்துகிட்டு இருக்கும். மத்தவங்க வளர்ச்சியைப் பார்த்துப் பொறாமை அந்தப் பொண்ணுக்கு" என்று பொரிந்து தள்ளிவிட்டார். சரி, இந்த நடிகையைப் பற்றி இன்னொரு நடிகையிடம் கேட்டால்... இதுபோன்ற சர்ச்சைகளுக்கு கோலி வுட்டில் முடிவே கிடையாது என்பதுதான் உண்மை நிலைவரம்!

## முகப்பில்

அரவிந்த்

அஞ்சனா

படம்: காதல் சாம்ராஜ்ய...



பிரசாந்த்-கிரண் (படம்: வின்னர்)

## மினி சினி

★ ரம்யா கிருஷ்ணன் முக்கிய வேடத்தில் நடிக்கும் 'ஜெயா' படத்தில் துள்ளுவதோ இளமை செரீன் ஷெட்டியும் இன்னொரு கதாநாயகியாக நடிக்கிறார். சமீபத்தில் தனது தங்கை நிஷா விபசார வழக்கில் சிக்கியதால் 'பேமஸ்' ஆன வாணி விஸ்வநாத்தும் நடிக்கிறார். இதில் ரம்யா, வாணி, செரீனுக்கு இடையே பெரும் கவர்ச்சிப் போட்டி ஏற்பட்டுவிட்டதாம். கவர்ச்சியில் பின்னி எடுத்திருக்கிறாராம் செரீன்.

★ இசைஞானியின் இளைய வாரிசு யுவன்சங்கர் ராஜாவின் கைவசம் இப்போது 10க்கும் மேற்பட்ட படங்கள் உள்ளதாம். சமீபத்தில் இவர் இசையமைத்த 'காதல் சாம்ராஜ்யம்' காசெட்டுகள் விற்பனையில் சக்கைபோடு போட்டு வருகின்றன. படம் வெளிவரும் முன்பே பாடல்கள் பிரபலமாகி வருகின்றன.

★ முன்பெல்லாம் சூட்டிங் ஸ்பாட்டையே கலகலப்பாக்கி விடும் ஜோதிகா சமீபகாலமாக யாருடனும் பேசுவதில்லை. உடன் நடிப்பவர்கள் ஹலோ சொன்னால், பதிலுக்கு ஹலோ மட்டும் சொல்லிவிட்டு அமைதியாகிவிடுகிறார்.

★ அ.தி.மு.க எம்.பியும் நடிகருமான எஸ்.எஸ். சந்திரனின் மகன் ரோகித் கதாநாயகனாகிறார். படத்தின் பெயர் 'காதலுக்காக'...

★ விவேக் அமைதியாக ஒரு காரியம் செய்திருக்கிறார். ஜனாதிபதி தேர்தல் நடப்பதற்கு சில தினங்களுக்கு முன் டாக்டர் அப்துல் கலாமைச் சந்தித்து அவர் குறித்து தான் எழுதிய கவிதையை கொடுத்தார். அதைப் படித்த கலாம் மிகவும் மகிழ்ந்தாராம்.

★ 'என் மன வானில்' என்ற படத்தில் கூன் விழுந்த கிழவியாக நடிக்கிறார் வடிவேலு. ஏற்கனவே 'பட்டாளம்' படத்தில் பாவாடை தாவணியில் வந்து கிறங்கடித்தவர்தான் வடிவேலு.



ஷாம்-ஸ்நேகா

படம்: நீ ரொம்ப அழகாயிருக்கே

## ஸ்டார் நைட் பற்றி ஸ்டார்கள்

நடிகர் சங்கக் கடனைத் தீர்ப்பதற்காக மலேசியாவிலும், சிங்கப்பூரிலும் கலை நிகழ்ச்சிகளை நடத்திவிட்டுச் சென்னை திரும்பியுள்ளனர் திரையுலகத் தாரகைகள். நிகழ்ச்சியில் பங்கேற்று மகிழ்ந்த நடிக, நடிகைகள் அந்த நிகழ்ச்சி பற்றிக் கூறியிருப்பது.

**மனோரமா:-**

எனது நீண்ட திரை வாழ்வில்... ஏன்? தமிழ் திரையுலககம் தோன்றி இந்த 75 ஆண்டுகளில் இது வரை இதுபோன்ற எந்த நிகழ்ச்சியும் நடக்கவில்லை. நானும் பார்த்ததில்லை. இந்த வரலாறு காணாத நிகழ்ச்சியில் நான் மகிழ்ச்சியுடன் கலந்து கொண்டேன். நலிந்த நடிகர்களுக்காக நடந்த இந்த நிகழ்ச்சிகள் எல்லாமே நல்லபடியாக நடந்தன.

**ரம்யா கிருஷ்ணன்:-**

மிகவும் சிறந்த நிகழ்ச்சி. ரொம்ப இன்ட்ரஸ்ட்டிங்கா இருந்தது. ஏராளமான ரசிகர்கள் மத்தியில் புரோகிராம் நடந்தது சந்தோஷமாக இருந்தது. நாங்க எல்லாரும் ரொம்பவே என்ஜாய் பண்ணினோம்.

**ரம்பா:-**

தமிழ் சினிமா நடிகர், நடிகைகள் எல்லாரும் ஒத்துமையா இருக்காங்க. அப்படி இருக்கிறதுக்கு இந்த நிகழ்ச்சி நல்ல உதாரணம். மொத்தத்துல இது ஒரு எக்ஸலண்ட் புரோகிராம்.

**பிரபு-**

இப்படி ஒரு நிகழ்ச்சியை யாரும் பார்த்திருக்க முடியாது. அவ்வளவு சிறப்பாகவும் வெற்றிகரமாகவும் அந்த நிகழ்ச்சிகள் அமைந்திருந்தன.

**எஸ்.எஸ்.சந்திரன்:-**

புரட்சிக் கலைஞரின் இந்தப் புதுமையான நிகழ்ச்சி சிறப்பா நடந்துச்சு. ரொம்ப பிரமாண்டமான முறையில் நிகழ்ச்சிகள் நடந்தது. இனிமேல் வருஷத்துக்கு மலேசியா, சிங்கப்பூர் எந்தக் கலை நிகழ்ச்சியும் நடத்த வேண்டியதில்லை என்கிற அளவுக்குச் சிறப்பா நடந்துச்சுன்னா பாத்துக்குங்க.

## படத்தின் வெற்றிக்கு மாடுதான் காரணமா?

'தென்காசிப்பட்டணம்' படத்தில் காமெடியில் கலக்கியது தாங்கள்தான் என்ற நினைப்பில் இருக்கிறார்கள் நாட்டாமை நடிகரும் விச்சரிவாள் நடிகரும். இனி இதே மாதிரி தொடர்ந்து காமெடி கதைகளில்தான் நடிக்க வேண்டும் என்ற முடிவுக்கு வந்திருக்கிறார்களாம். ஆனால், உண்மை நிலைவரம் என்ன என்பது லேட்டாகத்தான் புரிந்திருக்கிறது. மாட்டை வைத்து எடுத்த காமெடி காட்சிகளுக்காகத்தான் படம் ஓடுகிறது என்ற பேச்சு பரவலாக எழுந்ததும் அப்-செட் ஆகிவிட்டார்களாம்.

## ஒருநாள் முன்னதாகவே 'பாபா' ரிலீஸ்

'பாபா' படம் ஆகஸ்ட் 15ஆம் தேதி ரிலீஸ் செய்யப்படும் என்று அறிவிப்பு வெளியானது. ஆனால் ஆகஸ்ட் 15க்கு ஒரு நாள் முன்பே வெளியிடுவது என படக்குழுவினர் முடிவு செய்துள்ளதாகத் தெரிகிறது. ஆகஸ்ட் 15 இல் அஷ்டமி வருவதால் இந்தப் புதிய ஏற்பாடாம்.

'பாபா' படப் பாடல் கேசட்டுகள் ஆகஸ்ட் 1 முதல் விற்பனை செய்யப்பட்டு வருகின்றன.

# விஜய்யை போட்டியாக நான் ஏற்கவில்லை — அஜித்

நடிகர் அஜித்குமார் தமிழக சஞ்சிகை ஒன்றுக்கு வழங்கியிருக்கும் பேட்டியில் தனக்கும் விஜய்க்கும் இடையில் உள்ள போட்டி, தனது எதிரிகள், இன்னுமுள்ள பல விடயங்கள் குறித்தும் கூறுகிறார். அந்தப் பேட்டியின் சில பகுதிகள்:



அமீஷாபட்டேல்

*** 'சிட்டிசன்', 'ரெட்' இரண்டில் எது வெற்றிப் படம்?**

"என்னைப் பொறுத்தவரைக்கும் ரெண்டுமே பெரிய வெற்றிப் படங்கள்தான். விமர்சனங்கள் வேற மாதிரி இருக்கலாம். அதுக்கு நாங்க காட்டின உழைப்பு, பட்ட கஷ்டம் எல்லாம் பெரிய அளவுக்கு இருந்திச்சு. அந்த வகையில் ரெண்டுமே பெரிய வெற்றிப் படங்கள் தான். சுப்ரமணி, ரெட்-னு அந்த கேரக்டர்ஸ் ரசிகர்களுக்கு ரொம்பப் பிடிச்சது. அது வந்த பிறகு என் ரசிகர் மன்ற பேனரில் எல்லாம் அந்த கெட்- அப் ஸ்டில்லைதான் போடறாங்க. அந்த அளவுக்கு அந்த செட்- அப் அவங்களைப் பாதிச்சிருக்கு. சிட்டிசன் மீனவர் மத்தியில் எனக்கு மரியாதையான இடத்தைத் தேடிக் கொடுத்திருக்கு."

*** நூறு சதவீதம் நீங்கள் நினைத்தது போல அமைந்த படம் எது?**

சந்தேகமில்லாமல் 'வாலி' தான். வெற்றியிலும் தரத்திலும் சொன்ன மாதிரி, எதிர்பார்த்த மாதிரி அமைஞ்ச படம் அது. மற்றது பர்சன்டேஜ் வித்தியாசப்பட்டிருக்கு.

*** 'ராஜா'தான் நான் நடிக்கும் கடைசி லவ் ஸ்டோரி. அதுபோல் இனி ஒருபோதும் நடிக்க மாட்டேன்" என்கிறீர்களாம். இப்படிப் பேசியதில் படத்தை வாங்கிய விநியோகஸ்தர்களுக்கு உங்கள் மீது கோபம் என்று பேசப்படுகிறதே..?**

'ராஜா' ஒரு லவ் ஸ்டோரி. அது போல் ஒரு முழுக்க முழுக்க லவ் ஸ்டோரியில நடிக்க மாட்டேன்னுதான் சொன்னேனே தவிர, 'ராஜா' படம் மாதிரின்னு சொல்லலை. அந்தப் படம் மட்டுமல்ல நடிக்கிற எந்தப் படமும் கதை பிடிச்சுத்தான் நடிக்கிறேன். படத்தைப் பற்றி குறைச்சி சொன்னதா எடுத்துக்கக் கூடாது. அப்படி யாரும் அர்த்தம் எடுத்துக்கிட்டிருந்தால் அது விஷமம். என் படம் முழுதும் இனி லவ் ஸ்டோரியா இருக்காது. கதையில கொஞ்சம் லவ் இருக்கும். அஜித் இனி அடிதடி ஆக்ஷன்தான். காதல் டூயட் ரொமான்ஸை விட்டுக் கொஞ்சம் வெளியே வரணும்னு நினைக்கிறேன். அதுக்கான நேரமும் ஸ்டோரியும் வந்தாச்சுன்னு நம்பறேன். அஜித்கிட்டே ஆடியன்ஸ் எதிர்பார்க்கிறது வேற! அதை ஒழுங்கா நான் தரலைன்னா என்னையும் அவங்க ஏமாத்திடுவாங்க.

*** நடிகர் சங்கம் நடத்தும் கலை நிகழ்ச்சியில் நீங்கள் கலந்து கொள்ளாதது பற்றி பல்வேறு விதமாகப் பேசப்படுகிறதே..?**

நான் ஸ்டேஜ்ல ஏறுறது இல்லை. பப்ளிக்ல பெர்பார்ம் பண்றதில்லைன்னு எல்லாருக்கும் தெரியும். இது சில வருஷங்களுக்கு முன்பே எடுக்கப்பட்ட முடிவு. என் நிலையை சங்கத் தலைவர்கிட்டே எடுத்துச் சொல்லிட்டேன். அத்தோடு இந்தப் பிரச்சனை முடிஞ்சு போச்சு. இத்தோடு இதை விட்டுடலாம்.

*** பொதுவாக உங்களைப் பற்றி நெகடிவா செய்திகள் வரும்போது என்ன தோன்றும்..?**

ஒரு காலத்துல கோபம் வரும். இப்ப இதுக்கு நேரெதிர். சந்தோஷம், பெருமைதான். காய்க்கிற மரம்தான் கல்லடிபடும். என்னைப் பற்றி விமர்சனம் வந்தா இப்ப கவலைப்படறது இல்லை. பாசிடிவா, நெகடிவா? நல்லதா கெட்டதாங்கிறதை நாம தீர்மானிக்க முடியாது. படிக்கிற ஜனங்கதான் முடிவு செய்யணும். இப்படி பப்ளிக் லைப்னு வந்தப்புறம் இது மாதிரி விமர்சனங்கள் வரத்தான் செய்யும். அதையெல்லாம் சேர்ந்ததுதான் இந்த பாப்புலாரிடி. இப்ப மீடியாவின் வளர்ச்சி அதிகம். எதுவா இருந்தாலும் அவங்களுக்கு நியூஸ்தான். அதிலுள்ள உண்மை என்னங்கிறது ஜனங்களுக்குத் தெரியும்.

*** தனக்குப் போட்டி அஜித் என்று விஜய் கூறியிருக்கிறாரே...?**

அவர் சொன்னவுடன் அவருக்கு நன்றி சொன்னேன். என்னை உயர்வா நினைச்சதுக்குச் சந்தோஷப்பட்டேன். ஆனால், அதை நான் ஏத்துக்கல்லை. ஏன்னா, நான் யாரையும் போட்டியா நினைக்கிறவனில்லை. அவரவர்க்கு ஓர் இடம் இருக்குன்னு நம்புறவன் நான்.

---

## அதிகரிக்கும் புதுமுக இறக்குமதி

சமீபத்தில் பூஜை போடப்பட்ட படங்களில் சுமார் எழுபது பேர் புதுமுகங்களாக நடித்துக் கொண்டிருக்கிறார்கள். இவர்களுள் பத்துப் பேர் பெண் முகங்கள். புதுமுகங்கள் நடிக்கும் படங்களில் டெக்னீஷியன்களுக்குத்தான் பெரும் பெரும் பிரச்சனையாக இருக்கிறதாம். ஷூட்டிங் ஸ்பாட்டில் தன் அருகில் நிற்பவர் படப்பிடிப்பைப் பார்க்க வந்தவரா? ஹீரோவா? என்று புரியாமல் குழம்பித் தவிக்கிறார்களாம். கடந்த ஒரு மாதத்தில் மட்டும் புதுமுகங்களை வைத்து முப்பது படங்கள் பூஜை போடப்பட்டுள்ளன. ஆடி மாதம் போனதும் இன்னும் இருபது புதுமுகப் படங்கள் பூஜை போட கியூவில் உள்ளன. அப்ப, டெக்னீஷியன்கள் இன்னும் கொஞ்சம் அதிகமாக தலையைப் பிய்ச்சுக்கப்போறாங்க!



பார்த்திபன்-மீனா

**இது கொஞ்சம் ஏடாகூடமான செய்தி:**

சமீபத்தில் கார் விபத்தில் காயமடைந்து மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட சிரிப்பழகி நடிகைக்கு ஸ்கேன் எடுத்த போது அவர் காப்பர்- டி என்ற கருத்தடைச் சாதனம் பொருத்தியிருப்பது தெரியவந்ததாம். இந்தச் செய்தியை வெளியில் கசியவிட்ட டாக்டர்கள் மீது கடுப்பில் இருக்கிறாராம் அந்த நடிகை.

---

## கில்லாடி கிரண்

எலக்ஷன் வந்தால் அரசியல்வாதிகள் வாக்கு சேகரிப்பதுபோல் சீசன் இருக்கும் போதே பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்பதில் தெளிவாகி விட்டார் 'ஜெமினி' பட ஹீரோயின். தப்புத் தப்பாக அட்வைஸ் செய்தவர்களை ஓரம் கட்டிவிட்டு புதுப் பாணியில் சான்ஸ் பிடிக்க ஆரம்பித்து விட்டார். முன்னணி ஹீரோக்கள், டைரக்டர்கள், தயாரிப்பாளர்களுக்கு இவரே ஃபோன் செய்கிறார். சிரித்துச் சிரித்து மணிக்கணக்கில் இனிக்க இனிக்கப் பேசுகிறார். அப்புறம்..தான் தங்கியிருக்கும் ஓட்டலுக்கு அழைத்து மும்பை ஸ்டைலில் விருந்தும் கொடுக்கிறாராம். இப்படி விருந்து கொடுத்து, ஸ்லிம் நடிகைக்குப் போக இருந்த இரண்டு பட வாய்ப்புக்களையும் 'ஜோ' நடிகைக்குப் போக இருந்த பட வாய்ப்பையும் தட்டிப் பறித்துக் கொண்டாராம். "இவ்வளவு குறுகிய காலத்தில் இத்தனை புத்திசாலிப் பெண்ணை நான் பார்த்ததில்லை" என்று புகழ்ந்து தள்ளுகிறார் ஒரு தயாரிப்பாளர்.



சத்யராஜ்-மும்தாஜ்

---

## தெலுங்கு நடிகையிடம் 'வழியும்' டைரக்டர்

சௌந்தர்யமான அந்தத் தெலுங்கு நடிகையிடம் கொட்டிக் கிடக்கும் அழகு புதுமைப்பித்த டைரக்டரைப் பாடாய்ப் படுத்துகிறதாம். இருவரும் சேர்ந்து நடித்து வெளிவரப் போகும் படம் தொடங்கியதிலிருந்தே நடிகையிடம் காதல் மொழி பேசி கலாய்த்திருக்கிறார். இந்த விஷயத்தில் நடிகை பல நடிகர்களையும் சமாளித்து அனுபவம் பெற்றவர் என்பதால் வலையில் சிக்காமல் தப்பிவிட்டார். அப்படியும் நடிகர் விடுவதாக இல்லை. சமீபத்தில் அடையாறு போட் கிளப்பில நடிகை இருப்பதைத் தெரிந்து கொண்டு ஓடோடி வந்திருக்கிறார். நடிகையிடம் தன்னிடமிருக்கும் பொது அறிவையெல்லாம் கொட்டி அசத்தப் பார்த்தாராம். நடிகைக்கு கொட்டாவி வந்ததுதான் மிச்சம். இனியும் தாங்காது என தன் அந்தரங்க ஆசையைச் சொல்ல, நடிகையோ அவன் இவன் என ஏக வசனத்தில் பேசிவிட்டு "முதலில் உங்க மனைவிக்கு நல்ல கணவனாக இருக்கப் பாருங்க" என்று சொல்லி விரட்டிவிட்டாராம்.

---

## ரதியைத் தேடித்திரியும் மனோஜ்

'பல்லவன்' படத்தில் மனோஜுக்கு ஜோடியாக நடிக்கிறார் ரதி. ஷூட்டிங்கின்போது காதல் காட்சிகளில் நடிகையுடன் நிஜமாகவே ஒன்றிப் போய் விடுகிறாராம். இவர் தொல்லை தாங்காமல் நடிகை விலகிப் போனாலும் தேடி வந்து லொள்ளு பண்ணுகிறாராம். ஒரு வழியாகத் தப்பித்த நடிகை சேரனுடன் 'சொல்ல மறந்த கதை'யில் நடிக்க நெய்வேலி போனால் அங்கும் தேடி வந்துவிட்டாராம். "ஷூட்டிங் நடந்த இடத்துக்குப் போனது உண்மைதான். எனக்கும் அவருக்கும் காதல், அது இது என்று கதை கட்டி விடுவதா? என்னைப் பற்றியும் ரதியைப் பற்றியும் வேண்டுமென்றே வதந்தியைப் பரப்பி வருகிறார் ஒரு டைரக்டர். பேசாமல் படத்தில் நடித்தோமா வந்தோமா என்று இல்லாமல் பிறர் விஷயத்தில் மூக்கை நுழைப்பது நியாயமா?" என்பது மனோஜின் வாதம். மனோஜ் நடிக்கும் 'எம்.ஏ.கோல்டு மெடல்' என்ற அடுத்த படத்துக்கும் ரதியைத்தான் ஹீரோயினாக்க வேண்டும் என்று அடம்பிடிப்பது எந்த ஊர் நியாயம்?

---

## விவேக் தரும் விளக்கம்

தமிழ்ப் படங்களுக்கு ஆங்கிலப் பெயர் வைப்பதா? என்ற சர்ச்சைக்கு விவேக் தரும் வித்தியாசமான விளக்கம் இது. "'யூத்' படத்துக்குத் தமிழில் 'இளமை'ன்னு பெயர் வச்சிருக்கலாம். இளமைங்கற தலைப்பு என்ன தோணுது தெரியுமா? ஷகிலா மெயின் ரோல்ல பண்ற மாதிரியும், விஜய்யும் நானும் ஓரமா நடிக்கிற மாதிரியும் வந்துடும். அதனாலதான் யூத்'ன்னே பேர் வச்சிருக்காங்க" என்றார். சில பெயர்களைத் தமிழில் மொழி பெயர்க்கும்போது இப்படியொரு சிக்கலான அர்த்தம் வரக் காரணமே, எங்கும் பரவிக் கிடக்கும் 'பலான' இளமைப் படங்களின் பாதிப்புத்தான்.

# தேன்கிண்ணம்

## தந்தை

அன்னை பாடிய தாலாட்டும்
தமிழில் உண்டு
என் தந்தையே...
உங்களைப் பாராட்ட
எந்த மொழியுண்டு.
மார்போடு அணைத்து
அன்பை ஊட்டி
பாசப் பாலை வார்த்து
எம்மைப் பண்படுத்தியவர் நீர்தானே!
எம் தொட்டிலிலே - நீர்
தொலை தூரக் கனவுகளை
சுமந்து உங்களது
இன்பங்களை மட்டுமே
எம்மோடு பகிர்ந்து
அறிவின் நிலையையும்
அன்பின் உயிலையும்
உலகின் சாயலையும்
எமக்கு விமோசனம் செய்தவரே.
நான் கண்டிராத பாரதியும்
நான் பேசியிராத காந்தியும்
எம் தூதரின் வழியும்
தெளிவாக்கப்பட்டது உம்மாலே...
நான் பார்க்கும் விழியும்
என் மொழியும் உங்கள்
எண்ணங்களின் வழியே...
ஆனாலும்- அது நீர் தந்த
உயிருக்கு உள்ளடங்குமா...
கண்ணீர் நீர் சிந்தி - எம்
கண்களை காத்தீரே
உயிரை உருகிடச் செய்து
எம் உயர்வுக்கு உயில் செய்தீரே...!
எம்மைக்காக்கும் உமை
என்னவென்று காப்போம்.
என் தந்தையே.

சியானா சனூன், கல்ஹின்னை.

## சமாதான பொன் மகுடம்!

சமர் கறையான்
அரித்துப் போட்ட
தேசப் புத்தகத்தின்
அமைதிப் பக்கங்கள்
காணமால்
போய்விட்டன.

நேசக் கரங்கோர்த்து
நடைபோட்ட நம்
பாசப் பாதைகளில்
மோசக் குழிதோண்டி
வைத்தவர்களால்தான்
புதைந்து போனது
இன ஐக்கியம்.

விதைத்த குண்டுகளால்
முளைத்த
முடங்களை
காய்கறியாகவும்,
புதைத்த மனிதக்
குழி தோண்டுகையில்
எலும்புக் கூடுகள்
கிழங்குகளாகவும்
அறுவடையாகும்
கொடிய வெள்ளாமைதானே
யுத்தம்.

பேச்சுவார்த்தை
நத்தை வரும்
வழிகளிலெல்லாம்
ஆர்ப்பாட்ட
மழை பெய்து
வழுக்கச் செய்யும்
துயரங்களைத் தானே
இதுவரைக்
கண்டிருக்கின்றோம்.

குருதிக்காற்றை
வடிகட்ட வந்த
யுத்த நிறுத்தத்திற்காக
நெஞ்சில் பூத்திருக்கும்
சந்தோச பூக்களுக்கு
இது வசந்த காலம்.

எப்போதும் இங்கே
தீர்மானத்திற்கு
ஒவ்வாத
தீர்மானங்களைத்
தீர்மானிப்பதால்தான்
இப்போதும்
உயிர்களின்
வேர் வரையில்
ஊடுருவி நிற்கிறது
அச்சம்!

வயிற்று வலிக்கு
மருந்து குடித்து
ஏற்பட்ட தலைவலியால்
கால் நொண்டும்
குழப்பமான வாழ்க்கை
இனி எதற்கு?

உங்களையும்
எங்களையும்
கொன்று குவிக்கையில்
கூட்டமாய் வந்து
கொத்தித் தின்ன
காக்கைகளின்
ஒற்றுமையைக் கொஞ்சம்
கவனித்துப் பார்ப்போம்.

ஊருக்கு ஒரு
மயானமிருந்தால்
மட்டும் போதும்
பொது மயானமாய்
நாடே எதற்கு?

உங்களுக்கும்
எங்களுக்கும்
எட்டாத நிலவுக்காக
இரத்தம் சிந்துவதை
விட்டு விட்டு
நம் குடிசைக்குள்
ஒளியூட்டும் சின்ன
மெழுகுவர்த்திக்காக
முத்தமிட்டுக் கொள்வோம்!

இங்கே
சமாதானத்திற்கான
ஒத்திகையை
திறம்பட
முடித்துக்கொண்டு
தாய்லாந்து மேடையில்
வெற்றியோடு
அரங்கேற்றுங்கள்
போதும்.

நேற்றைய
மின்னலில் இழந்த
கண்களுக்கு
நாளை ஒளியூட்டும்
உங்கள் சேவைக்காய்
இன்று சூட்டுகின்ற
இந்த பொன் மகுடம்
உங்கள் சிரங்களில்
என்றும்
அலங்காரமாகட்டும்!

மெய்யன் நட்ராஜ்,
தோஹா, கத்தார்.

## குழந்தைகள்

அவள் இதழ்களை கொடுத்தாள்
அவன் இளமையைப்
படம் வரைந்தான்
அந்த இரவுக்குள் துலங்கிய
இன்பக் கனவுகள்
விட்டுச் சென்ற வார்த்தை
குழந்தை

ரி.அசோக், கொழும்பு-13.

## விழிப்பாகத்தான் இருக்கிறோம்

சமாதானப் பாதை
சரியாகப் பதிக்கப்படாவிட்டால்
சமதர்மப் பயணம்
சதிகாரர் பாதையைச்
சந்திக்கலாம்.

வஞ்சகம் நஞ்சு
நெஞ்சில் நிறைந்த
வாக்குப் பிச்சைக்காரர்
இனவாதச் செல்வந்தர்
இருக்கும்வரை
சமதர்மப் பயணம்
கானல் நீர்போல்...

போர் இன்றின்
ஆதாயம் சேதாரமென்று
இவர்கள்
ஆதங்கப்படும் வரை
சமாதானப் பாதை
இப் போதைக்கு
சகதி என்று நாம்
சகித்திருப்போம்.

பாதை திறந்தது
உபாதை பறந்தது
என்று-
சந்தோஷ அலை எழுப்ப
இங்கே-
சந்தேகம் இன்னும்
சரியாகத் தீரவில்லை.
சரித்திரத்தின்
ஈரமின்னும் காயவில்லை.

ஊறல் புண்
மாறிப் போய்விட்டதென்று
மறந்தும் நாங்கள்
மருந்தின்றி
ஆறிப் படுக்கமாட்டோம்.
விருந்திலும் நாங்கள்
விழிப்பாகத்தான் இருக்கிறோம்.

ஒரு விடி பொழுதின்
கடைசிக் கிரணமும்
காலடியில் விழும்வரை
கண்மூட மாட்டோம்.

உள்ளுக்குள் விடிவின்றி
உதடுகள் விரிந்தால்
உதயம் தெளியுமோ?

ராணி - மகாலிங்கம், சாவகச்சேரி.

## விழியில் வடியும் குருதி...

கண்மணி
இன்னும் நம்பிக்கை
இருக்கிறது
உன்னிடமிருந்து
கடதாசி வருமென்று...!
பேனா மை
தீர்ந்து போன போதும்
வெள்ளைக் கடதாசியில்
கைவிரல் பதித்தனுப்புவாய்...!
••
பூர்வீகம் மீளும் நாளில்
பள்ளி மழலைகளின்
பிஞ்சு விரல்களின்- பிரிவு
அசைதலோடும்,
கன்னக் குழிக்குள்
பிரிவுச் சுமைகள்
நிறைந்து,
உணர்வுகள் உயிரிழந்து,
ஜடமாய் உட்காந்திருந்த
பிரியமானவனிடம்- நீ
படும்பாடுகள் அத்தனையையும்
ஒரே மூச்சில்
கொட்டித் தீர்த்தாய்:
பிஞ்சு மழலை போல
மார்பில் புதைந்து
அழுதாய்:
விடை பெற்றுச் சென்றாய்!
••
சினேகிதனின்
பிரிவினால் ஆன
துயரத்தினால்
பூர்வீகம் மீளும்
ஆனந்தத்தை இழந்தாய்!
••
நினைவுகளை
நெஞ்சுக்குள் புதைத்து
விழிகளுக்கு விடை
கொடுத்தாய்!
••
மனது உடைந்து
கனவுகள் சமாதியடைந்தன!
••
உன் காற்கொலுசு சப்தங்கள்
முகாரி ராகத்தில்
பிரவாகிக்க,
இதயங்கள் ததும்ப
விழிகளுக்குள் நீர் சுரந்தது!
••
உனைச் சூழவிருந்த
சொந்த பந்தங்களை
மறந்து
விம்மியழுதாய்
அந்த அதிகாலை வேளை...
பனித் துளிகள்
வயசுக்கு வரு முன்னர்
கண்ணீர் துளிகளால்
பாவாடை கட்டிக் கொண்டது!
••
பூர்வீகமா?
புகும் தேசமா?
மனது தடுமாற
விடைகள் தேடி
நடைப் பிணமாய்ச் சென்றாய்!
••
ஆதலினால்...
கண்மணி இன்னும் நம்பிக்கை
இருக்கிறது
உன்னிடமிருந்து
கடதாசி வருமென்று...!
பேனா மை
தீர்ந்து போனபோதும்
வெள்ளைக் கடதாசியில்
கை விரல் பதித்தனுப்புவாய்!!

முகம்மது ஹாரீத்,
அட்டாளைச்சேனை-11.

## பேனா நண்பர்கள்



பெயர்: ஆர். சிந்து
வயது: --
முகவரி:
கம்பஸ் லேன்,
திருநெல்வேலி தெற்கு,
யாழ்ப்பாணம்.
பொழுது போக்கு:
பத்திரிகை.



பெயர்:
எஸ். கோபுராஜ்
வயது: 20
முகவரி:
499, நுவரெலிய வீதி,
புஸ்ஸல்லாவ.
பொழுது போக்கு:
பத்திரிகை, வானொலி.



பெயர்:
ஜி. ராம்குமார்
வயது: 19
முகவரி:
ஆர்.பி.ஸி. கதுருவெல,
பொலன்னறுவ.
பொழுது போக்கு:
கிரிக்கெட்,
வானொலி.

## நினைத்து, நினைத்து சிரிக்க

**வ**யசான தாத்தா, பாட்டி, இருபதில் கல்யாணமாகி, அறுபது வருடம் ஒன்றாக வாழ்ந்து, ஒன்றாகவே இறந்து போனார்கள். இந்தச் சாதனைக்காகவே இரண்டு பேருக்கும் சொர்க்கம்!

அங்கே சகல வசதியும் கூடிய பங்களா போன்ற ஒரு வீட்டைக் காட்டி, "இனிமேல் நீங்கள் இரண்டு பேரும் இங்கேதான் இருக்கப் போகிறீர்கள்..." என்றார் சொர்க்கத்தின் பொறுப்பாளர்.

"அது சரி... வாடகை எம்புட்டுங்க...?" என்றார் தாத்தா.

"வாடகையெல்லாம் கிடையாது... இலவசம்தான்..."

வீட்டுக்குப் பின்னால் பச்சைப் பசேல் என்று விரிந்து பரந்த புல்வெளி. அதில் அழகான கால்ஃப் விளையாட்டு மைதானம். "இங்கே விளையாட என்ன கட்டணம்...?" என்று விசாரித்தார் தாத்தா.

"எல்லாம் இலவசம்! சொர்க்கத்தில் எதற்கும் பணம் கட்ட வேண்டியதில்லை..." என்று பதில் வந்தது.

பக்கத்தில் பெரிய கட்டடம். உள்ளே சாப்பாட்டு மேஜையில் விதவிதமான பதார்த்தங்கள்...

"சாப்பாடடுக்கு எவ்வளவு...?" என்று தாத்தா கேட்கும் முன்னாலேயே, "அதான் சொன்னோமில்லே... இலவசம்தான் எல்லாம்....." என்றார்கள்.

"ஆமா...இதில் உப்பு குறைவா சீனி சேர்க்காம ஏதாவது சாப்பிட உண்டா...?" என்று தாத்தா விடாமல் விசாரித்தார். பூலோகத்தில் எல்லா வியாதியும் வந்து, அவதிப்பட்டு பாட்டி கையால் சதா பத்தியச் சாப்பாடு சாப்பிட்ட பழக்கத்தை மறக்க முடியவில்லை அவரால்!

"கவலையே படாதீங்க... இங்கே வெச்சிருக்கிற எதை வேணுமானாலும் சாப்பிடலாம். எவ்வளவு வேணுமானாலும் சாப்பிடலாம்...நோயே அண்டாது!"

அடுத்த கணம், பாட்டியைப் பார்த்து தாத்தா கத்தினார். "அடிப்பாவி! எல்லாத்தையும் கெடுத்தியே... பத்தியச் சாப்பாடு போடாம, கண்டதையும் திங்கவிட்டிருந்தா... பத்து வருஷம் முன்னாலேயே இங்கே வந்திருப்பேனே!"

**அ**வர் ஒரு பெரிய பணக்காரர். நிறைய மூடநம்பிக்கை அவருக்கு. சாகக் கிடக்கும்போது தன்னுடைய மூன்று அருமை மகன்களைக் கூப்பிட்டு ஒவ்வொருவனிடமும் ஒரு துணி மூட்டையைக் கொடுத்தார்.

"இது ஒவ்வொண்ணிலேயும் ஒரு லட்ச ரூபாய் இருக்கு... என்னைப் புதைக்கும்போது மூணு பேரும் பணமூட்டைகளைக் குழிக்குள்ளே போட்டுட்டா. செத்ததுக்கு அப்பறம் எனக்கு உபயோகமா இருக்கும்..."

அவர் இறந்து போனார். புதைத்துவிட்டு வரும்போது மூத்த மகன் தலையைக் கவிழ்ந்தபடி சொன்னான்... "எனக்குக் கொஞ்சம் பணத்தட்டுப்பாடு... நான் எழுபதாயிரம்தான் குழிக்குள்ளே மூட்டையிலே வெச்சுப் போட்டேன்..."

இரண்டாமவன் கண்ணீரோடு சொன்னான்...

"எனக்கு அதைவிட மோசமான பணக்கஷ்டம். நான் ஐம்பதாயிரம்தான் போட்டேன்..."

மூன்றாவது மகன் கோபத்தோடு சொன்னான்... "சே... நீங்க எல்லாம் அப்பாவுக்கு மகன்கள்னு சொல்லிக்கவே அருகதையில்லை! நம்பிக்கைத் துரோகம் செஞ்சுட்டீங்க... நான் பணத்தை பாங்க்கிலே பத்திரமா வைப்புச் செய்து முழுத்தொகைக்கும் தனித்தனியா "செக்" எழுதி உள்ளே போட்டிருக்கேன்... அப்பாவுக்கு எப்ப தேவையானாலும் எவ்வளவு தேவையோ எடுத்து உபயோகிச்சுக்கட்டும்... பாவம்..."

## கவிதை நெஞ்சங்களுக்கு!

இவ்வாரச் சிறப்புக் கவிதைகளாக மூன்று தமிழக கவிஞர்களின் கவிதைகள் "புதிய பார்வை" சஞ்சிகையிலிருந்து நன்றியுடன் பிரசுரமாகின்றன.

## இரவின் விபத்து

என்னுள் ஒரு புகைவண்டி
ரயில் பூச்சி போல்
★★
கனவில் நிற்கிறது.
தூக்கத்தில் ஒடுகிறது.
★★
வண்டியின் நகர்வு, காலங்களை
தாண்டி பிம்பங்களை
தேடுகிறது.
★★
இரவில் புகை வண்டியின்
கதவுகள் திறக்கின்றன.
வெள்ளை குதிரைகளோடு மணப்
பெண்கள் பாடித் திரிகின்றார்கள்.
★★
ரயிலின் வேகத்தோடு
சுடுகாடும்.
★★
குழந்தைகள் விளையாடுகின்றனர்.
தாத்தாக்களின் எலும்புகளைக்
கொண்டு.
★★
பெரும் கற்சிலைகள் பாய்ந்து
வருகின்றன மஞ்சளாக.
★★
சிறு குழந்தை பிச்சை எடுக்கிறது
பச்சையாக,
★★
அதிகாலை பூத்த மலரை நசுக்கி
விட்டு நகர்கிறது கடைசிப் பெட்டி.
★★
இறந்த நகரத்தில் தண்டோரா
அடிக்கிறான் மீசைக்காரன்
★★
ரயிலின் புகை கன்னிப் பெண்களின்
மூச்சு.
★★
கடல் சுவர்களில் இசை கலைஞர்களின்
நினைவுகள் நீலமாக.
★★
தாத்தாவின் மரண மூச்சு,
ஒளியாக ஊடுருவுகிறது.
★★
நெருப்பு விழாவில் பாடித் திரிகின்றது
காட்டு எருமை.
★★
இசையின் மிச்சம் கடலின் சலசலப்பில்.
இரவின் கடைசி விபத்து.
★★
விழித்து பார்க்கிறேன், தெருவில்,
என் வீட்டில் வாசல் இல்லை.
★★
எங்கோ பிள்ளைத்தாட்சியின்
பாடல்-கனவாக, மழையாக, மின்னலாக
நட்சத்திரங்களையும் நகர்த்துகிறது.
★★
ரயிலில் அடிபட்ட தேவதையின்
கால்சட்டை ஆல மரத்தின் அருகில்.
★★
என்னுள் இன்னும் வண்ணங்கள்,
வார்த்தைகள் கருகிக் கொண்டு
இருக்கின்றன.

-ரஃபீக்.

## தாயின் இதயம்

பச்சைப் புல்வெளியில் அழகு இருக்கிறது!
பருத்த மரங்களில் உறுதி இருக்கிறது!
கோடை மழைச் சாரலில் குளிர்ச்சி இருக்கிறது!
குதூகலக் காற்றில் இன்னிசை இருக்கிறது!

ஆடும் ரோஜாச் செடியில் அழகு இருக்கிறது!
அழகிய பனித்துளியில் புதுமை இருக்கிறது!
சிட்டுக்குருவியின் பாட்டில் இனிமை இருக்கிறது!
செவ்வான் விரிப்பில் அமைதி இருக்கிறது!

இயற்கையிடம் இந்தக் குணங்களைப் பார்க்க முடிகிறது
ஆனால் தனித்தனியே தனித்தனியேதான்!
எல்லாவற்றையும் ஒருங்கே அடக்கி வைத்திருப்பது
ஏதுமில்லை- ஒரு தாயின் இதயத்தைத் தவிர.

-டேன்னா மார்டின் கெய்சா
தமிழில் ஜெ.கமலநாதன்

## சிறப்புக் கவிதை

### உள்ளின் வெளி...

உணர்வுகளற்று...
பெருஞ்சுவர் போல்
நிற்பதில்
அர்த்தமில்லை.

நிறங்கள் குழைத்து
வெளிப்படுத்துதலும்
அர்த்த புஷ்டிகளை
கோர்ப்பதும்

முக்கியமெனப்படும்-
அதது தோதிற்கு
திரிய விட்டு
கொட்டிலில் அடைக்கும்
மந்தைகள் போல்
சேர்த்தல் அவசியப்படும்-

உள்ளிருக்கும் உலகம்
வெளியேற்றப்பட வேண்டும்...
பழமை சிதையாது
அதே சமயம் நவீனமாய்-

இலைகளில்
புது நிறங்கள் தீட்டலாம்
இலையே இல்லாது
செய்து விடலாகாது
என்பது போல்-

நெஞ்சுக்கும்
மனசுக்குமான
தூரம் போல்தான்
இருக்கின்றதிந்த
உணர்வுகள்
எங்கும் வியாபித்து.

புத்தகன்.



# லேடீஸ் ஸ்பெஷல்

லேடீஸ் ஸ்பெஷல் லேடீஸ் ஸ்பெஷல் லேடீஸ் ஸ்பெஷல் லேடீஸ் ஸ்பெஷல் லேடீஸ் ஸ்பெஷல் லேடீஸ் ஸ்பெஷல்

## கர்ப்பிணிகள் கவனிக்க...

கர்ப்பம் என்று நிச்சயித்த பின் உதிரப்போக்கு ஏற்பட்டால் என்னவாக இருக்கலாம்?

1.கருச்சிதைவு ஏற்படக்கூடிய ஆபத்து.

கரு நன்றாக உயிர்த்துடிப்போடு இருக்கும்போதே ஒரு சிலருக்கு ரத்தக் கசிவு ஏற்படுவது உண்டு. கரு நன்றாக இருக்கிறதா, இல்லையா, வேறு ஏதாவது பிரச்சனைகள் உள்ளதா என்று தெரிய அவசியம் ஸ்கேன் தேவைப்படுகிறது. ஸ்கேன் எடுத்த பின்தான் கருவின் நிலைமை தெரியும். இதனை வைத்துத்தான் என்ன வைத்தியம் செய்ய வேண்டும் என்று முடிவெடுக்க முடியும்.

கரு நன்றாக இருந்தால் அதிக ரத்தப்போக்கோ வலியோ ஏற்படாது. லேசாக அவ்வப்போது பட்டு நின்றுவிடும். இவ்வாறு இருப்பவர்கள் கடினமான வேலைகளையும், பயணம் செய்வதையும், ஒரு சில வாரங்களுக்கு கணவரோடு தொடர்பு வைத்துக் கொள்வதையும் தவிர்ப்பது நல்லது.

தற்சமயம் கரு நன்றாக இருந்தாலும் பின்னால் ஒரு சிலருக்கு கருச்சதைவு ஆகிவிடும். சிலருக்குக் கரு நன்றாக வளர்ந்து முழுமையடையும்.

தவிர்க்க முடியாத கருச்சிதைவு, அரைகுறை கருச்சிதைவு லேசாக ஆரம்பிக்கும் இரத்தப்போக்கு திடீரென்று அதிகமாகி வலி ஏற்பட்டு கரு வெளியேற ஆரம்பித்துவிடும்.

சில சமயங்களில் அரைகுறையாகப் பாதி வெளியேறி பாதி சிதைந்த நிலையில் கர்ப்பப்பையிலேயே நின்றுவிடும். இவ்வாறு இருப்பவர்கள் டாக்டரிடம் சென்று கட்டாயம் கர்ப்பப்பையைச் சுத்தம் செய்து கொள்ள வேண்டும்.

**அறியப்படாத கருச்சிதைவு**

ஒரு சிலருக்கு உதிரப்போக்கு லேசாக ஏற்பட்டு நின்றுவிடும். அதோடு வாந்தி மயக்கமும் நின்றுவிடும். பிரச்சனைகள் ஏதுமில்லாததால் டாக்டரிடம் சென்று காட்டவும்மாட்டார்கள். ஸ்கேனும் செய்யமாட்டார்கள்.

சில வாரங்கள் அல்லது மாதங்கள் கழித்துப் பார்த்தால் கரு வளராமல் அப்படியே இருப்பது தெரிய வரும். இவ்வாறு இருந்தால், இரத்தப்போக்கு அப்போது இல்லாவிட்டாலும் கர்ப்பப் பையைச் சுத்தம் செய்து கொள்வது நல்லது.

**முத்துப் பிள்ளை**

ஒரு சிலருக்குக் கருத்தரித்த சில நாட்களிலேயே கருச்சிதைவு ஏற்பட்டு மறைந்துவிடும். கருவுக்கு ஊட்டமளிக்கும் நஞ்சு என்னும் உறுப்பு சிறுசிறு நீர்க்கொப்புளங்களாக மாறிவிடும். இது முந்தைய பிரச்சனைகளைப் போல் அல்லாமல் சற்றுக் கவலைக்குரிய விஷயம்.

இந்த நஞ்சுக் கொப்பளம் இரத்தத்தின் மூலம், மூளை, நுரையீரல், ஈரல் போன்றவற்றிற்குப் பரவக்கூடிய வாய்ப்புகள் உண்டு. எனவே இவர்கள் கர்ப்பப்பையைச் சுத்தம் செய்து கொள்வதோடு நில்லாமல், இந்த வியாதியின் பாதிப்பு தீர்ந்துவிட்டதா என்று மூன்று மாதம் வரை அவ்வப்போது இரத்தப் பரிசோதனை செய்து கொள்ள வேண்டும்.

இவர்கள் குறைந்த பட்சம் ஆறு மாதங்களாவது கருத்தரிப்பதைத் தள்ளிப் போட வேண்டும். மறுபடியும் கருத்தரித்தவுடன் ஸ்கேன் செய்து கரு நன்றாக இருக்கிறதா என்று கண்டறிய வேண்டும். ஏனென்றால் ஒரு சிலருக்கு மறுபடியும் வருவதற்கு வாய்ப்பு உண்டு.

எனவே இதிலிருந்து நீங்கள் அறிந்து கொள்ள வேண்டியது

1. மாதவிடாய் வரவில்லையென்றால் கர்ப்பமா இல்லையா என்று முதலிலேயே அறிந்து கொள்வது நல்லது.

2. கர்ப்பம் என்று தெரிந்த பிறகு சிறிது உதிரப்போக்கு ஏற்பட்டால் கூட ஸ்கேன் செய்து பார்த்து அதற்குரிய வைத்தியம் செய்து கொள்ள வேண்டும்.

3. முத்துப்பிள்ளை கர்ப்பம் என்றால் அது சுத்தமாகச் சரியாகும்வரை மருத்துவரின் கண்காணிப்பில் இருக்க வேண்டும். அடிக்கடி மருத்துவப் பரிசோதனை மேற்கொள்வது அவசியம்.


செல்வாஸின் 7

சல்வார் பரிசுப் போட்டி

நவநாகரீக மங்கையர்
தரமான சல்வார்களுக்கு
தலைநகரில் நாடும் ஒரே இடம்

SELVAS

No. 4, Nelson Place (Near H.N.B)
Wellawatta, Colombo-06. Tel: 552328

மகளிர் மட்டும் : மகளிர் மட்டும்



★ ஒவ்வொரு வாரமும் ஒரு அதிஷ்டசாலி தேர்ந்தெடுக்கப்படுவார். வாரத்தில் ஒருவருக்கு மட்டுமே சல்வார் பரிசு வழங்கப்படும்.
★ கீழேயுள்ள கூப்பனை நிரப்பி தபால் அட்டையில் ஒட்டி அனுப்பினால் போதுமானது.
(பதிவுத் தபால்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா)
★ ஒருவர் ஒன்றுக்கு மேற்பட்ட கூப்பன்களையும் அனுப்பலாம்.

செல்வாஸின் வாரம் ஒரு சல்வார் Ae

பெயர்:.........................

முகவரி:.........................

.........................

தொழில்:.........................

உண்மை—நேர்மை—வெளிப்படைத் தன்மை

பி.கு:
அதிஷ்டசாலியாக தெரிவு செய்யப்படுகிறவர்கள் தமது புகைப்படங்களை அனுப்பினால் பிரசுரிக்க உதவும்.

கூப்பனை அனுப்பிவைக்க வேண்டிய இறுதித் திகதி 17-08-2002

அனுப்பவேண்டிய முகவரி:- 'செல்வாஸின் வாரம் ஒரு சல்வார்', தினமுரசு வாரமலர், த.பெ.இல-1772, கொழும்பு.

இந்த வாரம் யாருக்கு சல்வார்?
கொழும்பு வாசகிக்கு அதிஷ்டம்!

இவ்வாரம் சல்வார் பரிசுபெறும் வாசகி இவர்தான்

எஸ். உஷா
ஜே 2/2, டயஸ் பிளேஸ், கொழும்பு-12.

பரிசுபெற்ற வாசகியை முரசின் பல்லாயிரம் வாசக, வாசகியர் சார்பில் வாழ்த்துவோம்
அடுத்தவாரம் யாருக்கு? ஒருவாரம் பொறுமையாக இருக்கக் கூடாதா?!
இவ்வாரம் பரிசுக்குரியவர் பரிசு பெறும் திகதி பற்றி தபால் மூலம் அறிவிக்கப்படும். தபால் மூலம் அறிவிக்கப்படும் விபரங்களைப் பெற்றபின் எம்முடன் தொடர்பு கொண்டு பரிசினைப் பெறலாம்.





நவீன எழத்துலக வேந்தன் சுஜாதா

அந்த அறையின் மெலிதான இருட்டுப் பழக அனிதாவுக்குக் கொஞ்ச நேரமாயிற்று. தரையில் அந்த உருவம் கிடக்க, கான்ஸ்டபிள் அதை நோக்கி நடந்து அந்த உருவத்தைப் புரட்டினார்.

சட்டென்று வைரவன் எழுந்தான்.

"ஹலோ அனிதா!" அப்படியே மெள்ளக் கதவு திறந்து தூக்க எல்லாவற்றுக்கும் திடீர் விடுதலை, ஒரு பெருக்கு, ஒரு மடை திறப்பு, ஒரு தாராள வடிகால் கிடைத்ததைப் போல மண்டியிட்டு வைரவனை அணைத்துக் கொண்டாள் அனிதா. தாடி வளர்ந்துவிட்ட அவன் கன்னத்தில் முகத்தை வைத்துத் தேய்த்தாள்.

"நீங்க பேசிக்கிட்டிருங்க...." என்ற கான்ஸ்டபிள் விலகினார்.

"அனிதா...அனிதா...அனிதா" என்று அவளைத் தன் கண்ணீரால் குளிப்பாட்டினான் வைரவன். "அனிதா... ஹெல்ப் மீ அனிதா! ப்ளீஸ்... ஹெல்ப் மீ அனிதா... உன் உதவி எனக்குத் தேவை அனிதா. என்னை இந்தச் சமயத்தில் வுட்டுப் போயிராதே அனிதா! நான் செஞ்சதெல்லாம் தப்பு கண்ணா. மனத்தால் உன்னை வாங்காம பணத்தால் வாங்கினது... உன்னை அடைஞ்சதுமே உன்னை மறந்தது... கடை பொம்மை மாதிரி உன் உணர்ச்சிகளைப் பத்திக் கவலையே படாதது... எல்லாம் எல்லாம் தப்பு. இப்பதான்... இப்பதான் அனிதா நீ எனக்கு வேண்டும். உன் காதல் அத்தனையும் வேண்டும்!"

அனிதாவின் மணிக்கட்டில் சொட்டுச் சொட்டாக அவன் சூடான கண்ணீர் உதிர, அவள் புடவையெல்லாம்... கன்னமெல்லாம்... கழுத்தெல்லாம்... கண்ணீர் ஒரு மனுஷன் கண்ணுக்குள் இத்தனை நீரா?

"வைரவன்... நான் ஒரு தப்பு பண்ணிட்டேன். சீதாவை... சீதாவை கல்யாணம் செய்துக்கறதா சொல்லிக் கடைசி நிமிஷத்தில் நான் மனசு மாறினதில அவன் காணாம போயிட்டான்..."

"சீதாவா? என்ன உளர்ற அனி! சீதாதான் நாள் முழுக்க விசாரிச்சு என்னை இந்த ஜெயில் வரைக்கும் வந்து கண்டுபிடிச்சு, வக்கீலைக் கூட்டி வந்து ஃபிரெஷ் பெயிலுக்கு அப்ளை பண்ணப் போயிருக்கான். அவன்தான் நம்மோட இந்தச் சந்திப்புக்கு ஏற்பாடு செய்தது. இப்ப வந்துருவான்... அனிதா..." என்று வைரவன் சொல்ல, அனிதாவுக்கு இதய பாரம் சட்டென்று இறங்கியது.

"அனிதா... என்னைவிட்டுப் போக மாட்டேன்னு சொல்லு..."

"இல்லை... இல்லை... நான் உங்களை விடுதலை பண்ணப்போறேன். முதல்லருந்து எல்லாத்தையும் தெரிஞ்சுண்டு, உங்களுக்காக வெளி உலகத்துல இதை ஒரு சவாலா எடுத்துண்டு..."

"நான் ஒண்ணுமே செய்யலை அனிதா... உலகத்தில இருக்கிற அத்தனை பேரும் செய்யறதைத்தான் செய்தேன். பார்ட்டிக்குப் பணம் கொடுத்தேன். மந்திரிக்குப் பணம் கொடுத்தேன். பலர் ஆபரேஷனுக்குப் பணம் கொடுத்தேன். நான் ஷேர் வாங்கினா ஷேர் விலை உசருது... நான் வித்தா சரியுது! இதைக் கொஞ்சம் பயன்படுத்திக்கிட்டு ஸ்டாக் எக்ஸ்சேஞ்சு விதிகள் எதையும் மீறாமத்தான் பணம் பண்ணினேன். என்னை அறியாம கோடிக் கணக்கில் பணம் சேர்ந்துகிச்சு. அதுக்குக் காரணம் நம்ம சிஸ்டம்ல இருக்கிற கோளாறு. நடக்கிற வரைக்கும் நடக்கட்டும்கற புலி சவாரி மாதிரி! ஒரு ராஸ்கலும் கண்டுக்கலே... அவனவன் ஸ்விஸ் பாங்கில ஆறு அகௌண்ட் வெச்சிருக்கான்... நாங்க ஒரே ஒரு பி.ஆர்ல மாட்டிக்கிட்டோம். சி.பி.ஐ. க்காரங்க ஒரு மணி நேரம் தாமதமா வந்திருந்தாங்கன்னா சமாளிச்சிருப்பேன். புலி கவுத்திருச்சி. என்னைச் சாப்ட்ருச்சு..." என்ற வைரவன், "என்ன பார்க்கிறே?" என்றான்.

அனிதா, "நீங்க சொன்னது எதுவும் எனக்குப் புரியலை" என்றாள்.

"ஸாரி!"

"ஆனா,அத்தனையும் புரிஞ்சுக்கப் போறேன்!"

அப்போது, "வந்தாச்சா..." என்று குரல் கேட்டு அனிதா திரும்பிப் பார்க்க... சீதா அறைக்குள் நுழைந்தான். கூட ஒரு வக்கீலும் வந்திருந்தார்.

"சீதா... நீ எங்க போயிட்ட...? உன்னை நாள் பூரா தேடினோம்" என்றார் உடன் வந்த ராஜாராமன்.

"வைரவனைப் பார்க்கணும்னு அனிதா உதவி கேட்டா இல்லையா! அவரைத் தேடிக் கண்டு பிடிச்சு, அவரை எங்க வெச்சிருக்கான்னு தெரியறதுக்கே ராத்திரி மணி பத்தாயிடுத்து. ஒருத்தரும் பிடி கொடுத்துப் பேசலை. ஒருத்தர், 'வைரனைச் சிந்தாதிரிப் பேட்டைல வெச்சிருக்கா...'னு சொல்றார். இன்னொருத்தர் 'வேலூருக்கு மாத்தியாச்சுங்கறார்...' வேறு சிலர் 'வைரவன் ஸ்பெஷல் கஸ்டடில இருக்கார்ங்கறா...' கடைசில வக்கீல் சார்தான்..." சீதா சொன்னான்.

"என்ன சார் அநியாயம் ! சி.பி.ஐ. கஸ்டடி டேட் முடிஞ்சு போயாச்சு... அவாளும் எக்ஸ்டெண்ட் பண்ணலை. மாஜிஸ்ட்ரேட் கோர்ட்ல ப்ரொட்யூஸ் பண்ணலை. வைரவனை உள்ள வெச்சிருக்கறதே சட்ட விரோதம். உடனே ஒரு ஜாமீன் மனு மூவ் பண்ணிட்டேன் சாயங்காலமே! ஜாமீன் தொகை ஜாஸ்தியா இருந்ததால ஜாமீன் கொடுக்க ஆள் அகப்படறது தான் கஷ்டமாயிடுத்து. சீதாராமன்தான் யாரையோ புடிச்சு ஏற்பாடு பண்ணி..." வக்கீல் சொல்ல,

அனிதா, சீதாவைப் பார்த்தாள். சீதா சங்கோஜத்துடன் வைரவனைப் பார்க்க...


"சீதா எல்லாம் சொன்னாரு!" என்றான் வைரவன்.

"அனிதா... வைரவன் கேஸ் ரொம்ப சிம்பிள். ஆத்துக்கு வந்தா நான் எல்லாம் சப்ஜாடா விவரமா சொல்றேன். ஷேர்னா என்னங்கறதுலேர்ந்து ஆரம்பிக்கலாம்..." சீதா சொன்னான்.

அனிதா, சீதா சொல்வதில் கவனமின்றி அவனையே பார்த்துக் கொண்டு, அவனருகில் சென்று அவனை அன்புடன் அணைத்துக் கொண்டு, கன்னத்தில் முத்தமிட்டு விட்டுக் கண்ணீருடன் திரும்பிக் கணவனைப் பார்த்தாள்.

வைரவன் "அந்தக் கன்னத்திலயும் குடு" என்றான்.

வைரவனைத் தற்காலிகமாக விடுவித்து அனிதா வீட்டினர் அழைத்துச் சென்றபோது விடிந்திருந்தது. சென்னை மற்றொரு தின ஆயத்தங்களைத் துவக்கியது. ப்ளாஸ்டிக் பால் பைகள், செய்தித்தாள், அதிகாலை மெட்ரோ வாட்டர், சூரியன் சோபிப்பதற்குள் நடை, அம்மன் கோயில் சினிமாப்பாட்டு, இஸ்திரிக்காரர்களின் கரித்தணல், பள்ளி செல்லும் குழந்தை மலர்கள்...



சீதா ஆட்டோவை நிறுத்தி, "அனிதா... நீ மாப்பிள்ளையைக் கூட்டிண்டு வீட்டுக்குப் போ. நான் வக்கீலைப் பார்த்துவிட்டு வரேன். மத்தியானம் டிஸ்கஸ் பண்ணலாம்..." என்றான்.

ஆட்டோவில் ஏறும்போது வைரவன், "எங்கிட்டே காசு இல்லை" என்றான்.

"எங்கிட்ட இருக்கு" என்றாள் அனிதா.

ஆட்டோ குதித்துக் குதித்துச் செல்ல... அனிதா, வைரவனைக் கட்டிப் பிடித்துக் கொண்டு "உன்னை விட மாட்டேண்டா" என்றாள்.

~முற்றும்~





உயிரைக் காக்கும், உயிரினைச் சேர்த்திடும்;
உயிரினுக் குயிராய் இன்ப மாகிடும்;
உயிரி னும்இந்தப் பெண்மை இனிதடா!
ஊது கொம்புகள் ; ஆடு களிகொண்டே.

**சுப்பிரமணிய பாரதியார்–**

## பாப்பா முரசு சிறுகதை

# உலகின் மிகப் பெரியவர்!



**பே**ரரசர் அக்பர் தனது அரசவை அறிஞர்களை நோக்கி, "இந்த உலகில் மிகப் பெரியவர் யார்?" என்று கேட்டார்.

அடுத்த வினாடி ஒரு அறிஞர் எழுந்து, "மொகலாயச் சக்கரவர்த்தி அக்பர் அவர்கள்!" என்றார்.

இன்னொரு அறிஞர் எழுந்து, "உலகிலேயே மிகப் பெரியவர், மொகலாயச் சக்கரவர்த்தி அக்பரைத் தவிர வேறு யாராய் இருக்க முடியும்?" என்றார்.

மற்றொரு அறிஞர் எழுந்து, "பேரரசர் அக்பர் அவர்களே உலகிலேயே மிகப் பெரியவர்," என்றார்.

இப்படியாக,அரசவையில் இருந்த அத்தனை அறிஞர்களும், உலகின் மிகப் பெரியவராக அக்பரையே சொன்னார்கள், ஒரே ஒருவரைத் தவிர.

அவர்தான் பீர்பால்.

அவர் பதில் சொல்லும் முறை வந்தும் அவர் பதில் சொல்லாமல் இருப்பதைக் கண்ட அக்பர், சட்டென்று கோபமடைந்தார்.

"பீர்பால்! உமது கருத்தைச் சொல்லாமல் நீர் இப்படி அமைதியாக உட்கார்ந்து கொண்டிருந்தால் என்ன அர்த்தம்? என்ன கேள்வியாவது உமது காதில் விழுந்ததா?" என்று கோபம் பீறிடக் கேட்டார்.

பீர்பால் எழுந்து, "விழுந்தது அரசே! இவ்வளவு நேரம் நான் யோசித்துக் கொண்டிருந்தேன். இந்த உலகில் மிகப் பெரியவர் கடவுள்!" என்றார்.

அதைக் கேட்ட அக்பரின் முகம் கோபத்தால் சிவந்தது.

"என்னது? கடவுளா? இதோ பாரும். இந்த உலகத்தைப் படைத்தது, மனிதர்களாகிய நம்மைப் படைத்தது கடவுள் என்பதை ஒத்துக் கொள்கிறேன். ஆனால், அவர்தான் பெரியவர் என்பதை எப்படி ஒப்புக் கொள்ள முடியும்? இந்த நாட்டு மக்களுக்கு உணவு, உடை, இருப்பிடம் இன்னும் பல வசதிகளைச் செய்து கொடுத்து வாழ வைப்பது யார்? அந்தக் கடவுளா? நான்தானே?" என்று கனல் தெறிக்கும் வார்த்தைகளால் பேசினார்.

"ஆமாம்!" என்றார் பீர்பால்.

"அப்படியிருக்க, உலகிலேயே பெரியவர் கடவுள் என்கிறீரே. இதற்காக நீர் என்னிடம் மன்னிப்புக் கேட்க வேண்டும்." என்றார் அக்பர்.

"அரசே! நான் ஏன் மன்னிப்புக் கேட்க வேண்டும்? நான் உண்மையைத்தான் சொன்னேன். நான் சொன்னது பொய்யாக இருந்தால்தானே மன்னிப்புக் கேட்க வேண்டும்?" என்றார் பீர்பால்.

அதைக் கேட்டதும் அக்பருக்கு ஆத்திரம் கூடியது.

"பீர்பால்! நீர் மன்னிப்புக் கேட்கா விட்டால் உமக்கு மரண தண்டனை விதிப்பேன்!" என்று கத்தினார் அக்பர்.

அதற்கு பீர்பால், "கடவுள் இப்படி உப்புப் பெறாத விஷயங்களுக்கெல்லாம் மரண தண்டனை விதிப்பதில்லை. அதனால்தான் உலகிலேயே பெரியவர் கடவுள் என்றேன்!" என்றார்.

அதைக் கேட்டுச் சிரித்த அக்பர், "பீர்பால்! கடவுளின் சிறப்பை உமது வாயால் கூற வேண்டும் என்பதற்காகவே நான் இப்படிக் கடுமையாகப் பேசினேன். நான் மன்னர்தான் என்றாலும் ஒரு சாதாரண மனிதனும் கூடத்தான். நான் மக்களுக்கு அனைத்தையும் செய்தாலும், அந்த அனைத்தையும் முதலில் எனக்குத் தருவது அந்தக் கடவுள்தான். ஆகவே, உலகில் பெரியவர் கடவுளே என்பதை, முகத்துதி பாடும் இங்குள்ள அறிஞர்கள் இனி மேலாவது உணர வேண்டும்!" என்றார்.

"உலகில் மிகப் பெரியவர் அக்பரே" என்று சொன்ன அத்தனை அறிஞர்களும் அவமானத்தால் தலை குனிந்தனர்.

## விடுகதைகளும் விடைகளும்

1. ஆளில்லாத கிணற்றில் மயில் இறங்கி ஆடுது அது என்ன?
2. பறந்தோடுவது போல் பாய்ந்தோடும் செங்காளை தண்ணீருக்கு உயிரைக் கொடுக்கும் அது என்ன?
3. அந்தரத்தில் தொங்குவது அரக்கனின் தலை அது என்ன?
4. நூல் நூற்கும்; ராட்டை அல்ல அது என்ன?
5. கால் இல்லாதவன் தள்ளாடியபடியே பயணம் செய்வான் அவன் யார்?
6. உச்சாணிக் கொம்பிலே உரல் கட்டித் தொங்குது அது என்ன?
7. ஆற்றில் விழுவான்; ஆனால் நனையமாட்டான் அவன் யார்?
8. ஊசி நுழையாத கிண்ணத்தில் ஒரு செம்பு தண்ணீர் அது என்ன?

**விடைகள்**

1. மோர் கடையும் மத்து
2. நெருப்பு
3. திருஷ்டி பூசணி
4. சிலந்தி
5. படகு
6. பலாப்பழம்
7. சூரிய- சந்திர நிழல்
8. தேங்காய்

## வெப்ப இசைவாக்கம்


**உ**லகிலேயே சைபீரியாவில்தான் குளிர் அதிகம். அங்கு பனிப் பிரதேசமான அண்டார்டிகாவை விடவும் அதிக குளிர் உண்டு. அங்கு குளிர் அளவு 95 டிகிரி பாரன்ஹீட். உலகின் அதிகபட்ச வெப்பநாடு லிபியா. அங்கு அதிக பட்ச வெப்பம் 135 டிகிரி பாரன்ஹீட்.







மனிதன், பாலூட்டிகள்,பறவைகள் வெப்பநிலைக்கேற்ப தங்களை பக்குவப்படுத்திக் கொள்கின்றன. ஆனால், ஊர்வன வகையைச் சேர்ந்த முதலை, ஆமை, இரண்டும் தங்கள் உடல் உஷ்ணம் வேண்டி வெப்பத்தில் காய்ந்தும் அல்லது கற்களில் உடம்பை உராய்ந்தும் தங்களைச் சூடு படுத்திக் கொள்கின்றன.

ஒட்டகங்கள் தங்கள் வெப்ப நிலையை பருவ நிலைக்குத் தக்கபடி 6 டிகிரி பாரன்ஹீட் முதல் 11 டிகிரி பாரன்ஹீட்வரை மாற்றியமைத்துக் கொள்கின்றன.இதனால் அவற்றுக்கு எந்தக் கேடும் இல்லை.





ஜார்ஜ் பெர்னாட்ஷா "பெர்டச்டு பேபிள்ஸ்" என்ற நாடகத்தை எழுதிய போது அவருக்கு வயது 93.



"ஏ ஹிஸ்டரி ஆப் இங்கிலிஷ் ஸ்பீக்கிங் பீப்பில்" புத்தகத்தை வின்ஸ்டன் சாச்சில் படைத்த போது அவருக்கு வயது 82.



82 வயதில் லியோ டால்ஸ்டாய் "ஐ கேன் நாட் பி சைலன்ட்" என்ற நூலை எழுதினார்.

## சிறந்த வர்ணத்திற்கு பரிசு தரும் எண்ணம்!



மேலே உள்ள படத்திற்கு வர்ணம் தீட்டி தபாலட்டையில் ஒட்டி அனுப்புங்கள். சிறந்த வர்ணம் ஒன்றுக்கு பரிசு ரூபா 25/= காத்திருக்கிறது. அனுப்பவேண்டிய கடைசித் திகதி **17.08.2002.**

வர்ணம் தீட்டும் போட்டி இல: **457**
தினமுரசு வாரமலர்
த.பெ.இல. 1772
கொழும்பு.

### வர்ணம் தீட்டும் போட்டி இல: 454


**பரிசுக்குரியவர்:**
**எம்.எஸ். சப்ரி,**
கண்டி சாஹிரா கல்லூரி, கட்டுகஸ்தோட்டை.

**பாராட்டுக்குரியவர்கள்:**


| | |
|---|---|
| **உ.சசிசுதாஜினி**<br>புனித பிரான்சிஸ் சவேரியார் ம.வி, திருகோணமலை. | **வி. சத்தியகுமார்**<br>ஜோன். பொஸ்கோ கல்லூரி, ஹட்டன் |
| **எப். ஆர். தர்ஷினி**<br>சைவ மங்கையர் வித்தியாலயம், வெள்ளவத்தை. | **ஏ.தங்கவேல்– மின்னல்ராணி**<br>அவரவத்தை எஸ்டேட், சாமிமலை. |
| **ர.ரவின்குமார்**<br>மே.மா.ஹெ. மில்லகந்த த. வித்., புளத்சிங்கள | **சாலினி மலர்மாறன்**<br>கொழும்பு-4. |
| **க. றொகான்**<br>மன்னார். | **என். வியன்பிடினேஷ்**<br>கல்லூரி வீதி, திருகோணமலை. |
| **வி. கிசாந்தனி**<br>பத்தனை. | **பாறாஸ் பாஹிம்**<br>சென்ற் ஜோசப் ஸ்றீற், கொழும்பு. |

## அறிவுத் தேடல்

**சென்றவாரப் புதிருக்கான விடை:**



## இந்த வாரப் புதிர்




1 முதல் 12 வரையுள்ள எண்கள் கொடுக்கப்பட்டுள்ளன. இந்த எண்களை வட்டங்களுள் நிரப்பி ஒவ்வொரு நேர் கோட்டில் அமைந்துள்ள 3 எண்களின் கூட்டுத் தொகை 22 வரும்படி செய்ய வேண்டும். உங்களுக்கு உதவ, மூன்று எண்கள் வட்டங்களுக்குள் கொடுக்கப்பட்டுள்ளன.

# லிங்கம்மா...

"ஐயோ, அம்மா! காலல நட்டு வாக்காலி கொட்டிடுச்சே, நா இன்னா, பண்ணுவேன். நிறைய ரத்தம் வருதே. ஆத்தி, யம்மாவ் ஒடியாம்மா. ஒன் ஊட்ல படுத்துதுக்குக் கூலியாயிது." லிங்கம்மாவின் ஒப்பாரியைக் கேட்டுத் திடுக்கிட்டுக் கண் விழித்தேன்...

மணி ஆறெனக் கடிகாரக்குயில் கூவியது. வராண்டாவில் ஒப்பாரி மீண்டும் வலுத்தது.

"அம்மா! அம்மா! என்னாச்சுன்னு பாரேன், வெளியே லிங்கம்மா, கத்தறா"...

"இரு பார்க்கிறேன் சத்யா"... வெளிக் கதவைத் திறந்துகொண்டே பதில் கூறினாள் எனது தாய் பார்வதி...

நானும் விரைந்தேன். அம்மாவையும், என்னையும் பார்த்ததும் லிங்கம்மாவின் ஒப்பாரி மேலும் வலுத்தது.

"சும்மா இரு, காலைக் காட்டு பார்க்கலாம்." அம்மா அதட்டினாள். காலில் எதுவும் கொட்டவில்லையெனக் காயத்தைப் பார்த்தவுடன் புரிந்தது... தூக்கத்தில் புரண்டு படுக்கும்போது வராண்டா இரும்புக் கதவில் இடித்திருக்கிறாள். இரத்தம் வந்ததும் இந்த அலறல், ஒப்பாரி. "இரு, சுண்ணாம்பு வெக்கறேன். தம்பி இன்னிக்கு ஊருக்கு போகணும், சீக்கிரம் குளிச்சிட்டு வா பலகாரம் சுட்டுத் தம்பி கைல கொடுத்துவுடணும என்று". அம்மா லிங்கம்மாவை விரட்டினாள்.

லிங்கம்மா முணுமுணுத்துக் கொண்டே என்னைக் கோபத்துடன் பார்த்தவாறே காலைத் தாங்கித் தாங்கி நகர்ந்தாள்.

"சத்யா நீ போய் தயாராகு" என்றாள் அம்மா.

லிங்கம்மாவை நினைத்து என் மனம் அசை போடத் தொடங்கியது.

மூன்று மாதத்திற்கு முன் இந்த வீட்டிற்கு குடிவந்தபோது மாலையில் கதவைத் தட்டினாள். நான் போய்த் திறந்தபோது "ஆம்பளயோட பேச மாட்டேன். அம்மாவ வரச்சொல்லு பேசணும் என்றாள். நாற்பது வயதுப்



பெண் பதினைந்து வயதான என்னுடன் பேசுவதற்கு என்ன வெட்கம். இந்தக் கேள்வி என்னைக் குடைந்தது. அம்மா வந்ததும், தான் எதிரேயுள்ள பூவரசமரத்தடியில் வசிப்பதாகவும், இந்த வீட்டில் வேலை வேணுமெனவும் கேட்டாள், வீட்டிற்கும் ஆள் தேவைப்படவே அம்மாவும் சரியென்றாள்.

லிங்கம்மாவின் உடை ஏரியாவில் மிகப் பிரசித்தம். சாயம் போன ஐந்து முழச் சேலையை இடுப்பில் இரண்டு சுற்றுச் சுற்றி இரவிக்கை போடாத மார்பில் ஒரு சுற்றுச் சுற்றி, நீண்ட முந்தானையைத் தொங்க விட்டிருப்பாள். சாலையில் போகும் போது முக்காடிடுவாள். உறங்கும் போது போர்வை... சாலையில் போகும்போது முக்காடு யாரும் பார்க்கக் கூடாதென்பதற்காக குறிப்பாக ஆண்கள்.

ஆண்கள் மீது வெறுப்பிற்கு காரணமென்னவென்றால் அதற்குப் பெரிய கதையுண்டு. அதையும் அக்கம் பக்கம் விசாரித்தேன்.

லிங்கம்மாவிற்குப் பதினெட்டு வயதில் கல்யாணம் நடந்ததாம். அவளுக்கு இரண்டு ஆண்டுகளாகக் குழந்தைப் பாக்கியமில்லாததால், வீட்டில் பூவரசமரம் வளர்த்தால் புத்திர பாக்கியம் கிட்டுமென யாரோ சொல்ல, புருஷனும் பெண்டாட்டியும் பூவரசநதடி ஒன்றைக் கொல்லைப் புறத்தில் நட்டார்கள்.

இயற்கையென்ன நினைத்ததோ, ஒருநாள் பெய்த பலத்த மழையில் குடிசை இடிந்து விழ, எஞ்சியது லிங்கம்மாவும், பூவரச மரமும்தான்.

புருஷன் போனதிலிருந்து லிங்கம்மாவின் வாழ்க்கையை பூவரச மரத்தை வளர்ப்பதிலேயே கழிந்தது. அவள் இருப்பிடம், உறக்கம், வாழ்க்கை, உயிர் எல்லாமே அந்தப் பூவரச மரம்தான். வயிற்று ஜீவனத்திற்கு வீட்டு வேலை பார்க்கத் தொடங்கினாள்.

இப்படியிருந்த வாழ்க்கையில் இருபத்திரெண்டு வயது லிங்கம்மாவின் கட்டான உடலமைப்பைக் கண்டு தன் காமத்திற்கு இரையாக்கினான் ஒரு வீட்டு முதலாளி. கற்பிழந்த லிங்கம்மா லேசாக மனநிலை பாதிக்கப்பட்டாள். அன்றிலிருந்தே ஆண்கள் மீது வெறுப்பு, தன் முகத்தை யாரும் பார்க்கக் கூடாதென்பதற்காக முக்காடிடுவாள். இப்படியே வாழ்க்கையைப் பதினெட்டு வருடம் கழித்துவிட்டாள். ஆனால், அந்தச் சம்பவம் மட்டும் அவள் மனதைவிட்டு அகலவில்லை. யாரிடமும் பேசமாட்டாள். அப்படிப் பேசினால், எந்த விஷயமும் சற்று மிகைப்படுத்தியதாக இருக்கும். இப்போது ஒப்பாரி வைத்தாளே அது போல,

"சத்யா, பெட்டியில எல்லாம் எடுத்து வெச்சிட்டியா, பரீட்சை முடிஞ்சதும் நேரா ஊருக்குவா, நண்பனின் ஊருக்குப் போறேன்னு சொல்லாத, அப்பா, சிங்கப்பூர்லயிருந்து நாலு மாசத்துல வந்திடுவாரு. பிறகு எல்லாரும் சேர்ந்து ஊருக்குப் போவம்...."

"சரிம்மா..." தலையாட்டினேன்.

மதியம் இரண்டு மணிக்கு மீண்டும் லிங்கம்மாவின் அலறல்.

"ஐயோ, வெட்டாதீங்கடா, எம் புள்ளடா அது. கொலை செய்யாதீங்கடா..., பூவரச மரத்தை பத்துப்பேர் சேர்ந்த கும்பல் வெட்டிக் கொண்டிருந்தது. அவர்கள் காலில் விழுந்து லிங்கம்மா கதறிக்கொண்டிருந்தாள். அருகில் "சாலை அகலப்படுத்தும் பணி" என்று எழுதிய பலகை சாய்ந்து கிடந்தது.

நான் சென்று அதிகாரியிடம் மரத்தை வெட்ட வேண்டாமென்றேன்.

அரசாங்க உத்தரவு மீற முடியாது....

லிங்கம்மாவிற்கு அரசாங்கமாவது, புடலங்கையாவது! அவள் உயிரே அந்த மரம்தான். அதை இழக்க விரும்புவாளா? அம்மா சென்று சொல்லிப் பார்த்தாள். அவளையும் தள்ளிவிட்டு வெட்டுபவர்களிடம் சென்று லிங்கம்மா கெஞ்சிக் கொண்டிருந்தாள்.

மரம் அரைகுறையாக வெட்டப்பட்டு லாரியில் ஏற்றப்பட்டது. லிங்கம்மாவும் தன் முந்தானையை மறந்து லாரியின் பின்னால் ஓடினாள்.

அன்று நான் ஊருக்குப் போய் மூன்று மாதம் கழித்து இன்றுதான் திரும்பி வருகிறேன். லிங்கம்மாவும், அவள் மரமும் என்னாயிற்று என் பதைபறிய மனம் தவித்தது.

தெருவில் நுழையும்போதே என் கண்கள் தேடியது பூவரசம் மரத்தைத்தான். சாலை அகலப்படுத்தும் பணி நடைபெறவேயில்லை. மழை பெய்ததனால் சாலை சகதியாய் இருந்தது. பூவரச மரம் துளிர்த்துச் சிறிய இலைகளோடு என் உயரத்தில் பசுமையாய்க் காட்சியளித்ததைக் கண்டதும் மனதில் மகிழ்ச்சி பெருக்கெடுத்தது. எப்படியோ மரம் பிழைத்ததென நினைத்தேன்.

"எங்கயம்மா லிங்கம்மாவக் காணம்?"

"அன்னிக்கு லாரிக்குப் பின் னால போனவ இதுவரை திரும்பி வரலடா..." அம்மாவின் பதில் என்னை ஸ்தம்பிக்கச் செய்தது.

வெளியே மழை வரும் போலிருந்தது. சில்லென்ற காற்று மணவாசனையோடு ஜன்னல் வழி வந்தது. மரத்தைப் பார்த்தேன். என்னையுமறியாமல் கண்கள் கண்ணீரைச் சிந்தியது.

உங்கள் ஊரில் நான் சொல்லியது போல முக்காடிட்டுப் பெண் போனால் அது லிங்கம்மாவாய் இருக்கலாம். அப்படியிருந்தால் தயவு செய்து அவளுக்குச் சொல்லுங்கள், அவளின் குழந்தை மரம் தளிர்த்து வளர்கிறதென்று...

**ஆகஸா-கத்தார்**

---

சுந்தர், தன் சட்டைப் பையை மீண்டும் ஒரு தடவை தொட்டுப் பார்த்துக் கொண்டான். பணம் பத்திரமாகவே இருந்தது. மனம் சந்தோஷப்பட்டாலும், ஒரு பயமும் இருந்து கொண்டே இருந்தது. சிலவேளை அந்தப் பணம் தவறிவிட்டால்?...

# புத்தம் புதிய சைக்கிள்...

அவன் இன்று மிகவும் உற்சாகமாகவும், சுறுசுறுப்பாகவும் இயங்கிக் கொண்டிருந்தான். இடைக்கிடையே புதிய சைக்கிள் பற்றிய கனவில் மிதந்தான். ஆனாலும் மனம் உறுத்தியது. "அம்மாவிடம் கூடச் சொல்லாமல் இருப்பதா? பாவம்... வேண்டாமென்றா அவர் சொல்லப் போகிறார்? எவ்வளவு கஸ்ரப்பட்டு என்னையும், தம்பி, தங்கையையும் படிக்க வைத்தார்? தனது தேவைகளை, ஆசைகளைத் தியாகம் செய்தவரிடம் இதை மறைக்கக் கூடாது. பின்னேரம் வேலை முடிந்து வீட்டுக்குப் போனதும் சொல்லிவிட வேண்டும்" எனத் தீர்மானித்துக் கொண்டான்.

சுந்தர், தனியார் நிறுவனமொன்றில் வேலை செய்கிறான். மாதம் முடிந்ததும் கிடைக்கும் மூவாயிரம் ரூபாவில் போடப்படும் பட்ஜெட் எப்போதும் துண்டுவிழும் தொகையாகவே இருக்கும். இருந்தாலும் குடும்ப வண்டி லொடலொடத்தபடி ஓடிக் கொண்டிருந்தது. அதைவிடவும் லொடலொடத்தது அவனின் சைக்கிள். அவனது தந்தை இறந்தபோது, தனது பாரிய சொத்தாக விட்டு விட்டுப் போனது மூன்று பிள்ளைகளையும், அந்தச் சைக்கிளையும், கொஞ்சம் கூடுதலான வறுமையையும்தான்.

மிக நீண்ட காலமாக உழைத்து உருக்குலைந்துபோன சைக்கிள் தான் சுந்தருக்கு வாகனமாயிருந்தது. அவன் வேலைக்குப் போகும்போது இந்தச் சந்தியில் அவன் போனால்- அடுத்த சந்தியிலுள்ளவர்கள் வழிவிடுவார்கள். அவ்வளவு 'லொட லொடப்பு'.

இரண்டு மைல் தூரமுள்ள அலுவலகத்திற்கு ஒரு மணித்தியாலயத்திற்கு முன் புறப்பட்டால்தான் சரியான நேரத்துக்குப் போய்ச்சேர முடியும். "இந்தச் சைக்கிளுக்கு அரைக்கிலோ பேரீச்சம்பழம் வாங்க முடியுமா?" நண்பர்களின் கேலி மனதை வாட்டும். ஆனாலும் தனக்குள்ளே ஒடுங்கிப் போவான் சுந்தர். "ஏழைக்கேற்ற எள்ளுருண்டை" என்று சமாதானமடைவான்.

இவற்றையெல்லாம் அவதானித்த அவனது மனேஜரின் பலத்த சிபாரிசில்தான். நிறுவன முதலாளி கடனாக ஐயாயிரம் ரூபா கொடுத்தார்- மாதாமாதம் கழிப்பது என்ற அடிப்படையில். வீட்டிற்குக் கூடத் தெரியப்படுத்தாமல் பணத்தை வைத்திருந்தான். தெரிந்தால் தம்பி, தங்கை இருவருக்கும் அது வேண்டும், இது வேண்டும் என்பார்கள்.

அப்போதுதான் ஞாபகம் வந்தது அவனுக்கு, தம்பி சங்கரின் காற்சட்டையில் போடப்பட்ட 'பெச்'சும், தங்கையின் நிறம்மாறிய சீருடையும்... இருந்தாலும் புதிய சைக்கிள் எண்ணம் அதனை மறக்கடித்தது.

அலுவலக நேரம் முடிந்ததும் தனது சைக்கிளில் புறப்பட்டான் சுந்தர். மழை பெய்ததன் அடையாளமாக வீதியெங்கும் புதிய நீர்த்தேக்கங்கள் உருவாகியிருந்தன.இனி மாரிகாலம். ஒரு குடை வாங்கவேண்டும். வீட்டிலிருக்கும் குடையை விரித்தால்அண்ட சராசரங்களையும் பார்க்கலாம். மனது கனத்தது அவனுக்கு. வறுமையின் பிடியில் சிக்கி நம்மைப்போன்று எத்தனை குடும்பங்கள் தவிக்கின்றன? அவற்றுக்கு விடிவுகாலமே வராதோ?

வீட்டினுள் நுழைந்தவனின் நெற்றி சுருங்கியது. கோபம் சுருசுருவென்று வந்தது."அம்மா ஏனம்மா வீட்டைக் கழுவினீங்க? இரவுக்கு எங்கே படுப்பது?" குரலை உயர்த்திக் கேட்டான்.



"அது கழுவயில்லையப்பா, மழைக்கு ஒழுகினது. கூரைக் கிடுகெல்லாம் இத்துப்போய்விட்டது. அதற்கு வேணும் ஆயிரம் ரூபா" வேதனையோடு கூறிய அம்மாவைப் பார்த்ததும் வந்த கோபம் மாயமானது.

"அம்மா காய்ச்சல் விட்டு விட்டதாம்மா?" அன்பொழுகக் கேட்டான்.

"ஆமாப்பா! விட்டு விட்டது இந்த ஏழையின் வீட்டில் அதற்கு வரவேற்பில்லையென்று ஓடியே போய் விட்டது..." விரக்தியாகச் சிரித்தார் அம்மா.

"சரியம்மா. பழையசாக்கு தாங்க- ஈரம்போக துடைக்கலாம். திரும்ப மழை வராமலிருக்கணும்..." கூறியபடி அண்ணனும் தங்கையுமாக நிலத்தைத் துடைத்தனர். அப்போது நினைத்துக் கொண்டான்..."புதிய சைக்கிள் வாங்கவேண்டாம். வீட்டுக்குக் கிடுகும், எல்லோருக்கும் புதுத் துணியும் எடுக்க வேணுமென்று-

அடுத்த நாள் காலை கிடுகுக்கு முன்பணம் கட்டினான்.

இனிமேல் புதுத்துணி எடுக்க வேண்டும்... நினைத்துக்கொண்டு வேலையில் மூழ்கிப் போனான் சுந்தர்.

"சுந்தர் சேர்... உங்கட தம்பி வந்திருக்கிறார்..." என்ற பியோனின் குரலில் நிமிர்ந்தவனின் மனம் திக் திக்கென்று அடித்துக் கொண்டது.

வெளிறிப்போன மேல் சட்டை- வியர்வையில் நனைந்து உடலோடு ஒட்டியிருக்க, மேல் மூச்சு கீழ்மூச்சு வாங்கியபடி நின்றான் தம்பி சங்கர்.

"என்னடா? ஓடி வந்தியா? களைச்சுப் போயிருக்கிறாய்?" கனிவோடு கேட்டான்.

"ஆமாம் அண்ணா ஓ... ஓடித்தான் வந்தேன்...அ...அம்மாவுக்கு உடம்புக்கு முடியாம ஆ...ஆஸ்பத்திரியில... சேர்த்திருக்காங்க..." இளைத்தபடி கூறினான் தம்பி. பதறிப்போனான் சுந்தர்.

லீவுக்கு சொல்லிவிட்டு ஆட்டோ விலேறி ஆஸ்பத்திரிக்குப் போனான். அவனது போதாத காலமோ- ஆஸ்பத்திரி ஊழியர்கள் வேலை நிறுத்தம் என்றனர். தனியார் கிளினிக்கைத் தேடிப்பிடித்து அம்மாவைக் கண்டதும்தான் ஆறுதலடைந்தான். டொக்டரிடம் விசாரித்த போது,

"அம்மாவுக்கு பலவீனம்... இரத்தம் காணாது... அதோ" கூறிக்கொண்டிருந்த டொக்டரை அதிர்ச்சியோடு பார்த்துக் கொண்டிருந்தான். டொக்டர் தந்த லிஸ்டின்படி மருந்து மாத்திரைகள், டொனிக்குகள், ஊசி, டொக்டர் பீஸ் என்று காசு தண்ணீராய்க் கரைந்தது. எஞ்சிய பணத்தில் குடையொன்று வாங்கி, ஆட்டோவில் அம்மாவைக் கூட்டிச் சென்றான். அதன்பின் வீட்டுக்குப் புதிய கிடுகு மாற்றப்பட்டு வேலை மளமளவென்று முடிந்தது. பணமும் கூடத்தான்.

அம்மாதான் அங்கலாய்த்தாள்... "தம்பி...பணம் எங்காலடா? பாவி நான்... இன்னும் உசிரோட இருந்து உன்னை வதைக்கிறேன்..." அழும் அம்மாவை ஆறுதல் படுத்திக் கடன் பற்றிக் கூறினான்.

அப்போது மழை சோவென்று பெய்தது. சைக்கிளை நனையாமல் பத்திரப்படுத்தினான். "ம்... என்னை விட்டுத் துடைத்துவிட்டால் இதுவும் புத்தம் புதிய சைக்கிள் தானே?" தனக்குள்ளே கூறிக்கொண்டான். மழையும் இடைவிடாது பெய்து கொண்டிருந்தது- ஏழையின் கண்ணீரைப்போல...

**ச.கவிதா, தம்பலகாமம்.**

# ஒரு கைதியின் டைரி

**14**

அவர் பேசும் ஒவ்வொரு வார்த்தையையும் வெளியே காத்திருக்கும் சந்திரமோகன் இன்னொரு போனில் கேட்பதற்காக இந்த ஏற்பாடு. "பேசினால்தானே போனில் உனக்குக் கேட்கும் என்ற அசட்டுத் துணிச்சலில் நீங்கள் எந்தத் தகவலையாவது அவர்களுக்கு எழுதிக் காட்டுவது, புத்திசாலித்தனமா, உங்கள் மகளுக்கு ஆபத்தை உண்டு பண்ணும் முட்டாள்தனமா என்பதை உங்கள் முடிவுக்கே விட்டு விடுகிறேன்" என்று சந்திரமோகன் மிரட்டியிருந்தான். கிருஷ்ணதாஸிற்காக அவசரப்பட்டு அபிதாவின் உயிருடன் விளையாட பரமேஷ்வருக்குத் தைரியம் இல்லை.

"அப்படி என்ன காரணம்?" என்றான், அஸ்வின் பொறுமையில்லாமல்

"இந்த வீடியோ கேசட்டைப் பாருங்கள்...

அவர் கொடுத்த வீடியோ கேசட்டைக் குழப்பத்துடன் அஸ்வின் வாங்கினான். வீ.சி. ஆரில் இயக்கினான்.

காதம்பரியின் வீட்டிற்கு அவர் போய் இறங்குவதாக அமைந்த ட்ரெய்லர் காஸெட்.

"யார் இந்தப் பெண்?" கிருஷ்ணதாஸ் பேசியபோது அவர் உதடுகள் வலித்தன.

"காதம்பரி... ஊருக்கெல்லாம் கவனமாய் இருக்கச் சொல்லி நான் உபதேசம் செய்வேன்... கடைசியில் நானே முட்டாள்தனம் பண்ணி மாட்டிக் கொண்டு விட்டேன். இந்தக்



காஸெட்டை என் மகளுக்கு அவன் அனுப்பியிருந்தான். இது வெறும் முன்னோட்டம்தான். முழு நீளக் காஸெட்டை தனியார் சானல்களுக்கு விற்றுவிடுவேன் என்று என்னை மிரட்டினான். அந்த மிரட்டலுக்கு பயந்துதான் அவனை நானே ஜாமீனில் எடுக்க வேண்டி வந்தது. எனக்காக அவன்பேரில் கொடுத்திருக்கும் புகாரை நீங்கள் வாபஸ் வாங்கி விடுங்கள்... இல்லையென்றால் என்னுடன் அவன் இருந்ததாக நான் கொடுத்த அறிக்கை பொய்யாகி விடும்..."

"அந்த காஸெட்டுக்குப் பயந்து அவன் ஆட்டுவிக்கிறபடியெல்லாம் ஆடப் போகிறீர்களா?"

"இல்லை... நெருப்பைத் தொட்டவனை நெருப்பு சும்மா விடாது என்று பதிலுக்கு நானும் சவால் விட்டிருக்கிறேன். ஒரிஜினல் கேஸட்டை அவனிடமிருந்து எப்படி வாங்குவது, அவனை எப்படி மறுபடி சிறைக்கு நிரந்தரமாக அனுப்புவது என்று என் மூளை யோசித்துக் கொண்டிருக்கிறது..."

"அதற்காக என்னை அடித்தவன் தப்பித்துப் போக நானே வாய்ப்புத் தர வேண்டுமா?"

"போலீஸ் கொடுத்தால்தான் தண்டனையா?" பரமேஷ்வர் இறைஞ்சும் குரலில் பேசினார்.

"அவனுக்குக் கொடுக்க வேண்டிய தண்டனையை நாமே நேரடியாகக் கொடுக்கப் போகிறோம்... அவன் சிறைக்குப் போகும் போது சக்கர நாற்காலியில் போக வேண்டும்..."

கிருஷ்ணதாஸ் சற்றே யோசித்தார். அவருடைய அத்தனை ரகசியங்களும் உள்ளும் புறமும் அறிந்த ஒரு வக்கீல்! கிருஷ்ணதாஸிற்காக எத்தனையோ முறை தன் தொழிலில் ஆபத்தான முடிவுகளை எடுப்பவர்!

சரி என்பது போல தோள்களைக் குலுக்கினார்.

"ஆனால் அந்த சந்திரமோகனை சீக்கிரம் என்னிடம் ஒப்படைக்க வேண்டும்..." என்று ஒரு வாக்கியத்தில் அந்தச் சந்திப்பை முடித்தார்.

பரமேஷ்வர் நன்றி சொல்லிவிட்டு எழுந்தார்.

"இரண்டு நாட்களுக்கு அந்த சந்திரமோகனை என் பார்வையிலேயே வைத்திருக்கப் போகிறேன். காஸெட் தனியார் சானல்களுக்குப் போய்விடக் கூடாது என்பதற்காக" என்று ஒரு வாக்கியம் சொல்லிவிட்டு அந்த அறையை விட்டு பரமேஷ்வர் வெளியேறினார்.

"அடுத்ததாக வேறெங்கே நான் மண்டியிட வேண்டும்?" என்றார் பரமேஷ்வர், ஆத்திரத்தோடு! இயலாமையும், தோல்வியும் அவர் மீது சுமத்தியிருந்த கோபம் கண்டு சந்திரமோகன் புன்னகைத்தான்.

"உங்கள் வீட்டிற்கோ, அலுவலகத்திற்கோ போகிறோம்."

"எதற்கு?"

"நாம் இரண்டு பேரும் உட்கார்ந்து ஒரு பத்திரம் தயார் செய்ய வேண்டியிருக்கிறது..."

"பத்திரமா? என்ன உளறுகிறாய்?"

"ஒரு சிறந்த வக்கீலால்தான் சிறந்த பத்திரம் தயாரிக்க முடியும்... நீங்கள்தான் சிறந்த லாயர்... சிவில் லாயர் அல்ல... ஆனால் இதற்காக இன்னொரு லாயரின் மகளையா கடத்திக் கொண்டிருக்க முடியும்?"

"என்ன பத்திரம்? என் சொத்து முழுவதையும் உன் பெயருக்கு எழுதி வைக்க வேண்டுமா?"

"உங்கள் சொத்து இல்லை..."

"பின்னே?"

"நாம் உங்கள் ஆபீஸில் உட்கார்ந்து பேசலாமே... அதற்கு முன்... ஒரு ஐஸ்கிரீம் சாப்பிட வேண்டும் போல் இருக்கிறது... ஏதாவது ஐஸ்கிரீம் பார்லருக்கு வண்டியை விடுங்களேன்..."

முகமெங்கும் காயமிருந்தாலும் இவனால் எப்படி சிரிக்க முடிகிறது?

பரமேஷ்வர் ஆத்திரத்தோடு கியரைப் பொருத்தினார்.

"என்னதான் கிரேட் கிரிமினல் லாயராக இருந்தாலும் ஒரு முக்கியமான பாயிண்ட்டை கோட்டை விட்டு விட்டீர்களே!"

"என்ன?"

"அபிதா எங்கே என்று உங்களுக்குத் தெரியும். ஆனால், உங்கள் மனைவிக்கு?"

"என்ன சொல்கிறாய்?"

"டென்னிஸ் விளையாட காலையில் போன மகள் இன்னும் திரும்பவில்லையே என்று உங்கள் மனைவிக்குச் சந்தேகம் வந்து போலீஸிற்கு போன் செய்து விட்டால்?"

"என்னைக் கேட்காமல் அப்படியெல்லாம் செய்ய மாட்டாள்."

"சில நாட்களுக்கு முன்பு வரை அப்படி இருந்திருக்கலாம். உங்கள் மனைவி உங்களை தெய்வமாக நினைத்திருக்கலாம்.... ஆனால் காதம்பரி காஸெட்டைப் பார்த்த பிறகும் அந்தப் பழைய மரியாதை அப்படியே இருக்கும் என்று எதிர்பார்க்கிறீர்களா என்ன?"

சந்திரமோகன் குறும்புச் சிரிப்போடு கேட்டாலும் கூட அதில் அர்த்தமிருப்பதாக பரமேஷ்வருக்குத் தோன்றியது.

" என்ன செய்ய வேண்டும் என்கிறாய்?"

"இந் நேரம் அபிதாவே உங்கள் மனைவிக்கு போன் பண்ணிப் பேசியிருக்க வேண்டும்... அவள் தோழி யாருக்கோ டென்னிஸ் கோர்ட்டில் ஹார்ட் அட்டாக் வந்து அவசரமாக டாக்டரிடம் அழைத்துப் போனதாகவும், அங்கிருந்து அப்படியே அவளை அழைத்துக் கொண்டு பெங்களூர் போவதாக்வும் சொல்லியிருக்கலாம்... உங்கள் மூலம் மூன்று நான்கு செட் மாற்றுத்துணிகளை தந்து விடச் சொல்லியிருக்கலாம்..."

"இதெல்லாம் உன் ஏற்பாடா?"

"எதையும் யோசித்து செய்ய வேண்டியிருக்கிறது சார்... என்னை விடப் புத்திசாலிகள் நிறைந்த உலகம் இது. நான் கவனமாய் இருக்க வேண்டியிருக்கிறது அல்லவா? எதற்கும் ஒரு நடை உங்கள் வீட்டிற்குப் போய்ப் பார்த்து விட்டு அப்புறம் ஆபிஸ் போவோமே!"

"அபிதா கடத்தப்பட்டது தெரிந்தால் என் மனைவியை யாராலும் கட்டுப்படுத்த முடியாது... நிச்சயம் அவள் போலீஸில்தான் போய் நிற்பாள்..."

"அது அபிதாவிற்கு எவ்வளவு ஆபத்து! நாம் நேரத்தை வீணடிக்காமல் நகர்வோமே!"

பரமேஷ்வர் காரை வீட்டை நோக்கித் திருப்பினார்.

எழுதுவது
**சுபா**

சந்திரமோகன் காரிலேயே காத்திருந்தான். பரமேஷ்வர் பரபரப்பாக இறங்கி வீட்டிற்குள் போனார்.

ஹால் மேஜை மீது ஒரு சிறு பயணப்பை தயாராக இருந்தது. அபிதாவின் பயணப்பை.

அவரைப் பார்த்ததும் மனைவி ஜானகி பையை சுட்டிக் காட்டினாள்.

"அபிதா உங்களிடம் பேசிவிட்டாளா?" என்றாள்.

"பேசினாள்..." பரமேஷ்வர் தன் பரபரப்பை மறைத்துக் கொண்டார். "உன்னிடம் என்ன சொன்னாள்?" என்று கேட்டார்.

"அவள் தோழிக்கு திடீர் என்று இதய வலியாம்... ஹாஸ்டலில் இருக்கும் பெண். அதனால் பிளேனில் அவள் அப்பா அம்மா ஊருக்கு அழைத்துப் போகிறாளாம்... மூன்று நாட்களுக்கான உடைகள் தயாராய் வைத்திருக்கிறேன்..." என்று அந்தப் பயணப்பையை அவரிடம் தூக்கிக் கொடுத்தாள்.

(கைதியின் கதை தொடரும்)

# ஆறு மனமே ஆறு!

## மன உளைச்சல்

புதுக்கோட்டை மாவட்டம், லேனாவிளக்கு முகாமிலிருந்து வந்திருந்த நவரத்தினத்தை வரவேற்று, எனது முன்னிலையிலிருந்த நாற்காலியில் அமர வைத்தேன்.

தாடி வளர்த்திருந்த நவரத்தினம் திடகாத்திரமான உடலமைப்பைக் கொண்டிருந்தாலும், அவரது உள்ளத்திலே பல சுமைகள், மன உளைச்சல்கள் இருக்கின்றன என்பதை அவரது சோர்வுற்றநிலை எடுத்துக் காட்டியது.

நவரத்தினத்தைப் பற்றிய விபரங்களையும், அவருக்குள்ள பிரச்



சனைகளையும் அறிந்துகொள்வதற்காக அவருடன் உரையாடினேன்.

அவர் கூறிய விபரங்களிலிருந்து . . .

நவரத்தினம் மலையகத்தில் பிறந்தவன். பெற்றோர் தோட்டத் தொழிலாளர்கள். வறுமையிலும் செம்மையாக வாழ்ந்த குடும்பம். 1977 ம் ஆண்டு இனக் கலவரத்தின் போது மலையகத் தமிழ் மக்களும் மிக மோசமாகப் பாதிக்கப்பட்டனர். நவரத்தினம் சிறுவனாக இருந்த போதிலும் அக் கலவரத்தின் போது மலையகத் தமிழர்கள் மீது மேற்கொள்ளப்பட்ட கொடுமைகளும், கோர நிகழ்வுகளும் அவனது பிஞ்சு உள்ளத்தில் பசுமரத்தாணி போல் பதிந்துவிட்டது.

தமது ஒரே பிள்ளையைக் காப்பாற்ற வேண்டும் என்ற நோக்கத்தில், மலையகத்திலிருந்து வடக்கு நோக்கிச் சென்ற குடும்பங்களோடு சேர்ந்து நவரத்தினத்தின் குடும்பமும் இடம்பெயர்ந்தது.

கிளிநொச்சியை அண்டிய ஒரு கிராமத்திலே, ஒரு முதலாளியின் தோட்டக் காணியில் குடிசை அமைத்து வாழ்ந்த நவரத்தினத்தின் குடும்பம், அயலிலுள்ள தோட்டங்களிலும் கூலி வேலை செய்து சீவியத்தை நடாத்தியது.

நவரத்தினம் கிளிநொச்சியிலுள்ள பாடசாலையொன்றில் சேர்வதற்கு மிகவும் சிரமப்பட்டான். இடம் பெயர்ந்து வரும்பொழுது படித்த பாடசாலையின் விடுகைப் பத்திரம் கொண்டுவரவில்லை என்பதைக் காரணம் காட்டி ஆரம்பத்தில் அனுமதி மறுக்கப்பட்டது. மலையகத்தில் நிம்மதியாக வாழ முடியாதென்பதால் தன்னினத்து மக்கள் வாழும் கிளிநொச்சிக்கு வந்தால், இங்கு கல்வியே மறுக்கப்படும் நிலை. ஒருவாறு அதிபரின் கையைக் காலைப் பிடித்துப் பாடசாலையில் அனுமதி கிடைத்தது.

பாடசாலையில் கல்வி பயின்ற நவரத்தினத்தை மாணவர்களும், ஆசிரியர்களும் வடக்கத்தையான், தோட்டக்காட்டான் என்றே அழைத்தார்கள். சிறு வயதிலிருந்தே இவ்வாறான சொற்பிரயோகங்களால் இழிவுபடுத்தப்படுவதாக உணர்ந்த நவரத்தினம் மன உளைச்சலால் வேதனைப்பட்டான். பாடசாலையில் நடைபெறும் அறிவுப் போட்டி, விளையாட்டுப் போட்டி போன்றவற்றிலிருந்தும் வடக்கத்தையான், இந்தியாக்காரன் என்ற பேதம் காட்டிப் புறக்கணிக்கப்பட்டான். மாணவர் சமூகத்தினாலும், ஆசிரியர் சமூகத்தினாலும் மட்டுமல்லாமல் அவன் வாழ்ந்த சூழலில் உள்ளவர்களாலும் அடிமை போன்றே நடாத்தப்பட்டதால் சமுதாயத்தின் மீதே வெறுப்பேற்பட்டு, அவன் மனதிலே விரக்தியும், சஞ்சலமும் நிறைந்தது.

பல தடவைகள் பெற்றோரிடம் தனது மன உளைச்சலைத் தெரிவித்திருந்தான். அவர்களால் என்ன செய்ய முடியும்?

1984 ல் அவன் பதினோராவது ஆண்டில் படித்துக்கொண்டிருந்த போது . . .

தமிழ் மக்களின் பிரச்சனையை ஆயுதப் போராட்டத்தின் மூலம் தீர்க்க முடியுமெனப் பல இயக்கங்கள் ஆள் திரட்டும் நடவடிக்கைகளில் ஈடுபட்ட நேரம். . .

மாணவர்களோடு நெருங்கிப் பழகிய இயக்கத்தவர்களிடம் நவரத்தினம், தான் பாடசாலையிலும், சமூகத்திலும் புறக்கணிக்கப்படுவதைத் தெரிவித்தான்.

இயக்க இளைஞர்களிடமிருந்து நவரத்தினத்திற்குச் சாதகமான பதில் கிடைத்ததாலும், தொடர்ச்சியாக அவ்விளைஞர்களோடு தொடர்பு ஏற்பட்டதாலும், அவனைப் புறக் கணிக்காமல் சமத்துவமாக மதித்ததாலும் அவனுக்கு அவர்களுடனான ஈடுபாடு அதிகமாயிற்று.

படிப்புப் பாதியிலேயே நின்றுவிட்டது. நவரத்தினம் ஒரு இயக்கத்திலே சேர்ந்துகொண்டான். பயிற்சி பெற்றான்.

பயிற்சியில் திறமை காட்டி, இயக்க நடவடிக்கைகளிலும் தீவிரமாகச் செயற்பட்டதால், புதிய போராளிகளுக்குப் பயிற்சி அளிக்கும் ஆசிரியராகிப் பல வீரர்களை உருவாக்கினான்.

1986 ம் ஆண்டில் இயக்க மோதல்கள் ஏற்பட்டு, நவரத்தினம் சார்ந்திருந்த இயக்கத்தின் தலைவர் சுட்டுக் கொல்லப்பட்ட பின் மாற்று இயக்கங்களுக்குத் தடை விதிக்கப்படவே போராட்டத்திலிருந்து ஒதுங்கிக் கொண்டான்.

பெற்றோருடன் இணைந்து வாழ்ந்த நவரத்தினம் கூலித் தொழிலாளியாகி, கிளிநொச்சியிலேயே திருமணம் செய்து வாழ்ந்தான்.

**எஸ்.பி.லெம்பட்**

தொடர்ந்து வரும்...

# கூட்டணியின் தலைமைக் கனவு கலைந்தது...?

கூட்டணி, தமிழ்க் காங்கிரஸ், ரெலோ, ஈ.பி.ஆர்.எல்.எப் ஆகிய கட்சிகள் கடந்த தேர்தலில் தமக்குள் ஒரு கூட்டமைப்பை ஏற்படுத்திக்கொண்டன. ஓஹோ! என்று எழுந்தது பார்... ஒன்று பட்ட எழுச்சி! என்று கூட்டமைப்புக் கட்சிகள் கூக்குரலிட்டுத் திரிந்தாலும் ஓரளவிற்குச் சிந்திக்கத் தெரிந்த மக்கள் கூட்டமைப்பின் உள் நோக்கம் குறித்துத் தெளிவாக இருந்திருக்கிறார்கள்.

கடந்த காலங்களில் கிழக்கின் அம்பாறையிலும், திருமலையிலும் என்ன நடந்தது? வாக்குகள் பிரிந்து போவதால் தமிழ் பேசும் மக்களின் பிரதிநிதித்துவம் பறிபோய்விடும் அபாயமே ஏற்படும் என்று கருதிய மக்கள் அதற்காக வாதாடினார்கள். குறைந்த பட்சம் கிழக்கு மாகாணத்திலாவது கூட்டாகப் போட்டியிடுமாறு மக்கள் கோரிக்கை வைத்துப் போராட்டங்களையும் நடாத்தினர்.

மக்களின் கருத்துக்கள், குறிப்பாகக் கூட்டணிக்கு எருமை மாட்டில் பெய்த மழை மாதிரித்தான்! தேர்தலில் குதித்துத் தோல்வியை மட்டும் சந்தித்துக்கொண்டது. சேர்ந்து போட்டியிடுவதில் தமக்கு ஏற்படும் நட்டத்தை மட்டும் கணக்குப் பார்த்தார்கள். இதனால் மக்களுக்கு என்ன இலாபம் என்று இவர்கள் கருதியிருக்கவில்லை. இழப்பு மக்களுக்கு மட்டும்தான்.

எப்படி முளைத்தது இந்தத் திடீர் ஒற்றுமை முயற்சி? அரை நூற்றாண்டு கால அரசியல் வரலாற்றில் திருந்தாத கூட்டணியினர் ஒரு வருடத்தில் மட்டும் எப்படித் திருந்தியிருப்பார்கள்? எல்லாம் உள் நோக்கம்தான்!

கூட்டமைப்பின் அனைத்துக் கட்சிகளுக்கும் இருந்த பொது நோக்கம் பாராளுமன்ற ஆசனங்களைத் தமக்குள் பங்குபோட்டுக்கொள்வது மட்டும்தான். இதைவிடத் தமிழ்பேசும் நலன்கள் சம்பந்தப்பட்ட விடயம் என்று எதுவுமே இருக்கவில்லை. அபிவிருத்தி முதற்கொண்டு அரசியல் தீர்வு, அன்றாடத் தீர்வு வரையிலான மக்களின் பிரச்சனைகள் குறித்து இக் கட்சிகள் கடைப்பிடித்துவரும் போக்கை வைத்து மக்களே அக் கருத்தை இப்போது முணுமுணுத்து வருகிறார்கள்.

அடுத்து, கூட்டமைப்பை ஏற்படுத்தும் விடயத்தில் கூட்டணிக்கு இருந்த இன்னொரு உள்நோக்கம் மக்கள் ஆதாரபூர்வமாக அறிந்திராத ஒரு விடயம். அதுதான் கூட்டணியின் பதவி மோகமும், தலைமை மோகமும் ஆகும்.

2001 தேர்தல் காலத்தில் கூட்டணியின் ஆனந்தசங்கரி தனக்கு நெருக்கமானவர்கள், மற்றும் வெளிநாட்டு ஆதரவாளர்கள் போன்றவர்களின் காதுகளில் பல கதைகளை அவிட்டுவிட்டிருந்தார். சங்கரியாரின் இந்தக் கிசுகிசு மந்திரங்கள் குறித்துச் சம்பந்தப்பட்ட சக கட்சிகளே அறிந்திருக்காத நிலையில் சாதாரண மக்கள் மட்டும் அவைகளை எங்ஙனம் அறிந்துகொள்ள முடிந்திருக்கும்?

சங்கரி கூறியவை இவைதான். "தருமரையும், ஆலாலையும் சுட்டவர்கள் இவையள்தான். என்ன செய்யிறது? முந்தி ஆயுதம் தூக்கிக்கொண்டு நடப்புக் காட்டி நிண்டவை இப்ப வந்து காலிலை விழாத குறை! செல்வமும்,

## ஊடறுப்பான்

சுரேஸும் தங்களையும் சேர்த்துக்கொண்டு போகட்டாம். அழிஞ்சு போகிற கட்டத்திலை நிக்கினம். இனி என்ன செய்யிறது? நாங்கள் ஒரு நிர்வாகத்தை எடுத்தால், இந்த இரண்டு இயக்கக்காரர்களையும் பொலீஸ், அது, இது எண்டு வரும்தானே! அதுகளுக்குள்ளை இவையளையும் இணைச்சுக்கொண்டு போக வேண்டியதுதான். நாங்கள்தானே இனி இவையளுக்குத் தலைமை குடுக்க வேணும்" இதுதான் சங்கரியின் கனவு.


"பாவம் முன்னாள் போராளிக் குழுக்கள். தமது காலில் விழாத குறை"யென்று சங்கரியாரே வாய் திறந்து கூறிவிட்டார். சங்கரியாரின் நோக்கம், இவர்களை வைத்து மேய்ப்பது மட்டும்தான். ஆனால், சங்கரியாரின் நிலை ஆயுதம் தூக்கிய முன்னாள் போராளிகளின் நிலையைவிடப் பரிதாபம்!

கடந்த 3 ம் திகதி கூட்டமைப்பை அழைத்துப் பேசிய புலிகள், தமது அரசியல் பிரிவோடு இணைந்து செயற்படுமாறு கேட்டிருக்கிறார்கள். சென்றவர்கள் இணக்கம் தெரிவித்துவிட்டு வந்திருக்கிறார்கள்.

சக கட்சிகளுக்கும் தாம் தலைமை கொடுத்து அவர்களை மேய்க்க முற்பட்ட சங்கரியின் கனவு ஈடேறுமா?... பாவம் சங்கரி! தமது பழைய பாணி அரசியலை வைத்து யாருக்கோ தலைமை கொடுக்க முற்பட, இவருக்கும் சேர்த்துப் புலிகள் தலைமை கொடுத்து வருகிறார்கள். ■

# தலைவங்க ஏட்டிக்குப் போட்டி

## நம்ம தலையிலதான் இடி!



## மலையூரான்

என்னாங்க இவுங்க! ஒருத்த ஒண்ணு செய்தா மத்தவ அதை வெட்டிச் சாய்க்கிறதுக்கெண்ணே வேறொண்ணச் செய்யிறேன்னு நிக்கறாங்களே! யாரு குத்தின்னாலும் அரிசியானாச் சரீங்கற மனோபாவோ இவங்ககிட்ட எப்பதா வரப்போவுதோ?

என்னாத்த சொல்லறேங்கறது ஒங்களுக்கு புரியுதுங்களா? நமக்கு சம்பள ஒயர்வு எடுத்துத் தாறோமின்னு நம்ம தலைவங்க தொடங்கினாங்களே, நல்ல முயற்சிதா, நமக்கு அத்தியாவசியமானதுங்கதும் உண்மைதா, ஆனாப் பாருங்க, ஒருத்தரு இதக் கையாண்டுகிட்டுப் போறப்போ மத்தவரு வந்து இடையில குறுக்கிட்டு மொத்தத்தையு செதறிக்கறாப்போல எல்லாங்க நடந்துக்கறாங்க.

இப்ப என்னாங்க? நமக்கு அடிப்படை சம்பளோ போதலிங்கறது எல்லாருமே ஏத்துக்கறதுதானேங்க. அத ஒசத்தித் தரச்சொல்லி தோட்ட மொதலாளிமார் சங்கத்துக்கிட்ட பேசிப் பாத்தாங்க. ஒத்துவரேல்ல. அப்புறோ என்ன செய்ய முடியுங்க. போராடத்தானே வேணுங்க. அதுதா மொதக் கட்டமா ஒத்துழையாமைப் போராட்டமுன்னு தொடங்கினாங்க. என்னாங்க தப்பு இதில?

நியாயமுன்னு படுறப்போ அந்தப் போராட்டத்தில தாங்களும் சேந்துக்கறதுதானே மற்றய மலையக கட்சிங்க, தொழிற்சங்கங்களோட நல்ல மனப்பான்மையா இருக்கணும்? ஆனாப் பாருங்க தங்ககூட கலந்து பேசலைன்னுப்புட்டு அந்தப் போராட்டத்தையே நிராகரிச்சுப்புட்டா யாரு வயுத்துக்கு அடி? தொழிலாளிங்களுக்குத் தானேங்க? தொழிலாளிங்க ஒத்துமையையு பலத்தையும் சின்னாபின்னப் படுத்திறதால்ல முடிஞ்சுப்புடு?

சரி, இவுங்ககூட கலந்துக்கலீன்னா, அது அவுங்க தப்பாக்கூட இருக்கலாம். ஆனாலும் இவுங்களே தாங்களா கலந்துகிட்டா கௌரவங் கெட்டுப்பூடுமா என்ன? அவுங்க பெருந்தன்மையில்ல பொலப்புடு?

நமக்கு பேயரு வராமப் போயிடுங்கறதுக்காக தொழிலாளிங்க வயுத்தில அடிவுழுங்கறதயும் பாக்காம இப்புடி நட்டாத்துல கைகழுவுடறதாப் போல இந்தப் போராட்டோ ஒண்ணும் அவசியமில்லை, அரசாங்கத்தோட பேசியே நாம சம்பளத்த உயத்திப்புடலாமுன்னு சொல்லி கொழப்பிப்புட்டாங்களே!

ஆமா, இதுவரைக்கு எங்க போயிடுச்சு இந்த ஞானோதயோ? அப்பு ஒரு காரியத்தை செய்துக்கற மந்திர வித்தையைக் கைக்குள்ள வைச்சுக்கிட்டா இத்தன நாளா இவரு வஞ்சகம் பண்ணினாரு? அப்புடீன்னா, எப்பவோ அதை செய்திருக்கலாமில்ல. இங்க போராட்டமுன்னு ஒண்ணு கெழம்பினப்பொறவா இவரு இப்பிடி குறுக்கால விழனு?

151ரூபாவுக்கு சம்பளத்த ஒசத்தச்சொல்லி அவரு கேக்க, தா அரசாங்கத்தோட பேசியே 180 ரூபாவா ஒசத்தித் தந்துடறேன்னு இவரு ஜெம்பமடிக்கறாரே, வெறுனே, அவரோட ஒத்துழையாமைப் போராட்டத்தை முறிக்கறதுக்காகப் பேசற பேச்சாயில்லாம, நெசமா இவரால அப்புடி ஏதாச்சு செய்துக்க முடியுங்களா?

அப்புடிச் செய்துக்க முடியாட்டி அப்புறோ இவரு அரசாங்கத்தோட ஒட்டிக்கிட்டு நிண்ணா வெக்கக்கேடாயிடுமில்லீங்களா? அப்புறோ தோட்டத்துப்பக்கோ இவரு திரும்பிப் பாக்க முடியுங்களா?

ஆமா, நா தெரியாமத்தாங் கேக்கறே, இந்த மொதலாளி மாருங்க 151 ரூபாய்க்கே விடாப்பிடியா மறுத்து 144க்குள்ளயேபிடிவாதமா நிக்கறப்ப, இவரால எப்புடிங்க அம்புட்டு தூரோ ஒசத்த முடியு?

அரசாங்கத்தோட பேசி சரிக்கட்டலாமுன்னா அதையே நம்ம ஆறுமுகனும் செய்துக்கலாமே? அவரும் இதே அரசாங்கத்தில தானே இருக்கறாரு. இவுருக்கு மட்டு அரசாங்கத்தில என்னீங்க ஸ்பெஷல் மவுசு?

அரசாங்கத்துக்கு மொதலாளிமாரைக் கட்டுப்படுத்திற அதிகாரமெதுவு சட்டப்படியோ, இல்லை உடன்படிக்கையாவே இல்லீங்களே? எப்புடீங்க அரசாங்கம் இவரு சொல்லறாப்ப செய்துக்க ஏலு?

கடைசியா என்னாயிடுச்சு? நம்ம ஆறுமுகன் தொண்டமானு எடுத்த போராட்டத்த அப்புடியே விட்டுப்புட்டு, சரி நீதா செய்யறேங்கறியே, செய்துக்கன்னு சந்திரசேகரருக்கே பொறுப்ப விட்டுப்புட்டாரு. இப்ப முடிவு என்னாகப் போறதுங்கறது தெரியல. என்னவோ, எல்லாம் நம்ம தலைக்குத்தா இடிங்கறது மட்டும் வெளிச்சோம்.

# காற்றுவாக்கில்...9

காற்றுவாக்கில்... சென்ற வாரம் வரவில்லையே எனப் பல வாசகர்கள் கேட்டிருக்கிறார்கள். இதுபற்றி ஒன்றைக் கூறவேண்டும். காற்றுவாக்கில் கிடைக்கும் செய்திகளும், தகவல்களும் 'காற்றாடி'யினால் அப்படியே குறிப்பிடப்படுவதில்லை. உரியவாறு அவை ஊர்ஜிதம் செய்யப்பட்ட பின்னரே இங்கு தரப்படுகின்றன. இதன் காரணமாகச் சில வேளைகளில் தாமதம் ஏற்படுவதுண்டு. எனவே, இதனை வாசகர்கள் புரிந்துகொள்ள வேண்டுமென்று விரும்புகின்றோம்.

### ஏன் இந்த பாரபட்சம்?

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தில் செய்திகள் வாசிப்பதற்குப் பத்துப்பேரைச் சமீபத்தில் தேர்ந்தெடுத்தார்கள் அல்லவா? அவர்கள் இப்பொழுது செய்தி வாசித்து வருகிறார்கள். அவர்கள் எல்லோரும் செய்திகளைச் சிறப்பாக, தெளிவாக, செய்திகளைச் செய்திகளாகவே வாசிக்கிறார்களா? என்பது வேறு விஷயம். ஆனால், அவர்கள் சார்பில் குறையொன்று சுட்டிக் காட்டப்படுகிறது.

செய்திகளை வாசிப்பதற்கு மும்மொழியினருக்கும் குரல் பரிசோதனை வைப்பதென்று தீர்மானிக்கப்பட்டதாம். ஆனால், தமிழில் செய்தி வாசிப்போருக்கு மட்டுமே குரல் பரிசோதனை முடிந்து, தெரிவு செய்யப்பட்டவர்கள் இப்பொழுது செய்திகள் வாசிக்கிறார்கள். இவர்கள், தமது கடமை நேரத்தில் செய்தி வாசிக்க வேண்டும். அதனால், இதுவரை வழங்கப்பட்டுவந்த விசேஷ கொடுப்பனவுகள் நிறுத்தப்பட்டுள்ளன. ஆனால், ஆங்கிலம், சிங்கள மொழிகளில் செய்தி வாசிப்பவர்கள் தொடர்ந்து கொடுப்பனவைப் பெற்று வருகிறார்களாம். இதற்கு அர்த்தம் என்ன? தமிழில் செய்தி வாசிப்போருக்கு கொடுப்பனவு இல்லை; ஏனைய இரு மொழிகளிலும் வாசிப்போருக்கு கொடுப்பனவு உண்டு. இவ்வரசாங்கம் பொறுப்பேற்றவுடன் திடீரென உயர் பதவிக்கு உயர்த்தப்பட்ட ஒருவர்கூடத் தொடர்ந்து செய்தி வாசித்து இக் கொடுப்பனவைப் பெற்று வருகின்றார் என்று கூறப்படுவது வேறு விடயம். ஆனால், கொடுப்பனவில் ஏனிந்தப் பாரபட்சம்?

### 'சமாதானம்' கசந்துவிட்டதாம்!

சமீபத்தில் 'தமிழோசை' கேட்க நேர்ந்தது. இலங்கையைச் சேர்ந்த ஊடக அதிகாரி ஒருவர் செவ்வி கொடுத்திருந்தார். "இலங்கையின் இனப் பிரச்சனை தொடர்பில் சமாதான முயற்சிகள் குறித்து அவர் சார்ந்த ஊடகம் ஏதாவது குறிப்பாகச் சேவை செய்து வருகின்றதா?" என்று அவரிடம் கேட்கப்பட்டது.

"சமாதானம் என்ற வார்த்தையே எமக்கு அலுத்துப்போய்விட்டது. இப்பொழுதெல்லாம் அந்த வார்த்தையைத் தவிர்த்து, நிகழ்ச்சி செய்கின்றோம்" என்ற கருத்துப்படப் பதிலளித்

## காற்றாடி

தார் அந்த அதிகாரி. அத்துடன் நின்றுவிடவில்லை. "முன்னைய அரசாங்கத்தில் தணிக்கை கடுமையாகக் கடைப்பிடிக்கப்பட்டது. ஆனால், இப்பொழுது அது சற்றுத் தளர்த்தப்பட்டு, ஓரளவு சுதந்திரம் கிடைத்துள்ளது. அதனால், ஆறுதலடைகிறோம்" என்றும் அந்த அதிகாரி கூறினார். தலையாட்டி பொம்மைகள் என்று பெயரெடுத்த பல அரச அதிகாரிகள் கூட ஓரளவு துணிந்து கருத்துச் சொல்ல முற்பட்டிருப்பது ஓர் ஆரோக்கியமான நிலைப்பாடுதான்!

### 'ஐ' அலைவரிசையில் செய்திகள்

ரூபவாஹினியின் முதலாவது அலைவரிசையில் மாலை 6.30 க்கு ஒளிபரப்பாகி வந்த செய்திகள் ஒகஸ்ட் முதல் 'ஐ' அலைவரிசையில் இரவு எட்டு மணிக்கு ஒளிபரப்பப்படுகின்றன. இந்த மாற்றம் சரிவர நேயர்களுக்கு அறிவிக்கப்படவில்லை என்பதால், அவர்கள் தமது ஏமாற்றத்தைத் தெரிவித்தனர். அலைவரிசை ஒன்றில் ஒளிபரப்பாகி வந்த தமிழ் நிகழ்ச்சிகள் அனைத்தும், இப்போது 'ஐ' அலைவரிசைக்கு மாற்றப்பட்டு, ஒளிபரப்பாகி வருகின்றன.

'ஐ' அலைவரிசையைத் தமிழ், ஆங்கில மொழி நிகழ்ச்சிகளுக்கான ஓர் அலைவரிசையாக ஆக்கிவிடும் ஏற்பாடுகள் நடந்துவருவது கேட்டு மகிழ்ச்சி கொள்ளலாம். ஆனால், 'சக்தி' செய்திகள் இரவு எட்டு மணிக்கு ஒளிபரப்பாகிவருவதால், ஏதாவதொன்றைத்தானே பார்க்க முடியும். இதைச் சரியான 'திட்டமிடல்' என்று கருதலாமா? 'இல்லை' என்றால், ரூபவாஹினி நிர்வாகத்திற்கு இது சமர்ப்பணம்!

### தமிழ் நாடகப் போட்டி


கலைக் கழக தமிழ் நாடகக் குழு, மேடை நாடகப் போட்டிகளை நடாத்தப் பிரதிகள் கோரியுள்ளது. புதிய குழு சுறுசுறுப்பாக இயங்க ஆரம்பித்துள்ளது. பாராட்ட வேண்டியதுதான்! ஆயினும், கலைக் கழகத்தின் கீழ் நியமிக்கப்பட்ட சகல குழுக்களும் தமது வேலைத் திட்டத்தையும், செலவு மதிப்பீட்டையும் உயர் பீடத்திற்கு அனுப்பி வைத்துள்ளன. இதுவரை பண ஒதுக்கீடு பற்றி எதுவித சமிக்ஞையும் இல்லையாம். இதனால், செலவினங்களை எப்படி மேற்கொள்வது என்று குழுவினர் அங்கலாய்க்கின்றனர்.

### மாற்றுக்கருத்துக்கு இடமில்லையா?

எம்.ரி.வி. தொலைக்காட்சியில் காலையில் 'குட் மோர்னிங் ஸ்ரீலங்கா' என்ற நேரடி நிகழ்ச்சி ஒளிபரப்பாகி வருகிறது. பல்வேறு பிரமுகர்கள், அரசியல்வாதிகள், அமைச்சர்கள், எதிர்க்கட்சித் தலைவர்கள், ஏன் பிரதமர் கூட இந் நிகழ்ச்சியில் பேட்டி காணப்படுகின்றனர். சில தினங்களுக்கு முன் L.S.S.P. பட்டி வீரக்கோன் பேட்டிகொடுத்தார். பாவம், அவர் சொல்ல வந்ததாகக் கூறி முடிப்பதற்கு முன் அது 'கட்' செய்யப்பட்டுவிட்டது. பட்டி வீரக்கோன் பழுத்த ஒரு தலைவர். அவரிடமிருந்து பல மாற்றுக்கருத்துக்களை எதிர்பார்த்தோம். ஆனால், முடியவில்லை. ஆரோக்கியமான அரசியல் என்றால் மாற்றுக்கருத்துக்களைக் கேட்கவிரும்புவதில் தவறில்லை அல்லவா? அதனைத் தடுப்பது ஜனநாயகமாகாது.

ஸ்போர்ட்ஸ்

# முரளியை விலக்கச் சதி?



இலங்கை கிரிக்கெட் அணியின் நட்சத்திர சுழல் பந்து வீச்சாளர் முத்தையா முரளிதரனை இலங்கை அணியிலிருந்து விலக்கும் வகையிலான சதித் திட்டம் ஒன்று தீட்டப்பட்டு வருவதாகக் கிரிக்கெட் வட்டாரங்களில் பரவலாகப் பேசப்படுகிறது.

இலங்கை கிரிக்கெட் அணிக்குள் முன்னொருபோதும் இல்லாத அளவு அரசியல் விளையாடத் தொடங்கியிருப்பதை முரசு ஏற்கனவே சுட்டிக்காட்டியிருந்தது.

இலங்கை அணியின் முன்னாள் தலைவரும் தற்போதைய பொது ஜன ஐக்கிய முன்னணி பாராளுமன்ற உறுப்பினருமான அர்ஜூன ரணதுங்கவும், முரளிதரனும் மிகவும் நெருங்கியவர்கள். கடந்த காலங்களில் முரளியின் பந்து வீச்சு தொடர்பில் அவுஸ்திரேலிய நடுவர்களினால் சந்தேகம் கிளப்பப்பட்டபோது முரளி சார்பில் தீவிரமாக வாதாடியவர் அர்ஜூனா. இதன் மூலம் இந்த இருவருக்கும் இடையில் அதிகரித்த நெருக்கம் உண்டு.

அரவிந்த டி சில்வாவுக்கு ஆரம்பம் முதலே முரளியைப் பிடிக்காது. முரளியைப் பலமுறை பகிரங்கமாக விமர்சித்திருக்கிறார் அரவிந்த. தன்னாலும் இந்திய அணியின் நவ்ஜோத் சிங், சிது போன்றவர்களாலும் முரளியின் பந்துக்கு லாவகமாக அடிக்க முடியும் என்றும், ஒரு தடவை முரளியின் பந்துக்கு சிது அடித்த அடியில் மைதானத்துக்கு வெளியில் ஒரு சீக்கியரைக் கண்டாலே முரளி பயப்பட ஆரம்பித்தார் எனவும் அரவிந்த பேட்டி ஒன்றில் குறிப்பிட்டார்.

அரவிந்த டி சில்வா திறமையாக ஆடாததால் அணியிலிருந்து இடைநிறுத்தப்பட்டவர். ஐ.தே.க. அரசு பதவிக்கு வந்ததும் மீண்டும் அணியில் இவர் இடம்பெற்றார். அரவிந்த அமைச்சர் மிலிந்த மொறகொடவின் நெருங்கிய சகா, மிலிந்தவுக்காக தேர்தல் மேடைகளில் பிரசாரம் செய்தவர். இந்த நெருக்கத்தால் அரசாங்கத்தில் தனக்குள்ள செல்வாக்கைப் பயன்படுத்தி முரளியின் கிரிக்கெட் வாழ்வுக்கு முடிவு கட்ட அவர் முயன்று வருவதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

முரளி இது குறித்து அவரது நலன் விரும்பிகளால் எச்சரிக்கப்பட்டிருக்கிறார். கடந்த சில வாரங்களாகக் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையுடன் தொடர்புபட்ட பல சர்ச்சைகளில் முரளி சிக்கியுள்ளார். இதனையடுத்து இனிவரும் நாட்களில் ஊடகங்களுக்கான பேட்டிகளின் போது கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையை விமர்சிப்பதைத் தவிர்க்குமாறு முரளி வலியுறுத்தப்பட்டுள்ளார்.

இலக்கிய நயம்

# கண்களின் வார்த்தைகள் புரியாதா...?

அருகே படுத்திருந்த தீபனைக் காணாமல் எழுந்து விளக்கை ஏற்றினாள் விசாலி.

திடீர் ஒளியில் அவளுக்குக் கண் கூசியது. கண்ணைக் கசக்கியவாறே சுற்று முற்றும் பார்த்தாள்.

தீபனைக் காணோம்.

மெல்ல வீட்டின் பின்புறத்திற்கு வந்தாள்.

இருளில் எதுவும் தெரியவில்லை. நிலவை மேகங்கள் மறைத்திருந்தன. பார்வையைக் கூர்மையாக்கித் தொலைவில் பார்த்தாள்.

தோட்டத்தின் நடுவே நிழலுருவாக தீபன் அமர்ந்திருப்பது தெரிந்தது.

அவனை நோக்கி நடந்தாள்.

அருகில் செல்ல... மேலே மேகங்கள் விலகியதில் பளீரென ஒளி பரவியது.

தீபன்தான்! இரு கைகளையும் பின்னால் ஊன்றியபடி ஏறத்தாழ வானத்தைப் பார்த்து அமர்ந்திருந்தான்.

விசாலி ஓசைப்படாமல் அருகே சென்று அமர்ந்தாள். இவளைத் திரும்பிப் பாராமலே, "ம்... என்னடா திடீர் வெளிச்சம் என்று பார்த்தேன்..." என்றான் தீபன்.

"நிலவு" என்றாள் விசாலி நிமிர்ந்து வானத்தைப் பார்த்தபடி.

"தெரிகிறது" என்றான் தீபன் இவளைப் பார்த்தபடி.

அருகே நெருங்கி அமர்ந்து கொண்ட விசாலி, குத்திட்டு மடித்திருந்த அவன் முழங்காலில் தலையைச் சாய்த்துக் கொண்டாள்.

அவன் ஊன்றியிருந்த கைகளில் ஒன்றை எடுத்து அவள் தலையைக் கோதினான். அவள் கூந்தலுக்குள் சிக்கியிருந்த சில மல்லிகை இதழ்கள் அவன் விரல்களில் சிக்கின.

அவளுடலும் மென்மையில் இதுபோலத்தான் என்று நினைத்துக் கொண்டான். மெல்லக் கையை அவள் கன்னத்திற்கும் தோளுக்கும் இடையே கொண்டு வந்தான். புஷ்பம் போல் மென்மையாக இருந்த அப்பகுதியை ஆசையோடு அவன் கைகள் தடவிக் கொடுத்தன.

அந்த மென்மைச் சுகம் விரல்கள் வழியாக அவன் மூளையைச் சென்று தொட்டது. உறுதியும், வேற்று நினைவும் காற்றில் பறந்தது.

அவளை இரு கைகளாலும் அருகே இழுத்துத் தன் முன்னால் அமர்த்தி அணைத்துக் கொண்டான்.

"தனிமையைக் குழப்பி விட்டேனா?" என்றாள் இரகசியக் குரலில் விசாலி.

தீபன் மௌனமாக இருந்தான்.

அந்த மௌனத்திலும் விசாலிக்கு இணையற்ற மகிழ்ச்சியே இருந்தது. தனது முதுகுப் புறத்தில் தீபனின் மார்பு துடிப்பதை அவள் உணர்ந்தாள். அந்த மௌனத்தை உடைக்கும் விதமாக அவன் நெஞ்சு அதிர்வது அவளுக்குக் கேட்டது. அவனது இதய சப்தத்தை அவள் முதுகு நரம்புகள் வாங்கி உடலெங்கும் பரப்பிக் கொண்டிருந்தன.

அவன் கால்களுக்கும் இரு கைகளுக்குமிடையில் சிறைப்பட்டிருந்த அவள், தனது உடல் முழுவதுமே அவனது இதயம் சப்திப்பது போன்ற உணர்வையடைந்தாள். அந்த நிலையில் மௌனத்தையே அவள் பெரிதும் விரும்பினாள்.

கூடவே, பின்னாலிருந்து ஒலிக்கும் இதயத்திற்கே இத்தனை சக்தி இருக்குமென்றால், நாங்கள் எதிரெதிரே இருந்து இதயங்கள் எதிரெதிரே பொருந்திச் சப்தித்தால்...! அதற்கு மேல் எண்ணவும் அஞ்சினாள்



விசாலி. ஆனால் நினைவுப் பாய்ச்சல்களுக்கு ஏது தடை? ஆழ்ந்த பெருமூச்சொன்று அவளிடமிருந்து வெளிப்பட்டது.

"என்ன?" என்றான் தீபன் அவள் கன்னத்தருகே குனிந்து.

ஏதேதோ எண்ணங்களின் அனுபவத்தில் மிதந்துகொண்டிருந்த விசாலி, அதிர்ந்து "ஒன்றுமில்லை" என்று முனகினாள்.

அவன் கை அவளது முகவாய்க் கட்டையில் பதிந்து, கன்னம் இரண்டையும் அழுந்தப் பிடித்து, முகத்தைத் தன் முகம் நோக்கித் திருப்பியது.

கண்களைக் கண்கள் நீண்டநேரம் சந்தித்தன.

அதே சமயம் அவனது இடதுகை அவள் இடையிலிறங்கி வளைந்து இறுக்கி அவளைத் தன்னருகே இழுத்தது. அந்த மலருடல் பூரண சம்மதத்துடன் அவனுடலுடன் இழைந்தது. அந்த முரட்டுத் தனத்தில் அமிழ்ந்தது.

குளிருக்குத் தலையணையை மார்போடு அழுத்துவதைப் போன்று அவளை அணைத்திருந்த நிலையில் அவன் சொன்னான்."நோய் தரும் கண்கள்" என்று.

"என்ன?" என்றாள் அவன் முரட்டுத்தனத்தால் திணறியபடி விசாலி.

"இந்தக் கண்கள்" என்றபடி அவளது இமை மடல்களை முத்தமிட்டான் தீபன்.

விசாலியின் உணர்ச்சிகள் பெரும் கொந்தளிப்பை அடைந்தன. உடலின் நரம்புகள் துள்ளி விளையாடின. இதயம் ஏதோ போர் முகாம் போல் திடீர் திடீரென உள்ளே அடித்துக் கொண்டது. ஆனாலும் அவளது கட்டுடல் யாவும், வெற்றி வீரனை முரசும் விருதுகளும் கொண்டு அழைக்கத் தயாராயிருக்கும் கோட்டை போல விளங்கியது.

அந்த முரசுகள் அவளை அணைத்திருந்த தீபனின் சித்தத்தில் ஒலிக்கத்தான் செய்தன. அவள் வழங்கத் தயாராயிருந்த விருதுகளும் அவன் கண்ணுக்குத் தெரிந்தன.

வெற்றி கொள்ளும் வெறியிலிருந்தான் தீபன்.

முரட்டுத்தனமாக அவள் கன்னத்தோடு உராய்ந்து கொண்டே, "நிலவுக்கு உயிர் கொடுத்தது போல் வந்தாய். இப்போது என் உயிரை யல்லவா வாங்குகிறாய்..." என்று முணுமுணுத்தான்.

"நானெங்கே உயிர் வாங்குகிறேன்... நீங்களல்லவா... உடன்படிக்கையை மீறுகிறீர்கள்..." என்று திக்கித் திக்கிப் பேசினாள் விசாலி. "நிரம்பா மென்சொல்" என்று இலக்கியம் வருணிக்கும் அந்தத் தழுதழுத்த வார்த்தைகள் அவளிடமிருந்து வெளிப்பட்டது அவனை மேலும் வெறிகொள்ள வைத்தது.

அவள் மூச்சு வாங்கும்படியாக இறுக்கிச் சேர்த்துக் கொண்டவன், "என்ன உடன்படிக்கை?" என்றான்.

"அர்த்த ராத்திரியில் இப்படி வெளியே உலவுவதில்லை என்று என்னிடம் சொல்லியிருக்கிறீர்கள்..."

"தூக்கம் வரவில்லை"

"அதற்காக, இப்படிப் பனிக் குளிரில் வந்தமர்ந்து கொள்வதா?"

"இப்போது ஏது குளிர்?" என்று அவளை மேலும் இறுக்கினான்.

"ஐயோ..." என்றபடி நெளிந்தவள், "உடன்படிக்கையை மீறியது உங்கள் குற்றம்" என்றாள்.

"உடன்படிக்கையை மீறுவது தமிழர்களின் உரிமைகளில் ஒன்று" என்று சிரித்தான் தீபன்.

"போதும் சிரிப்பு. உள்ளே போகலாம் வாருங்கள்" என்று வெடித்தாள்.

"உதடுகள்தான் இதைப் பேசுகின்றன. உன் கண்கள் பேசுவதோ வேறு" என்றான் குனிந்து அவள் நெற்றியில் உதடுகளை உரசியபடி.

"என்ன?"

"காதல் வேட்கையை உணர்த்தி, 'எழுந்து போய்விடாதே' என்று இறைஞ்சுகின்றன உன் கண்கள்"

"அ.. ஆ... உங்களுக்குப் பிடித்த மாதிரி எதையாவது நினைத்துக் கொள்வீர்கள் நீங்கள்..."

"இல்லை அன்பே! பெண்மையின் சிறப்பு முழுவதையும் உணர்த்தி நிற்கும் இந்தக் கண்கள் பேசுகின்ற காதல் வார்த்தைகள் எனக்குத் தெளிவாகக் கேட்கின்றன... இனி, இந்தக் கண்களின் இரவுதான்" என்றபடி அவளைத் தரையில் சாய்த்தான் தீபன்.

**பெண்ணினாற் பெண்மை**
**உடைத்தென்ப கண்ணினால்**
**காமநோய் சொல்லி இரவு.**

*(குறள்: 1280)*

தருவது

முழடில்யன்

# சிந்தியா பதில்கள்

★ **இலங்கையில் 'சமாதானக் குழந்தை'யைப் பெற்றெடுப்பதற்காகப் பேச்சுக்கள் நடைபெறுகின்றன. ஆனால் குழந்தை பிறப்பதற்குப் பெற்றோர்கள் சம்மதிக்கிறார்களில்லையே, ஏன்?**

ஆர். நித்தியானந்தன், நாவலப்பிட்டிய

*குழந்தை தப்பிப் பிறந்தால் பெற்றோர் இறந்து விடுவார்களென்று பயப்படுகிறார்களோ என்னவோ!*

★★

★ **நீங்கள் பெரிய மேதாவி என்றால் இதற்குப் பதில் சொல்லுங்கள். கிணற்றில் விழுந்தவரைக் காப்பாற்ற நீங்களும் குதிக்கிறீர்கள் என்று வைத்துக் கொள்ளுங்கள். உள்ளே விழுந்தவுடன் முதன் முதலில் என்ன செய்வீர்கள்?**

மு.மாதவி, மன்னார்.

*மன்னிக்கவும். மேதாவிகள் ஒரு நாளும் தாங்களே குதிக்க மாட்டார்கள். மற்றவர்களை வைத்துத்தான் பரிசோதனைகளை நடத்திக் கொள்வார்கள்.*

★★

★ **எந்தெந்த விஷயங்களில் நாம் ஜாக்கிரதையாக இருக்க வேண்டும்?**

ஏ.ஏ.எம்.பாரூக், குருணாகல்

*பயத்தின் காரணமாகவும், அதிகாரத்தின் மீது கொண்ட ஆசையாலும் நம் எல்லோருக்கும் பொதுவான வாழ்க்கை வளங்களை அழித்த ஏராளமான மனிதர்கள் வரலாற்றில் நிரம்பிக் கிடக்கிறார்கள். அதையே தொடர்ந்தும் நடக்கவிடக் கூடாது என்பதில்தான் நாம் ஜாக்கிரதையாக இருக்க வேண்டும்.*

★★

★ **சந்தியா தாக்குப் பிடிப்பாரா?**

ப்ரசன்னா, வெள்ளவத்தை

ஒரெழுத்து மாற்றத்திலிருந்தால் மட்டும் போதாது. ஒழுங்காகக் கடிக்கவும்... சே... நடிக்கவும் தெரிந்திருக்க வேண்டும். பாவம் விஜய்! கடைசி மூன்று படங்களிலும் நாயகியரால் தொல்லை என்றாகிவிட்டது.

★★

★ **ஜனாதிபதியின் கைப்பை?**

எம்.ஹிஸான் நஸீர், ஹேனமுல்லை.

ரவிக்கும் ராஜிதவுக்கும் சமானமாகப் பேச அவரையும் 'இறக்கி' விட்டிருக்கிறது.

★★

★ **வை. கோபால்சாமி கைதை எதிர்த்து இங்கே நடைபெறும் உண்ணாவிரதம், ஆர்ப்பாட்டங்கள் பற்றி?**

ஆர்.சஜீ, அனுராதபுரம்.

*வைகோவும், நெடுமாறனும் தீவிரவாதம் பேசித் தங்கள் இருப்பை அங்கே காட்டிக்கொண்டிருப்பதை விட, இலங்கை அரசாங்கமும், புலிகளும்*



விக்ரம்–சிநேகா
(படம்: கிங்)

*காலத்தைக் கடத்தாமல் பேசி ஒரு தீர்வுக்கு வரவேண்டும் என்று வற்புறுத்துவார்களானால் நல்லது என்று ஒரு இந்தியப் பத்திரிகையாளர் எழுதியிருப்பதுதான் சரி என்றுபடுகிறது.*

★★

★ **தென்னாபிரிக்காவில் நடைபெறவிருக்கும் கிரிக்கெட் உலகக் கிண்ணத்தை நம் நாட்டு அணி கைப்பற்ற வாய்ப்பிருக்கிறதா?**

எஸ்.சச்சி, தோப்பூர்.

ஆம் என்று திடமாகச் சொல்ல முடியவில்லை. விளையாட்டு வீரர்கள் நட்சத்திரங்களாக மாறிவிட்டால், விளையாட்டுக்கு மேலாகத் தங்களுடைய சொந்த இமேஜும் முக்கியமாகத் தெரிய ஆரம்பித்துவிடுகிறது. இது தொடர்பாய் மனதிலுள்ள அதிருப்திகளை வெளிப்படுத்தலாம் என்ற நிலையும் ஏற்பட்டு விடுகிறது. பிரபல நட்சத்திர வீரர்களைக் கொண்ட இந்தியா, மேற்கிந்திய அணிகளின் சரிவிற்கு இதுவே பிரதான காரணமாகவிருந்தது. இப்போது இலங்கையணியிலும் நட்சத்திர வீரர்கள் உருவாகிவிட்டார்கள். என்னதான் திறமைகள் இருந்தாலும், மனக்கசப்புக்களுடனே விளையாடி அணியை வெல்ல வைக்க முடியாது. அர்ஜுன, அரவிந்த, இப்போது முரளியும் அதிருப்தியை வெளிப்படுத்தத் தொடங்கிவிட்டார். இந்நிலையில் உலகக் கிண்ணத்தில் நாம் நம்பிக்கை வைக்க முடியாது. நம் நாட்டில் நடைபெறுவதால் மினி உலகக் கிண்ணத்திற்கு ஒருவேளை வாய்ப்பிருக்கிறது.

★★

★ **தாய்லாந்துப் பேச்சுக்கு என்ன நடக்கிறது?**

மு.புனிதன், கோணகலை.

அதுவா இப்ப நமக்கு முக்கியம்? வைகோவை எப்போது விடுவிப்பார்கள் என்று கேளுங்கள்.

★★

★ **ரூபவாஹினியிலும் செய்திகளை இரவு எட்டு மணிக்கு ஒளிபரப்ப ஆரம்பித்து விட்டார்களே... சக்திக்குப் போட்டியாகவா?**

நிஹாரா ஜெளபர், புதிய காத்தான்குடி-06.

*அதை விடுங்கள். தமிழ்ச் செய்திகளும்கூட அலைவரிசை ஒன்றில் வேண்டாம் என இரண்டிற்கு (Eye) மாற்றிவிட்டார்கள். ரூபவாஹினி-1 முழுக்க முழுக்கச் சிங்களச் சனலாகிவிட்டது. 'ஐ' சனலை தமிழ்ச் சனலாக்குவது என்ற கதை என்னாச்சு? குடுத்திருப்பது 'அல்வா' தானா?*

★★

★ **தமிழ் மக்களின் பெயரில் நடைபெறும் கூத்துக்கள் எல்லாம் சகிக்கமுடியாமல் இருக்கிறது. உலகத்தின் பார்வையில் மேலும் மேலும் முட்டாள்களாகக் காட்டிக்கொண்டிருக்கிறோம் என்று தோன்றுகிறது. இருந்தும் இதிலெல்லாம் நமக்கு ஒப்புதல் இல்லை என்று எதிர்த்து ஒன்றும் செய்யாமல் எல்லாவற்றுக்கும் நாமும் உடந்தை என்று காட்டவேண்டியிருக்கிறதே?**

ஏ.பிரதீபன், வவுனியா.

*வாழ விரும்புகிறவர்களுக்கு இன்று, இந்த நாட்டில் ஏற்படக் கூடிய அவஸ்தைதான் இது. ஏனென்றால், வாழ விரும்புகிறவர்களை, அவர்களுக்குப் பிடிக்காத விஷயங்களையும் செய்யக் கட்டாயப்படுத்த முடியும் என்பதனால் தான் இந்த அவஸ்தை.*

# மன்னாதி மன்னன்

116

## கமலரேகையின் கதை

இராஜகுமாரன்

பதினாறாவது நாளன்று அதிகாலை போஜ மன்னர் துயிலெழுந்து அவரது காலைக் கடன்களை முடித்துக் கொண்டு விக்கிர மாதித்த மன்னரின் அரியணை வைக் கப்பட்டிருந்த மண்டபத்தை வந்தடைந் தார். அரியணைக்குரிய பூசைகளை முடித்த அந்தணர்களிடமிருந்து மலர் களை எடுத்து பயபக்தியுடன் அரியணை மீது தூவினார். பின்னர் ஒவ்வொரு படி யாக ஏறிப் பதினாறாவது படியை வந்த டைந்ததும், அப்படிக்குக் காவலாக நின் றிருந்த பரிபூரணவல்லிப் பதுமை போஜ மன்னரை மேற்கொண்டு போக விடாமல் தடுத்தது.

“போஜ மன்னரே! இதுவரை எனது சகோதரிகளான பதினைந்து பதுமை களும் மாமன்னர் விக்கிரமாதித்தனுடைய சிறப்பம்சங்களை எடுத்துக் கூறினார் கள். இன்று மீண்டும் வந்து நிற்கிறீர் கள். மாமன்னருடைய பேராற்றல் பற்றி என் பங்கிற்கு நானும் கூறுகின்றேன். அம் மாமன்னருடைய சிறப்பம் சங்களில் உம்மிடம் ஏதா வது இருக்குமானால் நீர் மேலே செல்ல லாம்” என்று கூறியது.

“பரிபூரணவல்லிப் பதுமையே! மாமன் னர் விக்கிரமாதித்தனுடைய கதைகள் ஒவ்வொன்றும் அன்னாருடைய மேன் மைக்கு எடுத்துக் காட்டாக விளங்குகின் றன. என்வே நீயும் உனக்குத் தெரிந்த வற்றைக் கூறலாம்.” என்று போஜமன் னர் தெரிவித்ததும் பதுமை கதை கூறத் தொடங்கியது.

“உஜ்ஜயினி மாகாளிப் பட்டணத்தி லிருந்து நீதி நெறி தவறாமல் நல்லாட்சி புரிந்த விக்கிரமாதித்த மாமன்னன் முன் னிலையில் அன்னிய நாட்டைச் சேர்ந்த ஒருவன் வந்து சேர்ந்தான். மன்னர் அவனுடைய பெயர், ஊர், ஆகியவற்றை யெல்லாம் விசாரித்தார்.

தன் பெயர் வீரியன் என்றும் ஆரிய நாட்டைச் சேர்ந்தவன் என்றும் கூறிய அவன் தேச சஞ்சாரம் செய்து வருவ தாகக் கூறினான். “உன்னுடைய ஆரிய நாட்டில் ஏதாவது ஒரு விசேஷமுண்டா” என்று மன்னர் வினவினார். “ஆம் பிரபு! அங்கு இப்பொழுது ஆண்களே வெகுவாகக் குறைந்து விட்டனர். இன் னும் சில நாட்கள் சென்றால் அங்கு எந்த ஆண்மகனும் உயிருடன் இருக்க முடியாது என்ற நிலை உருவாகிவிட் டது.” என்று பதில் கூறினான் வீரியன்.

“இதற்கான காரணம் என்ன?” என்று மன்னன் கேட்டபோது வீரியன் இவ்வாறு கூறினான்,

“எங்கள் நாட்டில் கமலரேகை என்ற ஒரு தாசி இருக்கிறாள். அவளைப் போல் அழகியை இந்தப் பூவுலகெங்குமே காண முடியாது. அவள் வீதியில் இறங்கி நடக் கும்போது அவளைப் பார்க்கும் ஆண்கள் எவரும் அவளுடைய அழகில் மயங்காமல் இருக்க முடியாது. அவள் பின்னாலேயே எல்லா இளைஞர்களும் படையெடுத்துச் செல்லுவர். இளைஞர்கள் மட்டுமல்லாமல் குடும்பஸ்தர்களும் வயதான கிழவர்கள் கூட அவளுடைய கடைக்கண் பார்வைக் காக ஏங்கியபடி குடுகுடுவென்று ஓடிச் செல்வார்கள். கமலரேகை தன் பின்னால் வரும் எந்த ஆணையும் வெறுத்து ஒதுக்குவதில்லை. எல்லோருடனும் இன் முகம் காட்டிப் பேசுவாள். அவளுடைய இருப்பிடம் திரும்பியதும் அவளை மிகவும் நெருங்கிவரும் எந்த ஆணையும் அணைத் தபடி உள்ளே அழைத்துச் சென்று விடு வாள். அவளுடன் செல்ல முடியாது தோல்வி கண்டவர்கள் தங்களுக்குரிய சந்தர்ப்பம் அடுத்த நாளாவது கிடைக்கும் என்று ஏங்கியபடி நின்று விடுவார்கள்.

தாசி கமலரேகையுடன் அவளுடைய மாளிகைக்குச் சென்ற ஆண் மகன் அடுத்த நாட்காலை பிணமாகக் கொண்டு வரப்பட்டு அந்த அரண்மனையின் முன்பு றம் கிடத்தப்பட்டிருப்பான். ஒவ்வொரு நாளும் இதே போன்று அவளுடன் இர வைக் கழிக்கச் செல்லும் ஒவ்வொரு ஆண் மகனும் அடுத்த நாட்காலை உயி ரற்ற பிணமாகவே வீதியில் கிடப்பான்.

இந்த மர்மத்தைத் துலக்க இதுவரை எவராலும் முடியவில்லை. தாசியின் அழகில் மயங்கி மையல் கொண்டு, அவள் பின் செல்பவர்கள் பின்பு பிணமாகவே மீட்டெடுக்கப்பட்டு வந்தனர். அன்றாடம் இந்தக் கொடுமை நடைபெறுவதைக் கண் ணாரக் கண்ட பின்பும் அவளுடைய பாதை யில் செல்லாமல் ஒதுங்கியிருப்பதற்கு எந்த ஆண் மகனாலும் முடியவில்லை. விட்டில் பூச்சிகளைப் போல் தாசி கமலரே கையின் அழகில் மயங்கி உயிர் துறந்த வர்கள் பலநூறுபேர். இதனால் வீட்டில் உள்ள பெண்கள் தங்கள் கணவன்மாரை யும் ஆண் பிள்ளைகளையும் வீதிகளில் நடமாடவிடாமல் தடுத்து விடுகின்ற னர். இதனால் என்னுடைய பெற்றோ ரும் அந்த நகரத்தில் என்னை இருக்க வேண்டாம் என்று கூறி தேச சஞ்சாரம் செய்ய அனுப்பி வைத்தனர்.

எங்கள் நாட்டில் நடைபெறும் இக் கொடுமையைத் தடுத்து நிறுத்த இது வரை எவரும் முயற்சியெடுத்ததாகத் தெரியவில்லை. இந்தக் கொடுமையைத் தீர்த்து வைத்து எங்கள் நாட்டு ஆண் மக்களைக் காப்பாற்றத் தங்கள் ஒரு வர ால்தான் முடியுமென்று நம்பித் தங்களி டம் வந்துள்ளேன். கருணை கூர்ந்து தாசி கமலரேகையின் கொடுமைக்கு முற்றுப் புள்ளி வைத்துத் தருமாறு பணி வன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.” என்று வீரியன் மன்னரின் தாள் பணிந்து கேட்டுக் கொண்டான்.

வீரியனைச் சமாதானப்படுத்தி அரண்மனை விருந்தினர் மாளிகையில் தங்க வைக்கும்படி காவலர்களுக்குக் கட்டளையிட்டார்.

அமைச்சர் பட்டியை அழைத்து வீரி யன் கூறிய கதைகளைக் கூறி ஆலோ சனை நடத்தினார். பட்டியும் இக்கதை யைக் கேட்டு அதிசயப்பட்டார்.

மன்னர் விக்கிரமாதித்தன் அடுத்த நாட்காலையில் வேதாளத்தின் உதவி யுடன் ஆரிய நாட்டிற்கு விரைந்து சென் றார். ஒவ்வொரு நாட்காலையிலும், கமல ரேகை நதிக்கரைக்கு நீராடச் செல்வாள் என்று மன்னன் விக்கிரமாதித்தன் கேள் விப்பட்டார். அவள் நீராடச் செல்லும் பாதையின் ஒரு புறத்தே நின்று அவதா னித்துக் கொண்டிருந்தார். அப்போது பேரழகு படைத்த ஓரிளம் நங்கை தனது தோழியருடன் நடந்து வருவதைக் கண் டார். அவளுக்கு முன்னும் பின்னும் நூற்றுக் கணக்கான பலதரப்பட்ட வயது டைய ஆண்கள் கூட்டமாக வந்து கொண் டிருப்பதையும் கண்டார்.

வீரியன் கூறியது போல சகல வகை யிலும் கமலரேகை மிகச் சிறந்த அழகி யாகவே மன்னர் விக்கிரமாதித்தனுக்குத் தெரிந்தாள்.

‘இத்தகைய பேரழகியைக் கண்டு மயங்காத எந்த ஆணும் இருக்க முடியாது தான்’ என்று மன்னர் விக்கிரமாதித்தன் உணர்ந்து கொண்டார். எப்படியாவது தான் அன்றிரவு கமலரேகையின் வீட்டுக் குச் சென்று, அவளுடன் செல்லும் ஆண் கள் ஏன் உயிரிழக்கிறார்கள் என்ற மர்மத்தைக் கண்டுபிடிக்கத் திட சங் கற்பம் பூண்டார்.

ஒரு சாதாரண வணிகனைப் போல் வேடமிட்டு அப் பெண்ணுடன் சென்று கொண்டிருந்த ஆண்களுடன் சேர்ந்து கொண்டார். கமலரேகை நீராடிவிட்டுத் திரும்பும் போது ஏனையவர்களைப் பின் தள்ளிவிட்டு மன்னர் முன்னேறிச் சென்று அவளுடைய மாளிகைக்குள் புகுந்து கொண்டார்.

மன்னர் விக்கிரமாதித்தனை ஒரு சாதாரண மனிதன் என்று கருதிய கமல ரேகை அவரை வரவேற்று உபசரித்தாள். அவள் கொடுத்த பால், பழம் ஆகிய வற்றை அவர் தொட்டும் பார்க்கவில்லை. அவள் இனிமையாகப் பாடினாள்.

(மன்னன் வருவான்...)

---

# காதில பூ கந்தசாமி

## நோட்டீஸ் பலகை



நான் சொல்வ தெல்லாம் பொய். பொய்யைத் தவிர வேறொன்று மில்லை *-காதில பூ கந்தசாமி-*

என்னடாப்பா இது! கட்டிடத்துக்கு ‘பாம்’ வைக்கிறான். பாலத்துக்கு ‘பாம்’ வைக் கிறான். வாகனத்துக்கு ‘பாம்’ வைக்கிறானெண்டால் ஹான்ட்பேக்கிக்குள்ளேயும் ‘பாம்மா’? எவற்றை ஹான்ட்பேக்காயிருந்தாலும் ஆச்சரியப்படத் தேவையில்லை. எங்கட ஜனாதிபதியின்ர ஹான்ட் பேக்குக்குள்ளே ‘பாம்’ எண்ட செய்தியறிஞ்சாப் பிறகு நித்திரையே கெட்டுது போங்கோ!

எப்பவேனும் ஜனாதிபதி டீவியில வந்தால், நான் இப்ப உடன ஒரு ஏழெட்டடி பின்னால ‘ஜம்ப்’ பண்ணி கதிரை மேசைக்குப் பின்னால கவர் எடுத்தபடிதான் டீவி பாக்கிறனான். எதிலை ‘றிஸ்க்’ எடுத்தாலும் ‘பாம்’ விஷயத்தில் ‘றிஸ்க்’ எடுக்கக் கூடாது கண்டியளோ!

முந்தியும் ஒருக்கால் சினிமாப் படமொண்டில கவுண்டமணி இப்பிடித்தான் தேங்காய் விலை கூடிட்டுதெண்டு தேங்காய்க்குள்ள ‘பாம்’எண்டு கதை கட்டி விட்டது. இப்பவும் யாராவது ஹான்ட் பேக் விலை கூடிட்டுதெண்டுதான் இப்படியொரு புரளியைக் கட்டி வைச்சிருக்கிறாங்களோ தெரியாது.

எனக்கொரு டவுட்... என்னெண்டால் ஜனாதிபதிக்குத் தடிமல் கிடிமல் வந்து ஹான்ட் பேக்குக்குள்ளே ‘பாம்’ அதாவது தைலம் வைச்சிருந்து அதை எடுத்து மூக்குக்குப் பூசேக்க யாரும் கண்டிட்டு, அவர் ஹான்ட் பேக்குக்குள்ளே ‘பாம்’ (தைலம்) வைச்சிருக்கிறார் எண்டு விடுப்புக் கதைக்க, அந்த ‘பாம்’ இந்த ‘பாம்மா’ மாறி, கடைசியில ஒரு பெரிய அரசியல் வெடிகுண்டா மாறிப் போச்சுதோ தெரியல்லே.

அதால யோசிச்சிட்டன், இனி மேல்ப்பட்டு மூக்கால சளி ஒழுகோ ஒழுகெண்டு ஒழுகி னாலும் வெறும் விட்டமின் சீ ரெண்டை எடுத்து வாய்க்குள்ளை போட்டிட்டுப் போயிட வேணுமேயொழிய உந்த பாம் கீமையெல்லாம் பூசித் திரியற ஐடியாவைத் துண்டறக் கைவிட் டுப் போட வேணும். ஜனாதிபதியின்ர ஹான்ட் பேக்குக்குள்ளே பாம் எண்டால் அந்த ஹான்ட் பேக்குள்ள புகுந்தது ‘பாம்’ இன்ர குற்றம். ஆனால் எங்கள் யாரின்ரயும் ஹான்ட்பேக்குள்ளை ‘பாம்’ இருந்தால் அது அடுத்த கேள்வியில்லாமல் நாங்கள் கம்பிக்குப் பின்னாலதான்.

எல்லாஞ்சரி இந்த ‘பாம்’ விஷயம் கலக்கின கலக்கலால ஒரே குழப்பமாய்ப் போய்க் கிடக்கு. ஜனாதிபதியின்ர ஹான்ட் பேக்குள்ளே இருக்கிறது நிஜ ‘பாம்மா’? இல்லை அர சியல் ‘பாம்மா’? அப்பிடியொரு பாமே இல்லையா? இல்லாட்டில் அப்படியொரு புரளி ஏன் வந்தது?

அப்படி ‘பாம்’ இருக்கிறதெண்ட ஒரு புரளியையே யாரும் கதைக்கேல்லையா? அப்பிடிக் கதைக்காத ஒரு புரளியைக் கதைச்சதாச் சொல்லினமா? இல்லை கதைச்ச ஒரு புரளியைக் கதைக்கேல்லையெண்டு சொல்லினமா? எல்லாம் ஒரே குழப்பம்!

இந்தக் குழப்பத்துக்கு மத்தியில நகைச்சுவையும் நடக்குது. தான் தான் உலகத்தில தலைசிறந்த நடிகையெண்டு ஜனாதிபதி சொல்லுறா. நடிகர்கள் கனபேர் அரசியலுக்கு வந்திருக்கினம். இந்தியாவில எம்.ஜி.ஆர், என்.டி.ஆர், ஜெயலலிதா எண்டு நடிகர் மார் முதலமைச்சராவும் வந்திருக்கினம். ஏன் அமெரிக்காவில் றொனால்ட் றீகன் எல்லாம் நடிகரா இருந்து ஜனாதிபதியாக் கூட வந்திருக்கிறார். அதால எங்கட நாட்டில நடிகர் ஒருத்தர் ஜனாதிபதியா வந்தால் வியக்கத் தேவையில்லை. ஆனால் ஜனாதிபதி ஒருவர் நடிகராக ஆகிறதெண்டால் சம்திங் சேஞ்ஜ்!

சரி ஜனாதிபதிதான் தான் நடிக்க வேண்டியிருக்குதெண்டு சொன்னதுக்காக எங்கட நடிகர்மார் சில பேர் கெம்பினதப் பாத்தியளே. முந்தின அரசாங்கத்தில ஜனாதிபதியால வடக்கு கிழக்கு கவர்னரா இருந்த காமினி பொன்சேகா ஜனாதிபதி சினிமாத்துறையை அவமதித்துப் போட்டாரெண்ணுறார்.

இதுதான் எனக்குப் பிடிக்கேல்ல பாருங்கோ. தாங்கள் ஜனாதிபதி வேஷம் போட்டும் படத்தில நடிக்கலாம். அது ஜனாதிபதியையோ, நாட்டையோ அவமானப்படுத்தாது. ஆனால் ஜனாதிபதி, தான் நடிக்கிறதாச் சொன்னது மட்டும் சினிமாத் துறையை அவமதிக்குதாம். அவர் கவர்னரா இருக்கேக்க நடிகரா இருந்தாரோ, இல்லை கவர்னரா இருந்தாரோ எண்டு டவுட்டாத்தான் கிடக்குது. என்னயிருந்தாலும் ஜனாதிபதி தான்தான் சிறந்த நடிகருக்கான விருதுக்குரியவரெண்டு சொன்னதை நானும் ஏற்கப் போறதில்ல. ஏனெண்டால் இண்டைக்கு நிறையப் பேர் அவவ விடத் திறமா அரசியலில நடிக்கினம். முந்தி ஒரு கட்சியில இருந்து மற்றதைத் திட்டோ திட்டெண்டு திட்டிப் போட்டு இப்ப திட்டின கட்சிக்கே மாறிப்போய் நிண்டு கொண்டு பழைய கட்சியத் திட்டிற கெட்டித்தனம் எந்த நடிகருக்கு ஏலும் சொல்லுங்கோ.

முந்தி எதிரும் புதிருமாயிருந்த தமிழ்க் கட்சிகள் கூட்டெண்டு சொல்லிக் கொண்டு சேந்து போட்டு உள்ளுக்க இருந்தே ஒண்டுக்கொண்டு குத்து வெட்டுப் பட்டுக் கொண்டு வெளி உலகத்துக்கு ஒற்றுமையெண்டு காட்டிற நடிப்பு யாருக்கு வரும்?

புலிகளைத் திருப்திப் படுத்திறதுக்கு கூட்டங்களும் கோஷங்களும் நடத்திக் கொண்டு, இந்தியத் தூதுவராலயத்திலும் ஜனாதிபதியிட்டயும், இதுகள நாங்களாச் செய்யேல்ல, நிர்ப்பந்தத்தால செய்ய வேண்டியிருக்கெண்டு நீலிக் கண்ணீர் வடிக்கிறதும் பிறகு வெளி யால தாங்கள் அவையிட்டக் கண்டனம் தெரிவிக்கிறமெண்டு வீர வேஷம் போடுறதும் யாருக்கு வரும்? ஆனால் இந்த நடிகர்கள் எல்லாரும் மறந்து போயிருக்கிறது ஒண்டத்தான். சனத்துக்கும் நடிகத் தெரியும். ஒமோம்... உங்களுக்குத்தான் நாங்கள் ஆதரவெண்டு சொல்லிப்போட்டு வோட்டுக்களை மாறிப்போட்டிடுவினம். கவனம்!

யாவும் கலப்படமற்ற கற்பனை

---

# இந்தவாரம் உங்கள் பலன்

11.08.2002 தொடங்கி 17.08.2002வரை

## சோதிட மாமணி தில்லை

### கிரக நிலை

**கர்க்கடகம்** - சூரியன், செவ்வாய், வியாழன், **மிதுனம்** - சனி,
**கன்னி** - வெள்ளி, **விருட்சிகம்** - கேது, **இடபம்**- இராகு,
*சந்திரன் இடபம், மிதுனம், கர்க்கடகம், சிங்கம் இராசிகளில் இவ்வாரம் சஞ்சரிப்பார்.*

**மேடம்**
(அச்சுவினி, பரணி, கார்த்திகை முதற்கால்) தொழில் நிலையில் முன்னேற்றம். காரியானு கூலம். பொருள் வரவு. குடும்பத்தில் மகிழ்ச்சி ஏற்படும். உத்தியோகத்தர்களில் சிலர் பதவி உயர்வு களைப் பெறுவர். மாணவர்களுக்குக் கல்வி சிறப்பளிக்கும். விவசாயிகள், வியாபாரி கள் உரிய இலாபமடைவர்.
அதிஸ்ட நாள்: செவ்வாய்.
அதிஸ்ட இல.: 1.

**இடபம்**
(கார்த்திகை பின் முக்கால், ரோகிணி, மிருகசீரிடத்து முன்னரை) தொழிலில் சிறிது கஷ்டம். பணவரவு தடை. வீண் சிரமம். பிரயாணம் உண்டு. உத்தியோகத் தர்கள் கடின உழைப்புக்கு ஆளாகுவர். மாணவர்களுக்குக் கல்விச் சிறப்பு ஏற் படும். விவசாயிகள், வியாபாரிகள் எதை யும் திட்டமிட்டுச் செய்வது நன்மை தரும்.
அதிஸ்ட நாள்: வெள்ளி.
அதிஸ்ட இல: 6.

**மிதுனம்**
(மிருகசீரிடத்துப் பின் னரை, திருவாதிரை, புனர் பூசத்து முன்முக்கால்) எதிர்பார்த்த கருமங்களில் சிறு தடையுண்டாகும். பொருள் வரவு மந்தம். மறைமுக எதிர்ப்பு. பெரியோர் சகாயம். உத்தியோகத்தர்கள் மேலதி காரிகளால் தொல்லையுறுவர். மாண வர்களுக்குக் கல்வியில் குழப்பம். விவசாயி கள், வியாபாரிகள் குறைந்த இலாபம் பெறுவர்.
அதிஸ்ட நாள்: புதன்,
அதிஸ்ட இல.: 5.

**கர்க்கடகம்**
(புனர்பூசத்து நாலாங்கால், பூசம், ஆயிலியம்) தொழிலில் மறைமுக எதிர்ப்பு. வீண் செலவு. அன்னியரால் தொல்லை. புதிய முயற்சி. உத்தியோகத் தர்கள் பதவி மாற்றங்களைப் பெறு வர். மாணவர்களுக்குக் கல்வியில் வீண் தடைகள் உருவாகும். விவசாயிகள், வியா பாரிகள் குறைந்த இலாபம் பெறுவர்.
அதிஸ்ட நாள்: திங்கள்.
அதிஸ்ட இல.: 2.

**சிங்கம்**
(மகம், பூரம், உத்தரத்து முதற்கால்) எதர்பார்த்த கருமங்களில் வெற்றி. காரி யானுகூலம். கௌரவம், பெரியோர் உதவி யுண்டு. உத்தியோகத்தில் உள்ளோர் விழிப் புடன் நடந்து கொள்ளவும். மாணவர் களுக்குக் கல்வியில் இருந்து வந்த தடைகள் நீங்கும். விவசாயிகள், வியாபாரிகள் குறைந்த இலாபம் பெறுவர்.
அதிஸ்ட நாள்: திங்கள்.
அதிஸ்ட இல.: 2.

**கன்னி**
(உத்தரத்துப் பின் முக்கால், அத்தம், சித்திரையின் முன்னரை) தொழில் முயற்சிகள் பலிதம். பொருள் வரவு. காரியானுகூலம். பெரியோர் நட்பு. உத்தி யோகத்தில் உள்ளோர் எதிர்பார்த்த நன்மைகள் கிடைக்கும். மாணவர்களுக் குக் கல்வியில் உயர்ச்சியுண்டாகும். விவ சாயிகள், வியாபாரிகள் இலாபம் பெறு வர்.
அதிஸ்ட நாள்: புதன்.
அதிஸ்ட இல.: 5.

**துலாம்**
(சித்திரையின் பின்னரை, சுவாதி, விசாகத்து முன்முக் கால்) மனக்குறை நீங்கும். குடும்பத்தில் மகிழ்ச்சி நில வும். உத்தியோக ரீதியாக முன்னேற்றம் உண்டு. சிலர் பதவி உயர்வுகளைப் பெறுவர். மாணவர்களுக்குக் கல்வியில் இருந்து வந்த தடைகள் நீங்கும். விவ சாயிகள், வியாபாரிகள் மத்திம இலாப மடைவர்.
அதிஸ்ட நாள்: வெள்ளி.
அதிஸ்ட இல.: 6.

**விருட்சிகம்**
(விசாகத்து நாலாங்கால், அனுஷம், கேட்டை) தொழில் சிறப்புடன் பொருள் வரவுண்டாகும். பெரியோர் களின் உதவி யுண்டு. வெளியிட பிர யாணங்களைத் தவிர்த்துக் கொள்ளவும். உத்தியோகத்தில் எதிர்பார்த்த நன்மைகள் தடையாகும். மாணவர்களுக்குக் கல்வி சிறப்பளிக்கும். விவசாயிகள், வியாபாரிகள் நன்மையடைவர்.
அதிஸ்ட நாள்: செவ்வாய்.
அதிஸ்ட இல.: 7.

**தனு**
(மூலம், பூராடம், உத்தரா டத்து முதற்கால்) தொழி லில் சிறிது பிரச்சனை தோன்றும். பணவரவு, காரியானுகூலம் மந்தமடையும். பெரி யோர் உதவியுண்டு. உத்தியோகத்தில் முன்னேற்றம் உண்டாகும். மாணவர்கள் கல்வியில் கூடிய கவனமெடுப்பது நல்லது. விவசாயிகள், வியாபாரிகள் எதிலும் அக்கறையுடன் செயற்படவும்.
அதிஸ்ட நாள்: வியாழன்.
அதிஸ்ட இல.: 4.

**மகரம்**
(உத்தராடத்துப் பின் முக் கால், திருவோணம், அவிட் டத்து முன்னரை) தொழிலில் உயர்ச்சி யும், பணவரவும் சேரும். அன்னியர் உதவுவர். உத்தியோக ரீதியாக இருந்து வந்த தொல்லைகள் மறையும். மாண வர்கள் கல்வியில் கூடிய கவனமெடுப்பது நல்லது. விவசாயிகள், வியாபாரிகள் இலாபமடைவர்.
அதிஸ்ட நாள்: புதன்.
அதிஸ்ட இல.: 3.

**கும்பம்**
(அவிட்டத்துப் பின்னரை, சதயம், பூரட்டாதி முன்முக்கால்) செய் தொழில் விருத்தி. காரியானு கூலம். வெளியிடப் பயணம். செலவு மிகுதியுண்டு. பெரியோர் உதவியுண்டு. உத்தியோக ரீதியாக முன்னேற்றம் ஏற்படும். மாணவர்களுக்குக் கல்வியில் இருந்து வந்த தடைகள் நீங்கும். விவசாயிகள், வியாபாரிகள் மத்திம இலாபம் பெறுவர்.
அதிஸ்ட நாள்: திங்கள்.
அதிஸ்ட இல.: 2.

**மீனம்**
(பூரட்டாதி நாலாங்கால், உத் திரட்டாதி, ரேவதி) தொழிலில் மந்த நிலை. பணவரவு. கௌர வம். தேகாரோக்கியம் சிறிது பாதிப்பு. வீண் செலவு. அன்னியரால் தொல்லை. உத்தியோகத்தில் மறைமுக எதிர்ப்புத் தோன்றும். மாணவர்களுக்குக் கல்வியில் இருந்து வந்த தடைகள் நீங்கும். விவசாயிகள், வியாபாரிகள் இலாபமடைவர்.
அதிஸ்ட நாள்: வியாழன்.
அதிஸ்ட இல.: 1.





# தாக்குப் பிடிப்பாரா?

மாமனிதர் மா ஓ சேதுங்கைப் பற்றி அறியாதவர்கள் யாரும் இருக்கமாட்டார்கள். மக்கள் சீனக் குடியரசின் தந்தை என அழைக்கப்படுபவர் சீன மக்களுக்கு விடுதலை வேட்கையை விதைத்து விருட்சமாக வளர்த்ததுடன் சிவப்பு சித்தாந்தத்தையே அர்த்தப் படுத்தியவர். இன்று மட்டுமல்ல, பல நூற்றாண்டு காலம் மா ஓ சேதுங் இறந்தும் வாழ்வார் என்பது சீனர்களின் அபிப்பிராயம்.



சீனக் குடிமக்கள் அனைவரும் அவரை உளப்பூர்வமாக நேசிக்கின்றனர். சீன அரச இலச்சினைக்குச் சமமாக, எங்கும் அவரது உருவப்படங்கள். இப்போது சீனாவில் மிகப் பிரபலமாக ஒரு சிறிய சிவப்புப் புத்தகம் விற்பனையாகிறது. மா ஓ சேதுங் எழுதிய அந்தப் புத்தகம், விற்பனையில் சாதனை படைத்திருக்கிறது. மா ஓ வைப் பற்றி ஏராளமான நூல்கள் எழுதப்பட்டுவிட்டன. அவர் எழுதிய இந் நூல் அனைத்து நூல்களையும் விஞ்சிவிட்டது.

சீனா இன்று கொஞ்சம் கொஞ்சமாக நவீனத்துவம் அடைந்து வருகிறது. மேற்கத்தேய கலாசாரம் பொருளாதார சீர்திருத்தங்களோடு சீனாவுக்குள் உட்புகத் தொடங்கிவிட்டது. வர்த்தகம், முதலாளித்துவத்தால் சிறிது சிறிதாக விழுங்கப்பட்டு வருகின்றது. இந் நிலையில் நவீன கம்யூனிஸ ஸ்தாபகர்களின் புகழ் சீனாவில் தொடர்ந்து நிலைக்குமா? என்ற கேள்வி விமர்சகர்களால் எழுப்பப்படுகின்றது.

ரஷ்யாவில் கம்யூனிஸம் அழிந்தபோது லெனினின் சிலையும் சேர்த்தே அழிக்கப்பட்டது. சீனாவிலும் அப்படியான நிலை தோன்றுமா?









'செல்வாஸின் சல்வார்' பரிசுப் போட்டியில் அதிர்ஷ்டசாலியாக தெரிவு செய்யப்பட்ட கொழும்பு 15ஐச் சேர்ந்த செல்வி பவித்ராவுக்கு செல்வாஸ் நிறுவன அதிபர் எஸ். செல்வரட்ணம் அவர்கள் பரிசினை வழங்குகிறார்.

# இட நெருக்கடி

உலகிலேயே அதிகளவான சிறைக் கைதிகள் உள்ள நாடுகளின் வரிசையில் இரண்டாவது இடம் அமெரிக்காவிற்குக் கிடைத்திருக்கிறது.

அமெரிக்க நகரங்களில் நாளாந்தக் குற்றச் செயல்களுக்குக் குறைவேயில்லை. சில வருடங்களுக்கு முன்னர் வீதியோரக் கடைகளில் கைத்துப்பாக்கிகளைக் கொள்வனவு செய்ய முடிந்தது. ஆனால், வகைதொகையின்றிப் பரவிவிட்ட சட்டவிரோத ஆயுதங்களினால் கொலைகளும், பாரதூரமான குற்றச் செயல்களும் பரவலாக அதிகரிக்கவே உள்ளூர் ஆயுத விற்பனைகளை எதிர்த்துக் கடுமையான சட்டங்களை அமெரிக்க அரசு அறிவித்தது. ஆனால், ஏற்கனவே விற்பனையான கைத்துப்பாக்கிகளும், சிறிய ஆயுதங்களும் அமெரிக்க மக்களிடம் போதுமானளவு இருக்கிறது. அவை தவறானவர்களிடம் கிடைக்கும்போது குற்றச் செயல்கள் அதிகரிக்கின்றன என வாஷிங்டன் சமூக ஆய்வு அமைப்பொன்று தெரிவிக்கின்றது.



தற்பொழுது அமெரிக்கச் சிறைகளில் கடும் இடநெருக்கடி நிலவுகிறது. அங்குள்ள மிகப் பெரிய சிறைச்சாலைகளில் ஒன்றான ரெக்ஸ்ஸாஸ் மாநில ஹன்ஸ்விம் சிறையின் உட்புறத் தோற்றத்தையே இங்கு காண்கிறீர்கள்.

இப்பொழுது, அமெரிக்காவில் கிரிமினல் குற்றங்களுக்குக் கடுமையான தண்டனைகள் விதிக்கப்படுகின்றன. உலக நாடுகளில் மரண தண்டனையை அமுலாக்கக் கூடாதெனக் குரல் கொடுக்கும் சர்வதேச மன்னிப்புச் சபை உள்ளிட்ட பல மனித உரிமை அமைப்புக்கள் அமெரிக்காவில் இருந்தே செயற்பட்டு வருகின்றன. ஆனால், அமெரிக்காவில் மரண தண்டனை இன்னமும் அமுலில் இருக்கின்றது.



# இளமைத் துடிப்புடன்

ஜேர்மனியில் பிறந்த ஸ்டெபி கிராஃப் சர்வதேச டெனிஸ் வரலாற்றில் தோன்றிய மிகப் பெரிய சாதனையாளர்களில் ஒருவராவர். 1982 ம் ஆண்டு தனது 13வது வயதில் டெனிஸ் விளையாட்டை ஆரம்பித்த இவர் படிப்படியாக வளர்ந்து 1987 ம் ஆண்டு முதல்தர வீராங்கனையாக முடிசூடினார்.

தொடர்ந்து 374 வாரங்கள் உலக டெனிஸ் அரங்கில் தனது முதலிடத்தைத் தக்கவைத்துக்கொண்டவர் என்ற அடிப்படையில் ஸ்டெபி கிராஃப் கூடுதலான காலம் வெற்றி நாயகியாகத் திகழ்ந்தார். சியோல் ஒலிம்பிக் போட்டியில் ஜேர்மனிக்காகத் தங்கப்பதக்கத்தை வென்று கொடுத்த ஸ்டெபி கிராஃப் 1999 ம் ஆண்டு பிரான்ஸ் 'ஓப்பின் டெனிஸ்' பெண்களுக்கான ஒற்றையர் ஆட்டத்தில் வெற்றி பெற்றதோடு, டெனிஸ் போட்டிகளிலிருந்து ஓய்வு பெறுவதாக அறிவித்தார். 2000 ம் ஆண்டு ஆரம்பத்தில் பிரபல டெனிஸ் வீரர் அன்ரு அகாஸியுடன் காதல் வயப்பட்ட இவர், ஒரு குழந்தையைப் பெற்றெடுத்தபின், கடந்த வருடம் அகாஸியை மணமுடித்தார்.

# 1வது பிறந்தநாள் வாழ்த்து



14.08.2002

நெடுந்தீவு கிழக்கு 15ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த அரியநாயகம் சண்முகப்பிரியா தம்பதிகளின் செல்வப் புதல்வி அஸ்வினி தனது முதலாவது பிறந்தநாளை 14-08-2002 அன்று கனடாவிலுள்ள தனது இல்லத்தில் வெகு விமரிசையாகக் கொண்டாடுகின்றார்.

## எஸ். அரியநாயகம் அஸ்வினி

அஸ்வினியை கனடாவில் வசிக்கும் அன்பு அப்பா, அம்மா, கொழும்பு முகத்துவாரத்தில் வசிக்கும் அப்பம்மா, மாமா, அத்தை, மச்சான் பிரசாத், கிளிநொச்சியில் வசிக்கும் அம்மப்பா, அம்மம்மா, மாமா, மாமி, சித்தப்பா, சித்தி, அண்ணா, தம்பி, குட்டிமாமா, குட்டிச்சித்தி, பாட்டிமார், கனடாவில் வசிக்கும் பெரியப்பா, இந்தியாவில் வசிக்கும் பெரியம்மா, அக்காமார், அண்ணாமார், அமெரிக்காவில் வசிக்கும் பெரியப்பா, பெரியம்மா, அண்ணாமார், தம்பி மற்றும் உற்றார், உறவினர் அனைவரும் பல்கலையும் கற்று நீடூழி வாழ்கவென வாழ்த்துகின்றார்கள்.

தகவல்: சி. லீலாவதி (அப்பம்மா)
கொழும்பு - முகத்துவாரம்.



இப்பத்திரிகை கொழும்பு-06, வெள்ளவத்தை, நெல்சன் பிளேஸ், 8A ஆம் இலக்கத்தில் டி.டி. எண்டர்பிரைசஸ் (பிரைவேட்) லிமிடெட் ஸ்தாபனத்தால் பொரலஸ்கமுவவில் உள்ள சீ.பீ.டி. அச்சகத்தில் ஆக.11 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்படுகிறது.